www.tamilarangam.net

සරිනිහර්
'SARINIHAR
# சரிநிகர்
சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே - பாரதி

**அடலேறு வீரத்தின் அழகு!**

அன்றெல்லாம் நீங்கள் ஆயுதத்தை தூக்கிவந்து சென்றியிலே நிற்கையிலே தெரியவில்லை – கொன்று கடலோரம் வீசுகையில் கண்டுகொண்டோம் : இன்றும் அடலேறு வீரத்தின் அழகு!

– ஈழமோகம்

இதழ் 62 டிசெ.22 - ஜன.11, 1994 விலை7/=

## ● யுத்த நிறுத்தம் ● பாதை திறப்பு

# அரசு தரப்பின் இழுபறி?

தமிழ் ஈழ விடுதலைப்புலிகளுக்கும் அரசுக்கும் இடையிலான இரண்டாம் கட்டப் பேச்சுவார்த்தைக்கான திகதி ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்த போதும் திடீரென அரசதரப்பில் இம்முடிவு மாற்றப்பட்டு பேச்சுவார்த்தைக்கான திகதி பிற்போடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. முதலாம் கட்டப் பேச்சுவார்த்தையில் கலந்துகொண்ட திரு லயனல் பெர்னாண்டோ அவர்கள் தொடர்பாகவும் அரசுதொடர்பாகவும் புலிகளின் உத்தியோகபூர்வ வானொலியில் தெரிவிக்கப்பட்ட விமர்சனக் கருத்துக்களை தெளிவுபடுத்திக்கொண்ட பின்னரே பேச்சுவார்த்தையில் பங்குபற்றுபவர்கள் பற்றிய விபரங்களை அறிவிப்பதாக அரசுதரப்பில் அறிவிக்கப்பட்டுள்ளது.பேச்சுவார்த்தைக்கு இன்னமும் இரண்டொரு தினங்களே இருக்கும்போது இம்முடிவு எடுக்கப்பட்டபோதும் இறுதிக் கணம்வரை அரசதரப்பில் யார் யார் பேச்சுவார்த்தைகளில் பங்குபற்றுவார்கள் என்பது பற்றி எத்தகைய தீர்மானமும் எடுக்கப்படாத ஒரு நிச்சயமற்ற நிலையே நிலவியது. இப்பேச்சுவார்த்தையின் போது யுத்தத் தவிர்ப்பு நடவடிக்கைள் தொடர்பான விடயங்கள் பேசப்படும் என்பதனால் இராணுவ, அரசியல் அனுபவம் வாய்ந்தவர்கள் பேச்சுவார்த்தையில் கலந்து கொள்ள வேண்டும் என்று அரசு தரப்பில் கருதப்பட்டதென்றும் இதற்கிணங்க இப்பேச்சுவார்த்தையில் அரச இராணுவ அதிகாரிகள் சிலர் செல்லவிருப்பதாகவும் பேசப்பட்டது. அதேவேளை இப்பேச்சுவார்த்தையில் முன்னாள் வவுனியா இராணுவப் பொறுப்பதிகாரியும் தற்போதைய நடவடிக்கைகளுக்கான இயக்குனராக(operations Director) இருப்பவருமான பிரிகேடியர் தேவிந்த களுபானவும் கலந்து கொள்வார் எனவும் நம்பகமான தகவல்கள் தெரிவித்தன.

இதேவேளை முதல் கட்டப் பேச்சுவார்த்தையில் கலந்து கொண்ட லயனல் பெர்னான்டோ அவர்கள், சில நாட்களுக்கு முன் புலிகளால் வெளியிடப்பட்ட ஆசிரிய பதவிகள் தொடர்பான ஊழல் பற்றிய செய்தியொன்றில் தனது பெயரும் சம்பந்தப்படுத்தப்பட்டிருப்பதால் பேச்சுவார்த்தையில் கலந்து கொள்வதில் தயக்கம் காட்டுவதாகவும், ஜனாதிபதியின் செயலாளரும் முதல் கட்டப் பேச்சுவார்த்தையில் பங்குபற்றியவருமான பாலபட்ட பெந்தி அவர்கள் சுகயீனம் காரணமாக இப்பேச்சுவார்த்தையில் பங்குகொள்ள மாட்டார் எனவும் அரசதரப்பு வட்டாரங்கள் தெரிவித்திருந்தன.

நடக்கவிருந்த இப்பேச்சுவார்த்தையின் போது யுத்தநிறுத்த உடன்பாடு ஒன்று காணப்படுவது தொடர்பான விடயங்கள் பேசப்படும் பட்சத்தில் பின்வரும் முக்கிய விடயங்கள் ஆராயப்பட்டு இருதரப்பாரும் உடன்பாடு கொள்ளும் விதத்திலான ஒப்பந்தம் ஒன்று தயார் செய்யப்படலாம் என தாம் கருதுவதாக அரசதரப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

0 யுத்த நிறுத்தத்தின் பின் இருதரப்பு படையணிகள் நிலை கொண்டிருக்கும் எல்லைகளுக்கு இடையில் ஒரு யுத்த சூனியப் பிரதேசத்தை உருவாக்குதல். இந்த யுத்த சூனியப் பிரதேசத்தை கண்காணிப்பதற்கு இருதரப்பும் ஒப்புக்கொள்ளும் ஒரு நடுநிலையான கண்காணிப்புக் குழுவை நியமித்தல்.

0 போக்குவரத்துக்கான பாதை திறக்கப்படும் பட்சத்தில் இதில் இருதரப்பாரும் எவ்வாறு நடந்து கொள்வது என்பதையிட்டு ஒரு உடன்பாட்டுக்கு வரல். நிலக்கண்ணிகளை அகற்றல் புதிய நிலக்கண்ணிகள் புதைக்கப்படாமல் இருக்க உத்தரவாதம் அளித்தல் என்பனவும் இவை ஒழுங்காக நடைமுறைப்படுத்தப்படுவதை கண்காணித்தல் எவ்வாறு எனத் தீர்மானிப்பதும். உதாரணமாக ஆனையிறவின் ஊடான பாதை திறக்கப்பட வேண்டுமெனில் அப்பாதையின் வடக்குப் பக்கமாகவும், தெற்குப் பக்கமாகவும் ஏறத்தாழ பத்து மைல் வரையிலான நிலக்கண்ணி வலயங்களை (mine fields) செவ்வனே அகற்றினால் மட்டுமே போக்குவரத்து இடம்பெற முடியும். இது மிகச் சிக்கலான, கவனமாக மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கையாகும்.

0 தாக்குதல்களை நோக்கமாகக் கொண்ட பாரிய படையணி நகர்த்தப்படுவதைக் கண்காணித்தல்.

இவ்விடயங்கள் பேசப்பட்டு சரியான உடன்பாடு காணப்படும் பட்சத்திலேயே யுத்த நிறுத்தம் வெற்றிகரமாக அமைய முடியும் என்று இராணுவ வல்லுனர் அரசிற்குத் தெரிவித்திருப்பதாக அறியப்படுகிறது.

இதேவேளை இராணுவக் கட்டுப்பாட்டிலுள்ள பிரதேசங்களான வவுனியா, மட்டக்களப்பு பிரதேசங்களில் புலிகளும் இராணுவத்தினரும் எவ்வாறு நடந்து கொள்வது என்ற பிரச்சினையை இராணுவ உளவுத்துறைப் பிரிவினர் கிளப்பியிருப்பதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. குறிப்பாக யுத்த நிறுத்த சூழல் ஒன்றின் போது புலிகள் இவ் இராணுவக் கட்டுப்பாட்டிலுள்ள பிரதேசங்களுக்கு வருவதை அனுமதிப்பதா?, அவர்கள் ஆயுதங்களுடன் வந்தால் என்ன செய்வது? இது குறித்து பிற தமிழ் குழுக்கள் எத்தகைய நிலைப்பாட்டை எடுக்கப் போகின்றன என்பவையே இவ்விடத்தில் கிளப்பப்பட்ட பிரச்சினைகளாகும்.

எனவே இவைதொடர்பான நடைமுறை விபரங்களை உள்ளடக்கிய ஆவணம் ஒன்று தயாரிக்கப்படுவதும் அதில் இருதரப்பாரும் கைச்சாத்திடுவதும் அவசியம் என்றும், இவ்வாவணத்தில் சேர்க்கப்பட வேண்டிய விடயங்கள் தொடர்பாக புலிகளுடன் விவாதிப்பதில் அனுபவம் வாய்ந்தவர்கள் பங்குபற்ற வேண்டும் என்றும், இப்பணிக்கு பொருத்தமானவர்களாக யார் யார் அனுப்பப்படலாம் என்ற இறுதித் தீர்மானம் இன்னமும் தெளிவாக எடுக்கப்படவில்லை என்றும் அவ்வட்டாரங்கள் தெரிவித்திருந்தன.

ஆயினும் மேற்குறிப்பிட்ட புலிகளின் வானொலிச் செய்திக்கு அப்போது அரசுதரப்பில் அவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருக்கவில்லை. பேச்சுவார்த்தையின் போது பேசப்படவுள்ள விடயங்களின் முக்கியத்துவம் மற்றும் பொருத்தமான பிரதிநிதிகளை தெரிவு செய்வதில் உள்ள சிக்கல் என்பனவே பெயர்பட்டியலை செஞ்சிலுவைச் சங்கத்திடம் கையளிப்பதில் ஏற்பட்ட தாமதத்திற்கு உண்மையான காரணமாகும்.

ஆக,அரசுதரப்பினருக்கு தேவைப்பட்ட ஒரு கால அவகாசத்திற்கு புலிகளின் இச்செய்தி வாய்ப்பாக அமைந்துவிட்டதென்று அரசியல் அவதானிகள் கருத்து தெரிவிக்கின்றனர்.

**சந்திரிகா அரசுக்கும் -**
**'சறுக்கியது சாட்டோ'?**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# புல்மோட்டை: பழிவாங்கப்படும் முஸ்லிம்கள்!

பாதுஷா

அண்மையில் திருமலை மாவட்டத்தைச் சேர்ந்த புல்மோட்டைக் கிராமத்தில் ஒரு பொலிஸ் உத்தியோகத்தர் புலிகளால் சுட்டுக் கொல்லப்பட்டதற்கு பழிவாங்கும் முகமாக அங்குள்ள முஸ்லிம்களின் கடைகளும், உடைமைகளும் தாக்கப்பட்டுள்ளன. தாக்குதலில் ஈடுபட்ட பொலிஸார் சுமார் ஏழு கடைகளைச் சேதப்படுத்தி 35 லட்சம் ரூபா வரையான அக்கடையிலிருந்த பொருட்களை நாசமாக்கியதுடன் மூன்று பெண்கள் உட்பட இருபத்தியிரண்டு பேரைக் கைது செய்து சிறையில் அடைத்துமுள்ளனர். கைதானவர்களில் அவ்வூர் கிராம சேவகரும் அடங்குவார். இவர்கள் அனைவரும் இரண்டு தொடக்கம் ஏழுநாட்கள் வரை சிறை வைக்கப்பட்டு பின்னர் விடுவிக்கப்பட்டுள்ளனர். அதிலும் மூவர் இன்னும் விடுவிக்கப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

திருகோணமலை மாவட்டத்தின் எல்லைப்புறக் கிராமமான புல்மோட்டைப் பிரதேசத்தில் இடம்பெற்ற மேற்படி தாக்குதல் சம்பவம் தொடர்பான செய்திகளுக்காகச் சென்றிருந்தோம். ஒரு துருவப் பிரதேசம் போல் அந்நியப்பட்டிருக்கும் புல்மோட்டைக் கிராமத்தின் பாதுகாப்பற்ற தன்மை, போக்குவரத்துக் கஷ்டம், அண்மையில் இடம்பெற்ற சம்பவத்தின் பின்னால் ஏற்பட்டிருக்கும் ஒருவகைப் பதட்டமான நிலைமை என்பவற்றால் சம்பவம் நடைபெற்ற இடத்துக்குச் செல்லமுடியாத துர்திர்ஷ்ட நிலையினை எதிர்கொண்டோம்.

புல்மோட்டையில் இருந்து ஏழு மைல் முன்னாலுள்ள பிரதேசமான 10ம் கட்டை ராணுவ மூகாமுடன் எமது பயணம் தடைப்பட்டாலும், புல்மோட்டையைச் சேர்ந்த சிலரை சந்தித்துப் பல விடயங்களைத் தெரிந்து கொண்டோம்.

திருகோணமலை, முல்லைத்தீவு, அனுராதபுரம் ஆகிய மூன்று மாவட்டங்களின் எல்லையோரத்தில் அமைந்திருக்கும் புல்மோட்டைக் கிராமமானது (கிழக்குப் பிராந்தியத்தின் ஓர் எல்லையாகவும் இது உள்ளது.) 92 சதவீதத்திற்கும் அதிகமான முஸ்லிம் சனத்தொகையைக் கொண்டுள்ளது. இலங்கையின் முக்கிய கனிப் பொருட்களில் ஒன்றான 'இல்மனைட்' தொழிற்சாலை இப்பிரதேசத்தில் இருப்பது குறிப்பிடத்தக்கது.

திருகோணமலை மாவட்டத்தின் மூவின மக்களினதும் சமனான எண்ணிக்கையிலிருந்து முஸ்லீம் மக்களைக் குறைத்துக் காட்டுவதற்காக இப்பிரதேசத்தை முல்லைத்தீவு, அனுராதபுர மாவட்டங்களுடன் இணைக்கும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டிருந்தன என்பது குறிப்பிடத்தக்கது. சிங்கள மக்களின் ஆதிக்கத்தை ஏற்படுத்துவதற்காக சில குடியேற்றங்களை ஏற்படுத்த முனைந்ததும், அதனை அனுராதபுரம் மாவட்டத்தின் ஒரு சிங்களக் கிராமமாக மாற்றும் நோக்குடன் 'கணிதபுர' என்ற பெயர் மாற்றம் செய்யவும் முழு முயற்சி எடுக்கப்பட்டது பழைய கதை.

அன்று திருமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினராக இருந்த திரு.சம்பந்தன் அவர்கள் தலையிட்டு இதனைத் தடுத்து நிறுத்தியதை பலர் நன்றியுடன் நினைவு கூர்ந்தார்கள். புல்மோட்டை முஸ்லீம் மக்களின் ஆதரவைப் பெற்றவர் என்று பொதுவாக எல்லோராலும் அறியப்படுகிறார் திரு.சம்பந்தன் அவர்கள்.

புல்மோட்டை திருகோணமலை மாவட்டத்தைச் சார்ந்ததாக இருப்பினும் அதன் நிர்வாக அலகுகள் வெவ்வேறு மாவட்டங்களுடன் தொடர்புபட்டிருக்கிறது. உதாரணமாக புல்மோட்டை பொலிஸ் நிர்வாகப் பிரிவு அனுராதபுரம் மாவட்டத்துடன் தொடர்புற்றிருக்கிறது. அதேபோல் தற்போதைய புல்மோட்டைக்கான ஒரே போக்குவரத்தான பஸ் சேவை அனுராபுர மாவட்டத்தின் கெப்பிடகொல்லாவ டிப்போவினாலேயே மேற்கொள்ளப்படுகின்றது. அது பெரும்பான்மையரின் ஆதிக்கத்திற்குட்பட்டிருப்பதால் முஸ்லீம் பிரதேசமான புல்மோட்டைக்கான போக்குவரத்துச் சேவையில் கரிசனையற்றிருப்பதை நேரடியாகக் கண்டு கொள்ள முடிந்தது. கொழும்பிலிருந்தும், அனுராதபுரத்திலிருந்தும் புல்மோட்டைக்கு அண்மையில் ஆரம்பிக்கப்பட்ட பஸ்சேவை அண்மைய சம்பவத்தின் பின் சீரற்றுக் காணப்பட்டது. அவை தடைப்பட்டாலும் புல்மோட்டை செல்வதற்கான குறைந்தளவு சேவையினை மேற்கொண்டு வந்த கெப்பிடி கொல்லாவ பஸ்சேவையும் தடைப்பட்டிருந்தது. பல மைல்கள் கடந்து வந்து ஒரு சில மைல்கள் கடந்து ஊர் செல்ல முடியாமல் மக்கள் தவித்து நிற்கையில், டிப்போவைச் சேர்ந்த 3 பஸ்வண்டிகள் இல்மனைட் தொழிற்சாலை ஊழியர்களின் சுற்றுப் பிரயாணத்திற்காக வழங்கப்பட்டிருந்தது.

பெரும்பான்மையாக முஸ்லீம்களைக் கொண்டிருக்கும் புல்மோட்டையின் முக்கிய ஒரே தொழிற்சாலையான இல்மனைட் தொழிற்சாலையில் சிங்களவர்களே அதிகளவான தொழிலாளர்களாக இருப்பதாகவும்; அதன் நிர்வாக, உயர்மட்ட அலுவலக வேலைகள் அனைத்திலும் சிங்கள மக்களின் ஆதிக்கமே இருப்பதாகவும் புல்மோட்டையைச் சேர்ந்த மிஹ்ழார் என்பவர் தெரிவித்தார்.

சொந்த ஊருக்குச் செல்ல பஸ்ஸின்றி, லொறிகளில் மக்கள் அடைபட்டுச் சென்றதையும், உல்லாச ஆரவாரங்களுடன் மூன்று பஸ்வண்டி நிறைய புல்மோட்டையிலிருந்து இல்மனைட் தொழிலாளர்கள் வந்ததையும் நேரில் பார்க்க முடிந்தது.

திருகோணமலை நகரிலிருந்து சுமார் 35 கிலோமீற்றர் தூரமளவில் இருக்கும் புல்மோட்டை பயணப்பாதை 'பயங்கரவாதப் பிரச்சனைகளால்' தடைப்பட்டுள்ளது. அதிலும் 27 கிலோமீற்றர் தூரமளவுக்கு பாதுகாப்பான பஸ்சேவை இடம்பெறுவதாகவும், மிகுதியான தூரத்தைக் கடந்து புல்மோட்டை வரும் வரையிலான பாதையை 'சூன்யப் பிரதேசமாக்கி' மக்களைக் கஷ்டப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள் இராணுவத்தினரும் புலிகளும் என்றும் ஒருவர் ஆதங்கப்பட்டார். திருகோணமலையிலிருந்து 10 கிலோமீற்றர்களுக்கும் அதிகமான தூரத்தைக் கடந்து செல்ல முடியாது. 150கிலோ மீற்றரருக்கும் அதிகமான தூரத்தை கடந்து செல்ல வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்கு உட்பட்டிருக்கின்றனர் அம்மக்கள்.

புல்மோட்டையின் எல்லையோரக் காட்டுப் பிரதேசங்களில் இருக்கும் புலிகளுக்கு எல்லைப்புறத்தில் இருக்கும் முஸ்லீம்கள் உதவி செய்கிறார்கள் என்று இராணுவத்தின் மத்தியில் பரவலாகக் கருதப்படுகிறது. இதனால் புல்மோட்டையை அண்டிய பகுதிகளைக் கடப்பதற்கான பாதைகள் தடைசெய்யப்பட்டிருக்கின்றன. போக்குவரத்து நடைபெறும் ஒரேபாதையான கெப்பிடி கொல்லாவ -புல்மோட்டைப் பாதையும் இராணுவத்தின் பலத்த பாதுகாப்பின் கீழுள்ளது. இப்பாதையில் சுமார் நான்கு தடை முகாம்கள் உள்ளன. 10ஆம் கட்டை என்ற இடத்தில் இராணுவ, பொலிஸ் கூட்டு முகாம் ஒன்று உள்ளது. இங்கு அதிகமான கெடுபிடிகள் நிகழ்வதாகவும், மக்கள் கடுமையான சோதனைகளுக்குட்படுவதாகவும் சில அத்தியாவசியப் பொருட்கள் கூட குறிப்பிட்டளவுக்கு மேல் கொண்டு செல்லமுடியாத தடை இருப்பதாகவும் அறியமுடிகிறது. இப்போதும் பற்றரி, தீப்பெட்டி ஆகியன தடைசெய்யப்பட்ட பொருட்களாக இருக்கின்றன. ''தாண்டிக் குளத்தை விட மோசமானதுதான் இந்தத் தடைமுகாம்'' என்று ஒருவர் விசனப்பட்டார்.

இவ்வாறு பல கஷ்டங்களுக்கு முகம் கொடுத்துக் கொண்டிருக்கும் புல்மோட்டைப் பிரதேசம் ஓர் ஒதுக்கப்பட்ட பிரதேசமாகவே இருக்கிறது. ''அறியப்படாத பிரதேசமாக இருக்கும் இவ்வூரின் வெளித் தொடர்புகள் கூட செயலற்று இருக்கின்றன.

எந்தப் பிரச்சினைகள் ஏற்பட்டாலும் அதற்குள்ளேயே முடித்துக் கொள்கின்ற நிலையில் அவ்வூர் இருக்கிறது. அண்மையில் இடம்பெற்ற சம்பவமும், அதையொட்டி மேலிடங்களுக்கு முறைப்பாடு செய்தமையும் புல்மோட்டை முஸ்லீம்களையே மிகவும் பாதித்துள்ளதாகத் தெரிகிறது. எந்நிலைமை ஏற்பட்டாலும் ஊருக்குள் தீர்த்துவிடுகின்ற நிலைமையும் ஏனைய தலையீடுகளுக்கு முகம் கொடுத்துப் போகும் தன்மையிலேயே அவ்வூர் மக்கள் வாழ்ந்து வருகின்றனர்.

''இந்தப் பிரச்சினையை மேலே இழுத்துச் செல்லாமல் இங்கேயே முடித்திருக்கலாம். என்ன இருந்தாலும் இவ்வூர் மக்களும் பாதுகாப்புப் படையினரும் தான் நிரந்தரமாக அதிக காலத்திற்கு இருக்கக்கூடியவர்கள், அரசியல்வாதிகள் நிரந்தரமானவர்களல்ல. தங்களை இனங்காட்டிக் கொள்வதற்காய் இதையெல்லாம் தூக்கிப் பிடிக்கிறார்கள். பாதிக்கப்படுவது இங்கிருப்பவர்கள் தான்'' என்று அவ்வூர்வாசியொருவர் தெரிவித்தார்.

பத்தாம் கட்டை வரையிலான பயணத்தில் முஸ்லீம்கள் சிங்களப் பகுதி மக்களுக்கு பயந்து வாழக்கூடிய ஒரு நிர்ப்பந்த நிலையில் இருப்பதைக் காணக்கூடியதாக இருந்தது. திருகோணமலையுடனும், முல்லைத்தீவுடனும் தொடர்புற்ற தமிழ் பேசும் பிரதேங்களின் அந்நியப்பட்ட நிலைமை எல்லாவகையான அடக்குமுறைகளுக்கும், ஆதிக்கங்களுக்கும் இவர்களை பணிந்து போகச் செய்துள்ளது. இல்மனைட் தொழிற்சாலை நிலைமைகளை இதற்கு உதாரணமாகச் சொல்லலாம். விஜிதபுர என்ற ஒரு சிங்களக் குடியேற்றத்தை ஏற்படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதையும் ஒருவர் சுட்டிக் காட்டினார்.

திருகோணமலை புல்மோட்டை பயணப்பாதையின் செயற்பாட்டின்மை காரணமாக புல்மோட்டைப் பிரதேச மாணவர்களது கல்வி நிலைமையும் மிகவும் பாதிப்புக்குள்ளாகியுள்ளது. முன்பு உயர்கல்வி, மற்றும் மேலதிக கல்விகளுக்காக புல்மோட்டை மாணவர்கள் திருகோணமலை வந்து கற்கும் சூழல் இருந்தது. இப்போது ஏற்பட்டிருக்கும் கஷ்டமான சூழலில் கல்வி உட்பட திருமலை மாவட்டத்துடன் தொடர்புற்ற அனைத்து நடவடிக்கைகளும் செயலற்றுப் போயுள்ளன. ''சம்பந்தன் இம்முறை எம்.பியாக வந்திருந்தால் புல்மோட்டைப் பாதையை நிச்சயமாகத் திறந்திருப்பார்'' என்று பழைய நினைவுகளுடன் கூறினார் அப்துல் மஜீத் என்ற உள்ளூர் சுகாதாரத் திணைக்கள ஊழியர் ஒருவர்.

புல்மோட்டைப் பிரதேசம் பற்றிய மேற்குறித்த தகவல்களுடன் அண்மையில் நடைபெற்ற சம்பவம் பற்றியும் பல தகவல்களைப் பெற முடிந்தது. தனியாருக்குச் சொந்தமான லொறியொன்றில் சாரதியாகக் கடமையாற்றும் ஏ.ரபாய்தீன் என்பவர் சம்பவம் பற்றி விளக்கிக் கூறினார்.

சைக்கிளில் சிவில் உடையில் சென்று கொண்டிருந்த இரு பொலிஸார் மீது, சைக்கிளில் வந்த புலிகள் சுட்டிருக்கின்றனர். அதில் ஒருவர் கொல்லப்படவே ஆத்திரமடைந்த பொலிஸார் அங்குள்ள முஸ்லீம்களின் சில உடமைகள் மீது தாக்குதல் நடத்தியும், சிலரைக் கைது செய்துமுள்ளனர். பொலிஸார் முஸ்லீம்கள் மீது தாக்குதல் நடத்துவதற்குக் காரணம், அங்குள்ள முஸ்லீம்கள் புலிகளுக்கு உதவுகிறார்கள் என்று பொதுவாக நிலவும் அபிப்பிராயமா

→16

## மாணவர் விடுதிப் பிரச்சினை

## கையை விரிக்கும் கல்வி அமைச்சர்



கொழும்பு பல்கலைக்கழக மாணவர்கள் கடந்த எட்டு நாட்களாக அரசாங்கத்தின் கலாசார தகவல் திணைக்களம் இயங்கிவரும் கட்டிடங்களுக்குள் பிரவேசித்து அதை தமக்கு விடுதியாக மாற்றித்தரும்படி அரசாங்கத்திற்கு கோரிக்கை விடுத்து, சுழற்சி முறையிலான உண்ணாவிரதத்தை மேற்கொண்டு வருகின்றனர்.

பல்கலைக்கழகத்திற்குச் சொந்தமான இக் கட்டிடத்தை எமக்குவிடுதியாக மாற்றித் தரும் வரை எமது போராட்டம் தொடரும் என மாணவர்கள் தெரிவிக்கின்றனர். இப்பிரச்சினை தொடர்பாக மாணவர் தலைவர்கள் கல்வி அமைச்சர் ரிச்சட் பத்திரனவை சந்தித்தபோது, 'அவர் மாணவர்களுடைய கோரிக்கை நியாயமானது அவர்களுக்கு விடுதி வசதிகள் இல்லை என்பதும் உண்மை. இக் கட்டிடம் அவர்களுக்கே (பல்கலைக்கழகத்துக்கே) சொந்தமானது எனவும் கூறியதாக மாணவ தலைவர் ஒருவர் எம்மிடம் தெரிவித்தார். அப்பொழுது அருகில் இருந்த இன்னொரு மாணவர், எம்முடன் இப்படிக் கூறிவிட்டு, அரசாங்கத்திற்கு அவர் என்ன சொல்லுகிறாரோ தெரியாது எனக் கூறினார்.

இக்கட்டிடத்திற்குப் பதிலாக மூன்று கட்டிடங்களை கல்கிஸ்ஸ , இரத்மலானை, றீட் அவெனியு போன்ற இடங்களில் தற்காலிக விடுதி வசதி செய்து தருவதாகவும் இக் கட்டிடத்தை விட்டுப் போகும் படியும் கல்வி அமைச்சு அறிவித்துள்ளதாகவும் மாணவர்கள் மேலும் தெரிவிக்கின்றனர். ஆயினும் இந்த உடன்பாட்டை தாம் ஏற்கவில்லை எனவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

இதே வேளை, இப்பிரச்சினைக்கான தீர்வு எமது சக்திக்கு அப்பாற்பட்டது என கல்வி அமைச்சரால் கூறப்பட்டதாகவும் இக் கட்டிடத்தை விட்டுப் போகும் வரை, ஜனாதிபதி பேச்சுவார்த்தை எதிலும் கலந்து கொள்ள மாட்டார் என ஜனாதிபதி செயலகம் அறிவித்ததாகவும் தெரியவருகிறது.

முன்னைய அரசாங்கத்தால், கீகரிஸ் வீதியில் உள்ள இடம் ஒன்று அதன் பெறுமதியிலும் பார்க்க பல மடங்கு குறைத்து, சர்வதேச பாடசாலை ஒன்றுக்கு விற்கப்பட்டுள்ளது. அந்த இடத்தை பல்கலைக்கழக விடுதியாக செயற்படுவதற்கு கொடுத்துள்ளதாக, படத்துடன் ரூபவாஹினி செய்தியில் இந்த அரசாங்கம் அறிவித்தது. இதில் எதுவிதமான உண்மையும் இல்லை என கிடைக்கும் தகவல்களில் இருந்து தெரியவருகிறது.

இப்பல்கலைக்கழகத்தில் உள்ள சுமார் 782 மாணவர்களுக்கே நிரந்தரமான விடுதி வசதி உள்ளது. மேலும் சுமார் 720 மாணவர்களுக்கு தற்காலிக விடுதி வசதியே உள்ளது. விடுதி வசதி இல்லாமல் சுமார் 6000 மாணவர்கள் வரை உள்ளனர் என மாணவர் தலைவர் ஒருவர் தெரிவித்தார்.

இந்த நிலையில் பல்கலைக்கழகத்திற்குச் சொந்தமான கட்டிடத்தை திருப்பித்தா என மாணவர்கள் கேட்பது நியாயமான கோரிக்கையாகவே தோன்றுகிறது.


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# இன சமரசம் – ஒரு ஜனநாயகக் கனவு!

நாசமறுப்பான்





புதிய அரசாங்கம் பதவிக்கு வந்த நான்கு மாதங்களிலேயே பல நெருக்கடிகளை எதிர்நோக்க வேண்டி வந்துள்ளது. தொடர்ச்சியான வேலை நிறுத்தங்கள் இவற்றில் பிரதான இடம் பிடித்துள்ளன. ஜனநாயகத்தையும் சமாதானத்தையும் மீளக்கொண்டுவரும் என எதிர்பார்த்து வாக்களித்தவர்கள் அவற்றை அரசிடம் எதிர்பார்ப்பது நியாயமே. கடந்த 17 வருட காலமாக நிலவிவந்த தொழிலாளர் மீதான சட்டரீதியான கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டதும், புதிய அரசாங்கம் தமது பிரச்சினைகளுக்கு செவி கொடுக்கும் என்ற நம்பிக்கையுடன் தொழிலாளர்கள் வேலைநிறுத்தத்தில் குதித்துள்ளனர். சம்பள உயர்வு, போனஸ் போன்றவற்றை கோருவதுடன் கூடவே தொழிற்சங்கங்கள் தமது பலத்தைக் காட்டவும் இச்சந்தர்ப்பத்தை பயன்படுத்துகின்றன.

புதிய அரசாங்கம் தேர்தல் காலத்தில் வெளியிட்டு வந்த ஜனநாயக முழக்கங்களை, நாட்டின் அனைத்து மக்களது ஆதரவையும் திரட்ட முன்வைத்த கருத்துக்களை இப்போது நடைமுறைப்படுத்த வேண்டிய நிலையில் உள்ளது. ஒரு எதிர்க்கட்சிக்கு உள்ள வாய்ப்பு, அது நாட்டுமக்களின் எல்லா வர்க்கப்பிரிவினரது குரலையும் எந்த வித முரண்பாடுமின்றி பிரதிபலிக்க முடிவதுதான். வாக்கு வேட்டையை நோக்கமாகக் கொண்டு அது தொழிலாளர், விவசாயிகள் முதல் பெரும் முதலீட்டாளர் வரை அனைவரது நலன்கள் பற்றியும் பேசமுடியும். தேர்தலுக்கு முன் பொ.ஐ.மு. அதைத்தான் செய்தது. ஆனால் ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றிய பின் இவ்வாறு பேசுவது சாத்தியமாவதில்லை. அரசு தான் எந்த மக்கட்பிரிவின் நலனை முதன்மைப்படுத்தி அல்லது பிரதிநிதித்துவப்படுத்தி இயங்குகிறேன் என்பதை தெளிவாக இனங்காட்டியாக வேண்டிய நிலை ஏற்படுகிறது. தொழிலாளர்களது நலன்களும் முதலாளிகளின் நலன்களும் ஒருபோதும் ஒன்றாக முடியாதவை என்பது வெளிப்படையானது. ஆனால், அரசாங்கம் தொழிலாளர்கட்கும் முதலாளிகட்கும் இடையில் நின்று சமரசத்தைப் பேணும்முகமாக ஒரு 'தொழிற்றுறை சமாதானத்தை' (Industrial Peace) ஏற்படுத்த முயல்கிறது. இந்த நில்லை ஒரு தற்காலிக இணக்கப்பாட்டை மட்டுமே ஏற்படுத்துகிறது. வர்க்க சமூகத்தின் நியதியாக இருக்கும் **சமமற்ற** அல்லது **அசமத்துவ** நிலை இத்தகைய சமரசத்தால் இல்லாது போய்விடுவதில்லை.

அரசு 'தாராளவாத ஜனநாயகத்தை' தனது கோட்பாடாக கொண்டு செயற்படும் போது இந்த சமரசம் தற்காலிகமான அமைதியை பேணுவதற்கான வாய்ப்பைத் தருகிறது. பொ.ஐ.மு.தேர்தலுக்கு முன் எழுப்பிய ஜனநாயக கோஷங்கள் மக்களுக்கு, தமது சொந்த ஜனநாயகத்தை பாதுகாக்க உருவாக்கப்படும் அரசு என்ற நம்பிக்கையை ஏற்படுத்தி விட்டிருந்தன. இதனால் அவர்கள் தமது ஜனநாயக உரிமைகளை பரீட்சித்துப் பார்க்க முயல்கிறார்கள். ஆனால் இந்த அரசாங்கம் அனைத்து வர்க்கங்கட்குமிடையில் தற்காலிக அமைதியைப் பேணும் தாராளவாத ஜனநாயகத்தையே நடைமுறைப்படுத்துவது சாத்தியம் என்பதால் இத்தகைய பரீட்சித்துப் பார்த்தல்களின் போது மக்களுக்கும் அரசுக்குமிடையில் முரண்பாடுகள் பலமாக வெடிக்கின்றன. ஏனென்றால் நடைமுறையில் தாராளவாத ஜனநாயக கோட்பாடுகள் ஆளுகின்ற வர்க்கத்தையே பிரதிநிதித்துவப்படுத்துடன் அரசை நடுநிலையான ஒன்றாக மக்களை நம்பவைக்கவே பயன்படுகின்றன. உண்மையில் இந்த நம்பிக்கைகள் தீர்மானகரமான கட்டங்களில் தகர்ந்து போகின்றன.

எவ்வாறெனினும், திறந்த பொருளாதாரக் கொள்கைக்கும் பரந்துபட்ட மக்களது ஜனநாயக வாழ்வுக்கும் இடையில் நிலவும் முரண்பாடுகளுக்கிடையில் சமரசத்தை பேணுவதில் வெற்றி பெறுவதில்தான் இந்த அரசின் இருப்பு தங்கியிருக்கின்றது.

இதேவேளை, சமாதான முயற்சிகள் பற்றியும் ஜனநாயகம் பற்றியும் ஜனநாயக புத்திஜீவிகள் மத்தியிலும் பரவலான எதிர்பார்ப்பு நிலவுவதை காணமுடிகிற்து. இந்த தேர்தல் முடிவுகள் இனவாதத்திற்கு கிடைத்த மரண அடி என்றும் நாட்டில் ஜனநாயக நிலைமை உருவாகியுள்ளதால், அதைப் பலப்படுத்துவதற்கும் சமாதானம் வெற்றிபெறச் செய்வதற்கும் தீவிரமாக உழைப்பது ஒவ்வொருவரதும் கடமை என்றும் அவர்கள் கூறுகின்றார்கள்.

முன்னெப்போதும் இல்லாதவாறு ஜனநாயகவாதிகளின் இந்தக் குரல் மிகவும் பலமாக ஓங்கி ஒலிக்கிறது.

கடந்த்கால ஐ.தே.க.கவின் ஆட்சி முறைக்கும் இன்றைய பொ.ஐ.மு வின் ஆட்சிமுறைக்கும் இடையில் உள்ள வேறுபாட்டை அவர்கள் சுட்டிக் காட்டுகின்றனர்; அன்றிருக்காத பத்திரிகை சுதந்திரம், மனித உரிமைகள் பேணப்படல், மற்றும் சமாதான முயற்சிகள் இன்று நிலவுவதையிட்டு அவர்கள் திருப்திப்பட்டு கொள்கிறார்கள்; மக்களது நலன் பேணும் அரசாங்கம் உருவாகியிருப்பது குறித்து, அதை உருவாக்குவதில் தாம் ஆற்றிய பங்கு குறித்து பெருமைப்பட்டுக்கொள்கிறார்கள்.

இவை நியாயமானவைதான். ஐ.தே.க. ஆட்சிக்காலத்தை விட இப்போது சுதந்திரக்காற்றை சுவாசிக்கும் வாய்ப்பு உருவாகியிருப்பதும் உண்மைதான்; யாரும் மறுக்க முடியாது. படுகொலைகளும், அதிகார மோசடிகளும் கட்டுப்படுத்தப்பட்டிருப்பதை யாரும் மறுப்பதற்கில்லை; ஒவ்வொருவரும் சந்தோசப்படும் நடவடிக்கைகள்தான் இவை.

ஆனால், இந்த உணர்ச்சி வேகத்தில் ஜனநாயகவாதிகள் தாம் உச்சரிக்கும் ஜனநாயகம், சமாதானம் என்பவற்றின் அடிப்படைகளையே பல தடவைகளில் மறந்து விடுகிறார்களோ என்று தோன்றுகிறது.

யுத்தம் நிறுத்தப்பட்ட ஒரு சூழலை சமாதானம் என்று ஏற்றுக்கொள்ளும் போது அந்த சமாதானத்திற்கு அற்பாயுசு மட்டுமே இருக்கிறது என்பதை இவர்கள் காணத் தவறி விடுகிறார்கள். அண்மையில் ஜனாதிபதிக்கும், புலிகளுக்கும் 'சமாதானம்; ஆம் ஜனநாயகத்துடன்' என்ற தலைப்பிட்ட மகஜர்களை கையளித்த சமாதான விரும்பிகளின் அறிக்கையைப் படிக்கும் ஒருவர் இந்த உண்மையை விளங்கிக் கொள்ள முடியும். சமாதானத்தையும், ஜனநாயகத்தையும் குறித்து இவர்களுக்கு உள்ள ஆவர்த்தை யாரும் குறைத்து மதிப்பிட வேண்டியதில்லை. ஆனால் இவர்களது 'தாராளவாத ஜனநாயகம்' இவர்களை, சமாதானத்தையும் சரி ஜனநாயகத்தையும் சரி அவற்றை ஒரு நிரந்தர பயன்பாட்டு அம்சமாக, நடைமுறைக்குகந்ததாக காணத் தவறுவதில் கொண்டு போய் விட்டு விடுறது.

உண்மையில் இந்த 'தாராளவாத ஜனநாயகம்' தனிநபர்களது ஜனநாயகத்தை, உரிமைகளை, மனிதாபிமானத்தைப் பற்றி காட்டுகிற அக்கறையை, **பிரிவுகட்டு** காட்டுவதில்லை. ஒரு மனிதனுக்கு இவர்களால் அழுத்தி கூறப்படும் ஜனநாயகம், ஒரு இனத்திற்கு அழுத்தப்படுவதில்லை. ஒரு இனம், ஒரு வர்க்கம் என்ற ரீதியில் ஜனநாயக உரிமைகளை வழங்குவது தொடர்பாக அது அக்கறைப்படுவதில்லை. மனிதாபிமானம் தொடர்பாகவும் அது பொதுப்படையாகவே பேசி நழுவி விடுகிறது. தனி மனிதர்கள் மீதான மனிதாபிமானத்தை வலியுறுத்தும் அது தேசிய இனத்திற்கும் மனிதாபிமான அணுகுமுறையை கடைப்பிடிக்க அது விரும்புவதில்லை.

சுருக்கமாக சொன்னால்; உண்மையில் **இல்லாத ஒரு தனிமனிதனது** ஜனநாயகம் பற்றி பேசும் அது இருக்கும் பிரிவுகளின் ஜனநாயகம் பற்றி எதுவும் சொல்வதில்லை. 'தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமை' என்ற ஜனநாயக கோரிக்கையை அது சொல்வதில்லை; அல்லது வெறும் உதட்டளவு சொல்லாகவே உச்சரிக்கிறது.


இதனால் சமாதானம் பற்றி பேசும் போது, யுத்தமற்ற ஒரு நிலை, மக்கள் தமது அன்றாட ஜீவியத்தை நடாத்தும் இதர வசதிகளை (போக்குவரத்து, வைத்தியசாலை வசதி, மின்சாரம், எரிபொருள் இன்ன பிற) வழங்கின் சமாதானம் உருவாகிவிடும் என அது நம்புகிறது. ஒடுக்கப்பட்ட தேசிய இனத்தின் உரிமைகட்கு குரலெழுப்புவோருக்கும், ஒடுக்கும் இனத்தின் ஒடுக்குமுறைக் கோட்பாடுகளுக்குமிடையில், அமைதி காண்பது - மௌனமாக இருதரப்பாரும் இருப்பது மூலம்- சாத்தியம் என நம்புகிறது.

சமாதானம், இனங்களுக்கிடையே என்று வரும்போது அது சமத்துவம் கௌரவம் என்பவற்றையும் இணைத்ததாக அமைகிறதாக அது நம்புவதில்லை. தொழிலாளிக்கும் முதலாளிக்குமிடையில் அசமத்துவம் பேணப்பட்டபடியே 'சமாதானத்தை' நடைமுறைப்படுத்தும் 'தொழிற்துறை சமாதானம்' என்கிற 'ஜனநாயகக் கோட்பாட்டை' இனங்களுக்கிடையிலான சமாதானத்திலும் கடைப்பிடிக்க விழைகின்றது இந்த தாராள ஜனநாயகம்!

இத்தகைய முயற்சிகள் 'தொழிற்துறை சமாதானம்' போல் கூட அல்லாது மிகச் சில நாட்கூட தாக்குப்பிடிக்க முடியாமல் போய்விடும் என்கிற உண்மையை அவர்கள் மறந்து விடுகிறார்கள். **வர்க்க சமத்துவ** நிலைமையை இந்த அரசின் கீழ் கொண்டுவருதல் சாத்தியமில்லை என்பதை தாராளவாத ஜனநாயகம் தெரிந்து வைத்திருப்பதால் வர்க்க சமரசத்தை பேண முயல்கிறது. ஆனால் இன அசமத்துவம் இதே சமூக அரசியல் நிலைகளின் கீழ் தீர்க்கப்படுவதற்கான வாய்ப்பு இருக்கும் போதே **'இனசமரசத்தை'** பேண முயல்வது தான் வேடிக்கை!

இந்த முயற்சிகள் வெற்றி பெறா என்பது மட்டுமல்ல இத்தகைய முயற்சிகளால் இனங்கள் தனித்தனியாக பிரிந்து தமது சமத்துவத்தையும் கௌரவத்தையும் தாமே நிலைநாட்ட முடிவெடுக்கும் போது, இத்தகைய ஜனநாயக கோரிக்கைகள் வெறும் கேலிக்குரியவையாகிப் போய்விடும் என்பதும் ஒரு முக்கியமான உண்மையாகும்.

யதார்த்தத்தை புரிந்து கொள்ள விடாப்பிடியாக மறந்து, தமது கற்பனா உலகத்தின் பொற்கால கனவுகளிலே சஞ்சரிப்பதுதான் 'ஜனநாயகவாதிகளின்' என்றென்றைக்குமான தலைவிதியோ என்னவோ?



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## தொடரும் விவாதம்

# தேசியவாதமும் இனவாதமும்: சில கேள்விகள்

'தேசிய வாதமா இனவாதமா?' என்ற தலைப்பில் சரிநிகர் ஆசிரியபீடம் எழுதிய கட்டுரையை விமர்சித்து கலாநிதி நு·மான் அவர்கள் எழுதிய கட்டுரையைப் படித்தபின் இதை எழுதலாம் என்று தோன்றியது. இவ்விரண்டில் யார் சரி யார் பிழை என்பதை கண்டறியும் நோக்கத்தில் நான் இதை எழுதவில்லை. அதற்குரிய அறிவு எனக்கு இருக்கிறதோ என்பதும் கேள்விதான். ஆனால் இவற்றைப் படித்த போது எனக்குள் எழுந்த சந்தேகங்களை முன்வைப்பதே நான் இதை எழுதுவதுதான் நோக்கமாகும்.

முதலில் சரியோ தவறோ சரிநிகர் ஆசிரியபீடம் எழுதியிருப்பதை நான் புரிந்து கொண்ட விதம் இதுதான் என்பதைச் சொல்ல வேண்டும்: தேசியவாதம், இனவாதம் என்ற சொற்கள் தமிழில் பாவிக்கப்படும் அதே அர்த்தத்தில் ஆங்கிலத்திலோ சிங்களத்திலோ பாவிக்கப்படுவதில்லை. தேசியவாதம் என்ற சொல் இனவாதத்தை குறிக்கவும் சிங்கள மக்கள் மத்தியில் பாவிக்கப்படுகிறது. இது ஆபத்தானது. தமிழில் தேசியவாதம் இனவாதம் என்ற சொற்களுக்கு தெளிவான வேறுபாடு உண்டு. தமிழில் 'தமிழ் தேசியவாதம்' என்ற சொல் 'தமிழ் இனவாதம்' என்ற அர்த்தத்தில் பாவிக்கப்படுவதில்லை. எனவே மொழி பெயர்ப்பின் போது இந்த அர்த்தங்கள் கவனத்தில் எடுக்கப்படா விட்டால் ஆபத்தான நிலைமை உருவாகலாம். தமிழ் தேசியவாதம் தமிழ் இனவாதமாக மொழி பெயர்க்கப்படலாம். தமிழ் தேசியவாதம்" நியாயமானது; ஆனால் தமிழ் இனவாதம் அப்படியல்ல, எனவே இது குறித்து பொறுப்பாக நடந்து கொள்வது இன ஐக்கிய முயற்சிக்கு முக்கியமானது.

இதனை விமர்சிக்கும் நு·மான் அவர்கள் 'இனவாதம், தேசியவாதம்' என்பன வேறுவேறானவை அல்ல. ஒன்றிலிருந்து ஒன்றைப் பிரிக்கமுடியாது. தமிழ் தேசியவாதம் தமிழ் இனவாதமே. இதை வேறு வேறாக காண முயல்வது தவறு என்று குறிப்பிடுகின்றார்.

இரண்டு கட்டுரைகளையும் படித்த பின் எனக்கு உண்டான புரிதலடிப்படையில் எழுந்த சந்தேகங்களை இங்கே தருகிறேன்.

முதலாவதாக, 'இனவாதம்' என்ற சொல்லை எந்த அர்த்தத்தில் பயன்படுத்துவது என்பது பற்றிய சந்தேகம். 'இனவாதம்' என்ற சொல் வெறும் இன உணர்வு அடிப்படையிலான கண்ணோட்டம் என்ற அர்த்தத்திலா வழக்கில் உள்ளது என்பது தெளிவுபடுத்தப்பட வேண்டும். வழக்கிலுள்ள அர்த்தம் 'இனவெறி' இன மேலாட்சி மனோபாவம்' போன்றவற்றை கொண்டதாகும். இனஉணர்வு இனப்பற்று அடிப்படையிலான கருத்து நிலையை 'இனவாதம்' என்ற சொல்லால் குறிப்பிடுவது பொருத்தப்பாடானதல்ல. அவ்வாறான சந்தர்ப்பங்களில் 'இனத்துவவாதம்' என்ற சொல் அதிகப் பொருத்தப்பாடானதாக அமையும் என்று நான் கருதுகின்றேன். Communalism என்ற சொல் ஆங்கில நடைமுறையில் 'இனவாதம்' என்ற அர்த்தத்திலேயே பயன்படுத்தப்படுகிறது. விளங்கிக் கொள்ளப்படுகிறது -அதன் அகராதி அர்த்தம் நேரடியாக அந்த அர்த்தத்தை தராவிட்டாலும் கூட.

இரண்டாவதாக, தேசியவாதம் என்ற சொல் பற்றி சரிநிகர் கிளப்பியுள்ள பிரச்சினை. இது மிகவும் முக்கியமான ஒரு கேள்வி. தமிழ் தேசியவாதம் = தமிழ் இனவாதம். சிங்கள தேசியவாதம் = சிங்கள இனவாதம் என்று சொல்வது தவறு என்பதற்கு காணரமாக, தேசியவாதம் முழு நாட்டையும் உள்ளடக்கிய அர்த்தத்தில் சிங்கள ஆங்கில மொழிகளில் பாவிக்கப்படுவதாக சரிநிகர் கூறுகிறது. இல்லை; இரண்டும் ஒன்றே என்கிறார் நு·மான் அவர்கள். அப்படியானால் அரசியல் அதிகார நோக்கில் தமிழ் தேசியவாதமும் சிங்களத் தேசியவாதமும் இலங்கையை தமக்கு ஏகபோக சொந்தம் கொண்டாட நடாத்தும் யுத்தமாகவா இன்றைய அரசியலை விளங்கிக் கொள்வது? அப்படியானால் தமிழீழ கோசம் ஏன் எழுந்தது? 'இனத்தேசிய வாதம்' இனத்தின் ஆட்சிப்பரப்பு பற்றி என்ன சொல்கிறது? சரிநிகர் எழுப்பிய 'முழுநாட்டையும் தமக்கு மட்டுமே' சொந்தம் கொண்டாடும் 'இனவாத' அர்த்தத்தில் nationalism என்ற ஆங்கில சொல் பாவிக்கப்படுகிறது என்பது பற்றி ஏன் நு·மான் அவர்கள் ஒன்றும் சொல்லவில்லை?

மூன்றாவதாக, தன்னை 'இனவாதி' என்று சொல்லிக் கொள்வதற்கு ஒருவரும் இப்போது முன்வருவதில்லை என்று நு·மான் அவர்கள் சொல்வது உண்மைதான். ஆனால் இன உணர்வு, இனமானம், இனப்பற்று உள்ளவர்களாக தம்மை யாரும் கூறிக் கொள்வதும் இல்லையா? இனவாதம் என்ற சொல், (இனத்) தேசியவாதம் என்ற சொல் இரண்டும் வேறுபடுத்தி காட்டும் இவ்விடயங்கள் வெறும் பொய் தானா?

நாலாவதாக, இனப்பற்று, இனஉணர்வு, என்பவற்றைக் கொண்ட அல்லது தமிழ் தேசியவாதியாக தன்னை கூறிக் கொள்ளும் ஒருவர் பிற இனங்கள் மீது வெறுப்பு கொண்டவராக இருக்கத்தான் வேண்டுமென்பது நியதியா? ஒரு இனத்தின் நலன் நடைமுறையில் இன்னொரு இனத்தின் நலன்களுக்கு எதிராக அமையத்தான் வேண்டும் என்று நு·மான் அவர்கள் கூறுகிறார்கள். ஏன்? இனங்களின் நலன்கள் ஐக்கியமான முறையில் பேணப்படல் சாத்தியமில்லையா? என்னைப் பொறுத்தவரையில் நான் அறிவறிந்த நாள் முதல் பிற இன விரோதி மனோபாவத்தை என்றைக்கும் கொண்டிருந்ததில்லை. ஆயினும் தமிழீழத்தை தீவிரமாக ஆதரித்திருக்கிறேன். இதில் முரண்பாடு இருப்பதாக நான் ஒருபோதும் உணர்ந்ததில்லை. இனங்களுக்கிடையே சமத்துவம் பேணப்படும் நிலையில் நாட்டின் மத்திய அரசு இருக்கும் என்றால் இந்தியா போன்ற நாட்டில் கூட இனங்கள் ஐக்கியமாய் வாழ முடியும் என்பது பொய்யான நம்பிக்கையா?

ஐந்தாவதாக, தேசியவாதமும் இனவாதமும் நாட்டின் சமூக பொருளாதார அரசியல் சூழ்நிலைகளின் காரணமாக் தவிர்க்கமுடியமால் உருவாகின்றவை அல்லவா? எமது விருப்பு வெறுப்புகட்கு அப்பாற்பட்டு அவை யதார்த்தமாக நிலவுபவை அல்லவா? இன முரண்பாடுகளும் மோதல்களும் பிரிவினையும் தனி நபர்களது விருப்பு வெறுப்புகளின் விளைவுகள் தானா? இனவாதத்தை முறியடிப்பது தனி நபர்களின் விருப்புகளினால் சாத்தியமாகும் ஒன்றா?

ஆறாவதாக, இனத்தேசியவாதம், பொருளாதார வளங்களை பங்கு போடுவதில் ஏற்பட்ட போட்டியில் பிரிவினைக்கு வழி கோலியதாக நு·மான் அவர்கள் கூறுகிறார். இப்பிரச்சினையை வெறும் 'பங்குப்' பிரச்சினையாக பார்ப்பது சரிதானா? இதில் ஒடுக்குமுறை என்ற அம்சமும், விடுதலை என்ற அம்சமும் இருப்பது முக்கியமானதல்லவா? அது கவனிக்கப்பட வேண்டியதில்லையா?

இவையெல்லாம் சரிநிகரின் கட்டுரைக்கான நு·மான் அவர்களின் விமர்சனத்தை பார்த்ததும் எழுந்த கேள்விகள். சரிநிகரின் கட்டுரைகளில் குழப்பம் இருக்கிறது என்பதை விட தெளிவுக் குறை உள்ளதாக சொல்வதே பொருத்தமானது என்று நான் கருதுகிறேன். எனது இக்கேள்விகள் தொடரும் இவ்விவாதத்திற்கு பயனுள்ளதாக அமையும் என நம்புகிறேன். ●

**குகானந்தன்**

# 'ஜனநாயக கட்சி'யின் விதியும் அதே 'இயக்க விதி' தானா?

கற்பாறைகளுக்கு மத்தியில் ஏராளமாக இரத்தம் சிந்திய ஒரு ஆணின் உடல் காணப்பட்டது. அவனது கண்கள் மூடப்பட்டிருந்ததுடன் அவனது தலை நிலை கொண்டிருந்த விதம் அவன் உயிருடன் இல்லை என நிரூபித்தது.

இப் பயங்கரத்தைக் கண்டுபிடித்த நபர் அது தொடர்பாக முறைப்பாடு செய்ய வெள்ளவத்தை பொலிஸுக்குச் சென்றார். சில நிமிடங்களுள் (குற்றப்பிரிவு) பொறுப்பதிகாரி (OIC) யான, இன்ஸ்பெக்டர் பிரசன்ன அல்விஸ், உதவி இன்ஸ்பெக்டர் ஜயசிங்க தலைமையில் ஒரு பொலிஸ் குழு குற்றச் செயல் நடைபெற்ற இடத்திற்கு வந்தது.

வெள்ளவத்தையிலுள்ள, ராஜசிங்க வீதியின் முடிவில் உள்ள புகையிரத தண்டவாளத்துக்கு அப்பால் கற்பாறைகளுக்கு மத்தியில்



இச் சடலம் கிடந்தது.

ஆரம்ப மேலோட்டமான விசாரணைகள், இறந்த மனிதனின் வயதை 27 இற்கும் 30திற்குமிடைப்பட்டது எனப் பொலிஸாருக்குக் கணிப்பிட உதவின. ஒரு கூரிய ஆயுதத்தினால் பல முறை குத்தப்பட்டிருப்பதை உடலிலுள்ள தடயங்கள் காட்டின. கல்கிஸ்ஸை மஜிஸ்ரேட் ஜயந்த பெரேரா சம்பவம் நடந்த இடத்திற்கு வந்ததுடன் கூறு பாட்டாய்வை (Autopsy) தாமதிக்காது நடத்துமாறு பணித்தார். அதன்படி களுபோவில வைத்திய சாலையின் உதவி கனிஷ்ட மருத்துவ அதிகாரி, (JMO) Dr.அனில் குமார; பிரேத பரிசோதனை (Post Mortem)) நடத்தி உடலில் ஏற்படுதத்தப்பட்ட 16 குத்துக் காயங்கள் காரணமாகவே மரணம் சம்பவித்துள்ளது என்று தெரிவித்தார்.

அதேசமயம் இறந்த மனிதனை அடையாளம் காணப் பொலிஸார் திணறினர். அவர் யாராக இருக்கலாம் எனக் குறித்துக் காட்டக்கூடிய ஒரு புதிர் கூட குற்றம் நிகழ்ந்த இடத்தில் கிடைக்கவில்லை. வெள்ளவத்தைப் பொலிஸார் இச் சவாலை ஏற்று விரிவானதொரு விசாரணையை ஆரம்பித்தனர்.

தீவிர விசாரணையை மேற்கொண்ட பொலிஸார் எட்டு நாட்களின் பின்பு கிடைத்த இரகசிய தகவல்களை அடுத்து கொழும்பிலுள்ள ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் தலைமைக் காரியாலயத்தில் வேலை செய்யும் இரு இளைஞர்களைக் கைது செய்தனர். இதனுடன் சம்பந்தப்பட்டதாக நான்கு வாகனங்களும் பொலிஸாரால் கண்டறியப்பட்டன. அவை ஈ.பி.டி.பியினரின் பாவனையிலுள்ளவை என்றும் கைது செய்யப்பட்ட இவ்விரு நபர்களும் ஈ.பி.டி.பியின் கறுப்புப் பட்டியலிலுள்ளோரைக் கைது செய்யும் வேலையில் இருப்பவர்களெனவும் பொலிஸாருக்குத் தெரியவந்தது.

விசாரணைகளிருந்து கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் இருவரில் ஒருவர் முன்னாள் திருகோணமலை பகுதி ஈ.பி.டி.பியின் தலைவரெனவும் தெரியவந்தது.

நீண்டநேர தீவிர விசாரணையின் பின் இறந்த நபரை, சந்தேக நபர்கள் இருவரும் அடையாளம் காட்டினர். இறந்தவர் ஈ.பி.டி.பியின் தீவிர உறுப்பினரென்றும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவரென்றும் அவரது பெயர் உதய சூரியகுமார் என்றும் இனங்காட்டினர்.


90இலிருந்து 92 வரை தற்போதைய யாழ்.மாவட்ட பா.உ. மதனுடைய (அப்போது இவர் தீவுப்பகுதி ஈ.பி.டி.பி. அரசியல் பொறுப்பாளராக இருந்தவர்) மெய்ப்பாதுகாவலராக இருந்தவர். 92இன் பின் தற்போதைய யா.மாவட்ட பா.உவும், ஈ.பி.டி.பி தலைவர் டக்ளஸ் தேவானந்தாவுடைய மெய்ப்பாதுகாவலராக கடமையாற்றியவர். பின்னர் ஈ.பி.டி.பியின் நடவடிக்கைகள் தொடர்பாக அதிருப்தியுற்று அதிலிருந்து வெளியேறி இருந்தார்.

உதயசூரிய குமாரன் யாழ்ப்பாணத்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# இராணுவ மறுசீரமைப்பு: தேவை ஒரு யுத்தநிறுத்தம்?

இலங்கை இராணுவத்தின் அனைத்துக் காலாட்படை அணிகளும் (infantry regiments) 10வது நிரந்தரப் படைப்பிரிவுகளையும் (10th regular battalions) 11வது தொண்டர் படைப்பிரிவுகளையும் (11th Volunteer battalions) உருவாக்குவதற்கான ஆட்சேர்ப்பினை அண்மையில் பூர்த்தியாக்கியுள்ளன.

'சிங்ஹ', 'கெமுனு', 'கஜபா', 'விஜயபா'ஆகியனவே இக்காலாட்படை அணிகளாகும். இலங்கை இராணுவத்தின் காலாட்படை பற்றாலியன் ஒன்றில் படைவீரரும் அதிகாரிகளுமாக மொத்தம் 800 பேர் இருப்பர். இவ்வாறாக 8 படைப்பிரிவுகள் உருவாக்கப்பட்டு, தற்போது புதிதாகச் சேர்த்துக் கொள்ளப்பட்டவர்களுக்கான பயிற்சி நடைபெற்று வருகிறது.

தொண்டர் படைப்பிரிவுகளுக்கான அதிகாரிகள் தேர்விற்கு கணிசமான தொகையினர் சமூகமளித்ததாகப் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

தொண்டர் படைப்பிரிவுகளில் சேர்வது பாதுகாப்பானது என்னும் உணர்வு பரவலாக உள்ளமையாலும் இப்பிரிவுகளில் சேர்வோருக்கு ஏனையோரைப் போல் 12 வருட கட்டாய சேவை இல்லாமையாலும் நிரந்தரப் படைப்பிரிவுகளில் சேர்வதை விட தொண்டர் படைப்பிரிவுகளில் பல சிங்கள இளைஞர் சேர விரும்புகின்றனர். தற்போது நிரந்தரப்படைப் பிரிவுகளுக்குச் சேர்க்கப்படும் அதிகாரிகளுக்கு ஜனாதிபதி விரும்பும்போது மட்டுமே சேவையினின்றும் விலகலாம்எனக் கூறப்பட்டுள்ளது. அத்துடன் வடகிழக்கிற்கு தொண்டர் படைப்பிரிவுகள் அனுப்பப்படும் போதும் ஏற்கனவே பாதுகாப்பும் பலப்படுத்தப்பட்டு புலிகள் இல்லாப் பகுதிகளாகக் கருதப்படும் இடங்களிலேயே சேவையில் ஈடுபடுத்தப்படுகின்றன. (உதாரணம் திருமலை நகரம், கந்தளாய், புனானை, வெலிக்கந்தை இன்னோரன்ன) எனினும் முன்னிலைப் பாதுகாவல் அரண்களில் (F.D.L.S.) வெறுமனே கண்காணிப்பில் இலகுவாக ஈடுபட்டிருக்கலாம் எனக்கருதி தொண்டர் படையணிகளில் பலர் இணைந்து சேவையில் ஈடுபட்டிருப்பது உண்மையாயினும், இரண்டாம் ஈழப்போர் தொடங்கிய காலத்திலிருந்து சிங்கள தமிழ் எல்லைப் பகுதிகளில் கடுமையாக அடி வாங்கிய பிரிவுகள் தொண்டர் பிரிவுகளே. (உதாரணம் கட்டுப்பொத்த, ஜானக புர)

இம்முறையும் அதிகாரிகள் பயிற்சிக்கு கா.பொ.தர சாதாரண பரீட்சையில் 6 பாடங்கள் சித்தியடைந்தவர்களே தெரிவு செய்யப்பட்டுள்ளனர். தொண்டர் படைப்பிரிவு அதிகாரிகளுக்கும் நிரந்தர படைப்பிரிவு அதிகாரிகளுக்கும் இதுவே அடிப்படைக் கல்வித் தகமையாகும். நிரந்தரப் படைப்பிரிவு அதிகாரிகளுக்கு 24 மாத முழுநேரப் பயிற்சியும், தொ.படை அதிகாரிகளுக்கு 12 மாதப் பயிற்சியும் நடைபெறும்.

பயிற்சிக்காலத்தில் உணவு, உறைவிட வசதிகளுடன் ஐயாயிரம் ரூபாய் வரையிலான சம்பளமும் இவர்களுக்கு வழங்கப்படும். பயிற்சி முடிந்து வட கிழக்குச் செல்லும் போது இவர்களின் ஆரம்பச் சம்பளம் 7200 ரூபாயாகும். வேறு சலுகைகள் தனி. கா.பொ.த.சாதாரண பரீட்சையில் 6 பாடங்களுடன் இங்ஙனம் ஆரம்பச் சம்பளமும் சலுகைகளும் வேறு எங்கும் இன்றைய காலத்தில் கிடைக்காது என்பதாலேயே படை அதிகாரிகள் தேர்விற்கு கணிசமான இளைஞர் தோற்றியுள்ளனர் எனச் சில பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

இப்புதிய ஆட்சேர்ப்பு நடவடிக்கையினால் ஏலவே உள்ள படைப் பிரிவுகளின் ஆட்தொகையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. புதிய படைப்பிரிவுகள் முழுமையாக புதிதாகச் சேர்க்கப்பட்டவர்களாலேயே உருவாக்கப்படுவதில்லை. ஏலவே உள்ள படைப்பிரிவுகளில் இருக்கும் உயர் அதிகாரிகள், இடைநிலை அதிகாரிகள் மற்றும் அனுபவமிக்க காலாட்படையினர் ஆகியோரை எடுத்து, புதிதாகச் சேர்ந்து பயிற்சி பெற்றவர்களையும் இணைத்தே புதிய படைப்பிரிவுகள் உண்டாக்கப்படுவது இராணுவ நடைமுறை.

இதன் காரணமாக முன்னர் சராசரியாக 7 படைப்பிரிவுகளுடன் (battalions) பேணப்பட்ட வடக்கின் சில பாதுகாப்பு முன் அரண் நிலைகள் தற்சமயம் 12 படைப்பிரிவுகளைக் கொண்டு பேண வேண்டி உள்ளது. மேற்கூறிய புதிய படைப்பிரிவுகளை அமைக்க என ஆட்கள் எடுக்கப்படுவதாலும் பலர் படையை விட்டு ஓடுவதாலும் (Desertion) மொத்தம் 800 வீரர்களைக் கொண்டிருக்க வேண்டிய நிரந்தர காலாட்படைப்பிரிவுகள் (regular infantry battalions) தற்சமயம் சராசரியாக 600 வீரர்களுடனேயே சமாளிக்க வேண்டியுள்ளது. இதன் காரணமாகவே ஒரு குறிப்பிட்ட முன் அரண் நிலையைப் பாதுகாக்க தற்சமயம் முன்னரை விட 4 அல்லது 5 பிரிவுகள் கூடுதலாகத் தேவைப்படுகின்றது.

இவ்வாறு புதிய படைப்பிரிவுகள் உண்டாக்கப்படுவதன் காரணமாக காலாட்படைகளின் சண்டையிடும் திறன் பரவலாக வீழ்ச்சியடைய வாய்ப்பேற்படுகிறது. குறைந்த தொகையினரான சண்டை அனுபவமும் தேர்ச்சியும் உடைய அதிகாரிகள் கூடிய தொகையினராக உள்ள, அனுபவமோ தேர்ச்சியோ அற்ற காலாட்படை வீரர்களை வழிநடத்த வேண்டிய சூழலை இப்படை விரிவாக்க நடவடிக்கை ஏற்படுத்துவதே இதன் பிரதான காரணமாகும். இத்துடன் புதிதாகத் தெரிவு செய்யப்பட்டு பயிற்சிக்கு அனுப்பப்பட்டுள்ள இளம் அதிகாரிகள் பயிற்சி முடிந்து வர இரண்டு வருடங்களாகும். அதுவரை குறுகிய காலத்துள் தம் பயிற்சியை முடித்து வரும் காலாட்படை வீரர்களை ஏலவே உள்ள அதிகாரிகளே தம் ஆணைவழிச் செலுத்த வேண்டும். ஆனால் தற்சமயம் இலங்கை இராணுவத்தில் காலாட்படை அதிகாரிகள் தேவையான அளவிற்கில்லை. இதன் காரணம்

1. நிரந்தரக் காயம் படல்.
2. சண்டையில் இறத்தல்.
3. சண்டையனுபவம் இருந்தும் ஆங்கில அறிவின் குறைபாட்டால் பரீட்சைகளிற் தேறி நிரந்தரப் பதவி உயர்வடையாமல் இருத்தல்.

கடந்த வருடம் மட்டும் படைப்பிரிவுகளுக்குப் பொறுப்பதிகாரிகளாக இருக்க வேண்டிய லெப்ரினன்ட் கேணல் தரத்திலுள்ள 17 பேர் படையை விட்டோடி உள்ளனர்.



~டி.சி~

அதிகாரிகள் மட்டத்திலான இந்த ஓட்டத்திற்குப் பல காரணங்கள் கூறப்படுகின்றன. அவற்றில்-ஒன்று சுவாரசியமானது.

முன்னைய அரசாங்கம் இராணுவத்திலிருந்து ஓய்வு பெற்ற பல அதிகாரிகளை மீண்டும் சில துறைகளிற் சேவைக்கமர்த்த முடிவு செய்ததன் காரணமாக கிட்டத்தட்ட 60 பழைய அதிகாரிகள் உள்வாங்கப்பட்டனர். அவர்களுக்கு ஓய்வூதியத்துடன் சம்பளமும் வழங்கப்பட்டது. (இதை p.p.scales என்பர் - pay and pension) இவர்கள் அனைவரும் கொழும்பு அனுராதபுரம் போன்ற இடங்களில் பெரும்பாலும் இராணுவ நிர்வாக வேலைகளில் அமர்த்தப்பட்டனர். இவர்கள் படைத்துறையில் பழைய கைகளாதலால் பலப்பல சலுகைகளை சுலபமாகத் தமதாக்கிக் கொண்டனர். இதனால் போர்க்களத்தில் பணிபுரியும் அதிகாரிகள் கொழும்பு வரும் வேளைகளில் அவர்களுக்குப் பல வசதிகள் - குறிப்பாக வாகனங்கள் - கிடைக்காமற் போயின. இவ்வாறு அடிக்கடி நடைபெற்று வந்தமையால் களத்தில் நின்று போரிட்டு வந்த பல படைப்பிரிவு அதிகாரிகளுக்கு வெறுத்துப் போய்விட்டது. சண்டையில் ஈடுபட்டிருக்கும் தம்மை விட ஓய்வூதியம் சம்பளமும் மற்றும் இதர வசதிகள் பெற்றும் சில ஊழல்களில் ஈடுபட்டுப் பணம் சம்பாதித்துக் கொண்டும் கொழும்பில் குஷியாகவும் பாதுகாப்பாகவும் இருப்பவர்கள் முக்கியமாகி விட்டார்கள் என்ற கசப்புணர்வு வடகிழக்கில் பணியாற்றும் பல படைப்பிரிவு அதிகாரிகள் மட்டத்தில் ஏற்பட்டதும் ஓட்டத்திற்கு ஒரு காரணம் எனப்படுகிறது.

புதிய படைப்பிரிவுகள் உருவாக்கப்படுவதால் காலாட்படை அணிகளின் போரிடும் திறனில் ஏற்படும் வீழ்ச்சி தற்காலிமானதே எனவும் இரண்டு மூன்று வருடங்களில் இத்திறன் முன்பிருந்ததை விட ஓரிரு மடங்காவது அதிகரித்துவிடும் எனவும் இலங்கை இராணுவத்தின் உயர்பீடம் நம்புகிறது.

கூடியகாலப் பயிற்சியும், போரிடும் திறனை அதிகரிக்கும் தரமான பயிற்சி முறைகளுமே காலாட்படைக்குத் தற்போது அத்தியாவசியமாகத் தேவை என நம்புபவர் இன்றைய இராணுவத்தளபதி ஜெரி சில்வா. புதிய படைப்பிரிவுகள் உண்டாக்கப்படுவதால் ஈழப்போரில் தொடர்ந்து ஈடுபட்டு வந்த பல படைப்பிரிவுகளில் உள்ள பெரும்பாலார் ஓய்வு எடுக்கவும், மாற்றமாகவும் (rest and rotation) விசேட பயிற்சிகள் பெற அனுப்பப்படவும் நல்ல வாய்ப்பு ஏற்படுவதால் அவர்களின் போரிடு திறன் பன்மடங்கு அதிகரிக்க வாய்ப்பு ஏற்படும் அதே வேளை, புதிதாக சேர்க்கப்பட்ட அதிகாரிகள் வீரர்கள் ஆகியோரும் தமக்குரிய பயிற்சியும் போரனுபவமும் பெற்றிடுவதால் ஓரிரு வருடங்களில் காலாட்படைகளின் போர்த்திறன் ஒட்டுமொத்தமாகப் பன்மடங்கு அதிகரித்திடும் என்பது ஜெரியும் அவரைச் சார்ந்தோரும் கொண்டுள்ள கருத்து. இரண்டாம் ஈழப்போர்ச் சண்டைகள் கடுமையாக நடைபெறாதிருக்கும் பட்சத்திலேயே இத்திட்டம் வெற்றியளிக்கும் என்பது வெளிப்படை.

ஏனெனில் புலிகள் தொடர்ந்து தரைவழியிலான தாக்குதல்களை மேற்கொண்டால் ஆறுதலான பயிற்சிக்கும், களைத்தோரின் ஓய்விற்கும், விசேட வெளிநாட்டுப் பயிற்சிக்கும், அனுபவமிக்க காலாட்படை வீரர்களையும் அதிகாரிகளையும் பெரிய அளவில் போர்க்களப் பிராந்தியங்களில் இருந்து வெளியெடுக்க முடியாது. இவ்வகையில் பார்க்கும் போது குறைந்த பட்சம் ஒரு வருடமாவது புலிகளுடன் மோதல் இல்லாமல் இருப்பது இராணுவத்திற்குத் தன் போர்த்திறனை உயர்த்தவும் விருத்தி செய்யவும் இன்றியமையாமலிருப்பதையும் காணலாம். சந்திரிகாவின் முயற்சிக்கு இராணுவத் தலைமைப்பீடம் பெரிய முட்டுக்கட்டை போடாமலிருப்பதற்கு இதுவும் ஒரு காரணம் எனலாம். சந்திரிகாவும் அனுருத்த ரத்வத்தையும் இராணுவத்தின் மேற்கண்ட நிலைமையைச் சரிவர உணர்ந்தே யுத்த நிறுத்த முயற்சிக்கு முன்னுரிமை அளிக்கின்றனர் என்பதும் புலப்படுகிறது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# இலங்கைத் தமிழ் தேசியவாதத்தின் ஆரம்பம் ஆறுமுக நாவலர் அல்ல — 03

திராவிடக் கருத்தியல் தமிழகத்தில் ஒரு சமூக அரசியல் இயக்கமாக வடிவெடுக்கத் தொடங்கிய காலகட்டமாக இந் நூற்றாண்டின் முதற் 16 வருடங்களைக் கூறலாம். 1912 இல் C.நடேசன் அவர்கள், **திராவிடர் சங்கம்** என்னும் அமைப்பை தமிழகத்தில் ஆரம்பித்தார். இன்று திராவிடக் கட்சிகள் தம் அரசியல் அடிமூலமாக கருதும், தென்னிந்திய நலவுரிமைச்சங்கம், 1916 இல் ஆரம்பிக்கப்பட்டது. இதே காலப்பகுதியில் (1900-16) இந்தியத் தேசிய விடுதலை இயக்கத்தினுள்ளும் தமிழ்த் தேசிய மீளெழுச்சி பற்றிய கருத்துக்கள் டாரதி, மு.இராகவையங்கார் ஆகியோராலும், மதுரைத் தமிழ்ச் சங்கம் போன்ற இந்தியத் தேசிய இயக்கம் சார் அமைப்புகளாலும் வலியுறுத்தப்படலாயின. இவற்றின் தாக்கம் பொதுவாக இலங்கைத்தமிழர் மத்தியிலும் குறிப்பாக யாழ்ப்பாண தமிழர் மத்தியிலும் 'கணிசமாக இருந்தது. இலங்கை சுதந்திரமடையும் வரை தமிழகமும் இலங்கைத் தமிழரும் மிக நெருங்கிய கலாசார, அறிவியல் தொடர்பினைக் கொண்டிருந்தனர் என்பதை இங்கு நாம் மனதில் கொள்ள வேண்டும். நாம் மேற்குறிப்பிட்ட காலப்பகுதியில் தமிழ் இனம், மொழி என்பன பற்றி மூன்று வகையான சிந்தனைப் போக்குகளை இலங்கைத் தமிழர் மத்தியில் அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது. ஒன்று, தமிழர் தம்மைப் பிரதானமாக இந்துக்களாகவே கணித்து, தாம் ஆரியர் எனவும், வடமொழி தமிழை விட உயர்ந்த தேவமொழி எனவும் கருதும் போக்கு. இரண்டு, தமிழ் மொழி தனித்துவமானது ஆனால் அத்தனித்துவத்தின் அடித்தளம் சைவத்தமிழ் மரபுகளினுள்ளேயே காணப்படுகிறது எனும் போக்கு. மூன்றாவது, கால்டுவெல் பாதிரியார், போப்பையர் போன்றோர்களுடைய திராவிட இன, மொழி வரலாற்று கோட்பாடுகளின் அடிப்படையில் சாதி, மதம் ஆகியவற்றை மேவிய தமிழ் தேசியத்தை வலியுறுத்தும் போக்கு. இவற்றில் முதல் இரண்டு போக்குகளும் கொழும்பிலும், குடாநாட்டிலும் இருந்த உயர் சைவவேளாளர் மத்தியிலேயே காணப்பட்டது. மூன்றாவது போக்கு இவர்களல்லாத பிற இலங்கைத் தமிழர் மத்தியில் காணப்பட்டது.

இனி முதலாவது போக்கை ஆராய்வோம். இன்று நமக்கு கிடைக்கும் அனைத்துச் சான்றுகளும் நாவலர் மரபு, மற்றும் பொன்.இராமநாதனின் குடும்ப அரசியல் ஆகியவற்றுடன் இது பின்னிப்பிணைந்து வெளிப்படுவதையே காட்டுகின்றன. **திராவிட கோகிலா** 5.1.1902 இதழில் ''நூதனவினா: சைவர் பிராமணராகப்படாதா?'' என்னும் தலைப்பின் கீழ் வருமாறு காணப்படுகின்றது.

**1.''வேதாரணியத்துச் சைவப்பண்டாரங்கள் இங்குள்ள அசற் சூத்திரர்களை சட்சுவாதி தீட்ஷைகளினால் சைவர்களாக்கலாமென்றால் பரம்பரைச் சைவர்களைப் பிராமணர்கள், பிராமணர்களாக்கிலென்ன?**

**2. வட தேசத்து நின்றுவரும் மதுமாமிச பட்சணிகளாகிய பிராமணர்கள் யாழ்ப்பாணத்துச் சுவாமிகளைத் தீண்டலாமென்றால் யாழ்ப்பாணத்துச் சற்சூத்திரர் சுவாமிகளைத் தீண்டினால் வருங்குற்றமென்ன?**

**இதற்கு வண்ணைச் சிவன் கோவில் ஆதீன கர்த்தர்களும் வண்ணைக் கதிரீசன் கோயிலாதீன கர்த்தர்களுமே வினாவி விடைபகர்வார்களாக.''**

உயர் சைவ வேளாளருக்கு, சாஸ்திர ரீதியாக உயர் அந்தஸ்தைப் பெற்ற சூத்திரர் எனப் பொருள்படும், சற்சூத்திரர் எனும் கௌரவப் பட்டத்தை நாவலர் நிறுவியிருந்தார்.

தாம் பற்றிப் பிடித்துக் கொண்டிருந்த இந்து சமூக அமைப்பினுள் இதனிலும் மேல் நிலையடைந்து பிராமணீயமயப்பட வேண்டும் எனும் அவாவே மேற்கண்ட 'நூதன வினா'வில் மேலோங்கி நிற்பதை நாம் காணலாம். யாழ்ப்பாணத்தில் ஒரு சில பகுதியினரே உயர் வேளாளர் என்றும், இவர்களே நால்வர்ண சமூக ஏணியில் ஏறி மேற்செல்லும் தகுதியுடைய சற்சூத்திரர் என்றும், சைவர்களாக தீட்சை பெற்று உயர்வடைய விரும்பிய ஏனைய வேளாளர் உண்மையான வேளாளர் அல்ல என்றும் கருத்துக்கள் நிலவியதை நாம் காணக்கூடியதாக உள்ளது. இவ்வாறானவர்களை மட்டம் தட்டுகின்ற தொனியையும் நாம் தெளிவாக கேட்கக்கூடியதாக உள்ளது. உதாரணமாக, ***சுதேச நாட்டியம்*** 25.6.1906 இதழ் **''சென்ற வாரம் இவ்வூரில் ஓர் கோவியமாது இறக்க அவள் பிரேதத்தைப் பறைமேளவாரம்பத்துடன் எடுத்துத் தகனஞ் செய்விக்க வேண்டுமென்று இங்குள்ள கோவியர் குழு முயற்சிக்க, இதையறிந்த அரை வேளாளர், கால் வேளாளர், அரைக்கால் வேளாளர் பலர் குழுமி அப்படியுமாச்சுதாவென்று வீண்வாயடித்து விகட நாடகமாட, இதையறிந்த கோவியர் 'ஈயுதைத்து மலை விழுமா'' என்று நகைத்து விட்டு இனிப்பாருங்களடா எங்கள் சமர்த்தையென்றெழுந்து''** என எழுதிச் செல்கிறது

இந்து மதத்தில் அதி உயர்நிலை பெற்றவர்கள் பிராமணர்களே என்றும் அவர்கள் தம்மை ஆரியர் எனக் கருதுவர் என்றும் தெளிவாகவே உணர்ந்திருந்த, கொழும்பிலும் குடாநாட்டிலும் இந்து மதத்தின் உன்னத காவலர்களாக செயல்பட்ட யாழ் சற்சூத்திரர், தம்மை ஆரியர் என அழைக்கவும் தயங்கவில்லை. சமஸ்கிருதத்தை ''நமது ஆரிய பாஷை'' எனக்கூறிய திராவிட கோகிலா (11.11.1900) அதன் 16.11.1902 இதழின் ஆசிரியர் தலையங்கத்தில்

**''அறிஞர்களே!**
**நம்மவர்களாகிய ஆரியர்கள் மற்றையவர்களை விடத் தரும சிந்தையில் மேற்பட்டவர்களென்று பிற தேசத்தவர்களால் கொண்டாடப்படுகிறார்கள்''** என எழுதிற்று. இத்துடன் 19ம் இலக்க திராவிட கோகிலாவில் (கிடைக்கவில்லை) ஒரு கடிதர் புண்ணியபூமி பாரத கண்டமா, குமரிக்கண்டமா (கடல் கொண்ட தமிழரின் ஆதித் தாயகம் என கூறப்படுவது) என வினவியதற்கு, ***திராவிடப் பிரகாசிகையை*** எழுதிய சபாபதி நாவலர், புண்ணிய பூமி குமரிக் கண்டமே என விடையிறுத்தது தவறு என நாவலரை பிரமாணங்காட்டி இன்னோர் கடிதர் 11.21.1900 திராவிட கோகிலாவில் எழுதுகிறார். இவ்வாறாக தம்மை ஆரியராக சித்திரித்து நால்வர்ண ஏணியில் ஏற முயற்சித்துக் கொண்டிருந்த தன் யாழ் உயர் வேளாள வாசகர்களின் ஆதங்கங்களை மனதிற் கொண்டே அக்காலத்தில் ***ஆத்மபோதினி*** எனும் பத்திரிகையை நடத்தி வந்த **கே.எஸ். *வைத்தியநாத சாஸ்திரிகள். ''ஆரியர்களின் பரிதாப நிலை''*** எனும் ஆசிரியர் தலையங்கத்தை தம் பத்திரிகையில் (2.3.1908) எழுதினால் போல் தெரிகிறது. இந்து தர்மத்தில் நால்வர்ண அமைப்பைப் பற்றி விளக்கி, யாழ்ப்பாணத்தை நாடாக்கி அரசாண்ட மன்னர்கள் அங்கு நால்வர்ணங்களையும் குடியேற்றி முறை தவறாது ஒழுகும்படி செய்தனர் எனக் கூறும் சாஸ்திரிகள் **''முற்கூறிய நான்கு வருணத்தாருள் பெரும்பான்மையோர் ஆரியரேயாம். ஆரியர் பொன்னிறமுடையவர். திராவிடர் முதலிய சில கருநிறத்தவர் ஆரியர்களின் பழக்கவழக்கத்தாலும், கூட்டுறவாலும் நாளடைவில் அவர்களோடு கலந்தும் பல தொழிலாளிகளாக காணப்படுகின்றனர்''** என மிக நாசூக்காக யாழ்.சற்சூத்திரர்களுக்கு ஆரியத்தினுள் இடமளிக்கிறார். இது எந்தளவிற்கு யாழ் உயர் வேளாளரின் பிராமணீய மயமாதல் பற்றிய உள் ஆதங்கங்களுக்கு மருந்தாய் அமைந்ததோ தெரியவில்லை. இக்காலப்பகுதியில், தமிழ், தனித்துவமானது, தமிழர் ஆரியரிலும் மிக வேறான திராவிட இனத்தை சேர்ந்தவர்கள் என்கின்ற கருத்து பிரதானமாக யாழ் சைவ வேளாளர் அல்லாதவர் சிலர் மத்தியில் இருந்து பலமாகக் கேட்கலாயிற்று. திராவிட மொழிக் குடும்பமானது மங்கோலியா, சீனா ஆகியவற்றை அண்டிய தூவரேனிய மொழிக் குடும்பத்துடன் தொடர்புடையது என்பது திராவிட மொழியியல் கோட்பாட்டின் ஒரு கூறு. தம்மை ஆரியர் எனக் கூறி இந்து மத சமூக ஏற்பாட்டினுள் உயர்நிலையடைய பாடுபட்டுக் கொண்டிருந்த யாழ் சற்சூத்திரருக்கு திராவிடக் கோட்பாடு பெரும் சவாலாக அமைந்து விட்டது. எனினும் தம் முயற்சியில் சிறிதும் தளராத அவர்கள் திராவிட கோட்பாட்டையே மறுதலிக்கவும் தயங்கவில்லை. யாழ் வரலாற்றாசிரியரும் நாவலரின் ஓர் 'வாரிசு'ம், நாவலர் கோட்டவாசியுமான ***ஆ.முத்துத்ததம்பிப்பிள்ளை 'பாலசந்திரன்'*** எனும் பத்திரிகையில், (3.12.1910) 'தமிழர் சீனரா''எனும் தலைப்பில் பின் வருமாறு முகப்புக் கட்டுரை வரைந்தார்.

''ஆரியனொருவனையும், சீனனொருவனையும், மலாயனொருவனையும், அமெரிக்க வேடனொருவனையும் காப்பிலியொருவனையும் நிரையே நிறுத்தி இவரெல்லாம் ஒரு சாதி மக்களா, பல்வேறு ஜாதியினராவென்று ஒருவனை வினவினால் அவன் இவ் ஐவரும் ஐ வேறு ஜாதியினரே என்று சிறிதும் கூசாது கூறுவனன்றோ. உலக மனுவர்க்கத்தாரெல்லாம் வடிவங் குணம் முதலியவற்றால் இவ்வைந்து காரணங்களில் அடங்குவர். (See Northan Antiquities Revised by F.A.Blackwel)

ஐரோப்பியருள் வட நாட்டிலுள்ள சிலரொழிய ஏனையரெல்லாம் வடிவங்குண முதலியவற்றில் ஆரியரின் வேறல்லர்.... அது போலவே தமிழ் நாட்டு மக்களும் ஆரியரின் வேறல்லர். அவரும் சீனரும் வடிவத்தால் ஒரு சிறிதும் ஒவ்வார்..... தமிழ் நாட்டு மக்கள் தமது சரீர அமைவால் ஆரிய மக்களின் வேறல்லர் என்பதும் சொல்ல வேண்டா''

நாம் ஆரம்பத்தில் குறிப்பிட்ட தமிழ் மொழி, இனம் பற்றி இந்நூற்றாண்டின் ஆரம்ப வருடங்களில் காணப்பட்ட இரண்டாவது கருத்துப் போக்கும் யாழ் உயர் சைவ வேளாளரிடமிருந்தே வெளிப்படுகிறது. இது மொழி, இனம் பற்றி அவ்வர்க்கத்தினுள் காணப்பட்ட இரண்டக நிலையையும் காட்டுகிறது எனலாம். நாம் ஏலவே கூறியது போல இக் கருத்தியற் போக்கானது தமிழின், தனித்துவத்தை ஒரு பழமையான சைவ இலக்கிய, இலக்கண மரபினூடாக நிலைநிறுத்த முற்படுகின்றது. சபாபதி நாவலருடைய ***''திராவிட பிரகாசிகை''*** (1899) இவ்வாறான ஒரு முயற்சியே என பேராசிரியர் சிவத்தம்பி குறிப்பிடுகின்றார். எனினும் 1900த்தின் பின் இக்கருத்தியல் போக்கானது மதுரைத் தமிழ் சங்கத்தினூடாக வெளிவந்து கொண்டிருந்த தமிழ் மீளெழுச்சிக் கருத்துக்களாலும், கணிசமான பாதிப்புக்குள்ளாகியிருந்தது என்பதை காணக்கூடியதாக இருக்கிறது.

மதுரைத் தமிழ்ச் சங்கம், நாவலரை ஒரு காலத்தில் ஆதரித்தவர்களும் சுவாமி விவேகானந்தர் அமெரிக்கா செல்ல உதவியவர்களுமான சேதுபதிகளால் போஷிக்கப்பட்டமை அதற்கும், அதன் கருத்துக்களுக்கும் யாழ். உயர் சைவ வேளாளர் மத்தியில், ஓர் வரவேற்பைகக் கொடுத்தது எனலாம். கால்டுவெல் பாதிரியாரின் திராவிட கோட்பாட்டினை புறக்கணித்துவந்த இந்து சாசனம் மதுரை தமிழ்ச் சங்கத்தின் 'செந்தமிழ்' ஏட்டில் தமிழின் தனித்துவம் பற்றி வெளிவந்த சில கட்டுரைகளை மீள் பிரசுரம் செய்து வந்தது. இந்த வகையில் முத்துத்தம்பிப்பிள்ளையின் கட்டுரையை வெளியிட்ட பாலச்சந்திரன் பத்திரிகையின் முதலாவது இதழிலிலும் 'தமிழ்' எனும் தலைப்பில் 'ஓர் தமிழன்' என தன்னை குறிப்பிடும் ஒருவர், தமிழ் அபிமானத்தை நோக்காகக் கொண்ட ஒரு நீண்ட முகப்புக் கட்டுரை வரைந்துள்ளார். இதில் அவர் வடமொழியிலிருந்தே தமிழ் வந்தது என நிறுவ முற்பட்ட பிரயோக விவேகம் எனும் இலக்கண நூலின் ஆசிரியர் சுப்பிரமணிய தீட்சிதர் (17ம் நூற்றாண்டு) சமஸ்கிருத சொல்லான 'திரமிளம்' என்பதில் இருந்தே 'தமிழ்' என்னும் சொல் வந்தது எனும் கருத்து தவறு என வாதிட்டு, அகத்தியம் பாணினி (சமஸ்கிருதத்தின் மூல இலக்கண ஆசிரியர்) வழித்தோன்றியது என கூறுபவரும், தொல்காப்பியத்தின் முதல்நூல் வடமொழி ஐந்திரம் என கூறுபவரும் தவறிழைக்கின்றனர் என்றும், இதற்குக் காரணம் '' அன்னோர் ஆரிய பாஷையிற் கொண்ட அபிமானமேயாம்'' என்றும் தமிழின் தனித்துவத்தையும் சிறப்பையும் விரிவாக எடுத்துரைக்கின்றார். இக்கட்டுரையாளரின் தமிழ் அபிமானம் அக்காலத்தில் படித்த இலங்கைத் தமிழர் மத்தியில் பரவலாக அறியப்பட்டிருந்த கால்டுவெல் வழி திராவிடக் கோட்பாட்டை முற்றாகத் தவிர்த்து சிவஞான முனிவர் போன்றோரின் மரபினைத் தன் அடித்தளமாகக் கொண்ட வெளிப்படுகின்றது. யாழ்.உயர் சைவ வேளாள மரபின் ஒரு சித்தாந்தரீதியான மற்றும் ஸ்தாபனரீதியான தளமாக இருந்து வந்த தமிழகத்தின் திருவாவடுதுறை ஆதினத் தலைவர்களாக 17ம் நூற்றாண்டில் இருந்த சுப்பிரமணிய தீட்ஷிதர் - வைத்தியநாத தேசிகர், சாமிநாத தேசிகர் ஆகியோர் தமிழ் மொழியின் இலக்கிய, இலக்கணங்கள் வடமொழியைப் பின்பற்றியே எழுந்தனவென்றும் சமஸ்கிருதமே தெய்வமொழி, பிற மொழிகளுக்கெல்லாம் தாயாக விளங்கும் மொழி என நிலை நாட்ட எடுத்த முயற்சிகளை மறுத்து, அதே மடத்தில் பிற்காலத்தில் பெரும் புலவராக இருந்த சிவஞான முனிவர் வடமொழியாளர் அஞ்சத்தக்க வகையில் மறுப்பெழுதி தமிழ் தனித்துவமானது என நிறுவினார். அக்காலத்தில் தமிழகமெங்கும் பலம் பெற்றுவந்த சுதேசிய இயக்கத்தினால் கவரப்பட்டு அதன் சுயபாஷைக் கல்வியே சுதேசிகளாவதற்கு அடித்தளம் எனும் கோஷத்தால் உந்தப்பட்டு ஆங்கிலக் கல்வியைவிட தமிழ்க் கல்வியே சிறந்தது என யாழ்ப்பாணத்தில் பிரச்சாரம் செய்ய முற்பட்ட

→15

டி.சிவராம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பாலம்

# கட்சி ஜனநாயகமும் தனிநபர் ஜனநாயகமும்

''ஜனநாயகமா? அதெல்லாம் பச்சைப் பொய்'' - இப்போதெல்லாம் சாதாரணமாக மக்களின் பேச்சில் அடிபடும் வார்த்தை இது! உண்மையிலேயே ஜனநாயகம் என்பது என்ன? அன்றைய, கிரேக்கர்களின், தனிநபர்கள் பலர் ஒன்று சேர்ந்து அனைவரது விருப்பத்தின் பேரில் முடிவுகளும், தீர்மானங்களும் எடுக்கப்படுவதை இவ்வாறு அழைத்தனர்.

ஆனால் இன்று உலகத்தின் தரம் சிக்கடைந்துள்ளது. இதனால் ஜனநாயகம் எனப்படும் கோட்பாடும் பல்வேறு வகைப்பட்டுள்ளதாக மாறியுள்ளது. அவ்வாறு பல் வேறு வகைப்பட்ட ஜனநாயகத்தை முக்கிய இரு பிரிவுகளுள் அடக்கலாம்.


1. கட்சி ஜனநாயகம்
2. தனிநபர் ஜனநாயகம்

இலங்கையில் வாழும் நாம், விஷேடமாக இளைய தலைமுறையினர் கட்சி ஜனநாயகம் தொடர்பாக ஆர்வத்துடன், கேள்வியெழுப்பத் தொடங்கியது 1971 கிளர்ச்சிக் காலகட்டத்திலேயே. அதன் பின்பு இது வட பகுதியில் உருவான போராட்டத்துடன் தொடங்குகிறது. அதற்கு பின்பு தெற்கில் மீண்டும் 1987 - 89 காலகட்டமும். இவ்வாறு கேள்விகளை எழுப்பிற்று. இக்கால கட்டங்கள் மூன்றிலும் இன்று உயிர்ப்புடன் இருப்பது வட பகுதிப் போராட்டம் மட்டுமேயாகும். ஏனைய இரண்டு போராட்டங்களும் இலங்கையிலுள்ள வளர்ச்சியடையாத முதலாளித்துவத்தினால் குரூரமான முறையில் அழித்தொழிக்கப்பட்டு விட்டன.

எவ்வாறெனினும் இன்று கட்சி ஜனநாயகமென்பது மிகுந்த கேலிக் கூததாகிவிட்டது.. ஐ.தே.கவை விரட்டியடித்துப் பொ.ஐ.முவை பதவியிலமர்த்துவதனூடாக இந்நாட்டில் ஜனநாயகம் நிலைபெறுமெனப் பலர் நினைத்தனர். ஆனாலும் அது (இன்னும் முழுமையாகக் கனவு முடிவு பெறாமையால் பலர் பொ.ஐ.முவை இடதுசாரி சார்பானதாக நினைத்துக் கொண்டுள்ளனர்.) உண்மையிலேயே இலங்கையில் வளர்ச்சியடையாத முதலாளித்துவம் எவ்வளவு ஜனநாயகத் தன்மை வாய்ந்ததென்பதை அறிவதற்கு அவ்வாறான (முதலாளித்துவ) கட்சியொன்றில் ஓரிரண்டு வருடங்கள் சேர்ந்து வேலை செய்து பார்க்க வேண்டும்! முதலாளித்துவக் கட்சிகள் மட்டுமல்ல இலங்கையின் இடதுசாரிக் கட்சிகள் எனக் கூறிக் கொள்ளும் கட்சிகளும் ''ஜனநாயகம்'' என்னும் கோட்பாட்டுக்கு குறைந்த மதிப்பையே வழங்குகின்றன. அதனால் இன்று இலங்கையில் இடதுசாரிக் கட்சிகள் முதலாளித்துவக் கட்சிகள் பாவித்து முடித்த மலசல கூடங்க [illegible]

இதற்கு உதாரணமாக அண்மையில் நடைபெற்ற சம்பவமொன்றைக் குறிப்பிடலாம். சிங்கள மொழியில் வெளிவரும். ''தியச'' (DHEYASA) சஞ்சிகையின் அண்மைய வெளியீட்டில் எல்லோரும் இடதுசாரிகள் என நினைக்கும் இரத்தினபுரி மாவட்ட பொ.ஐ.மு. பாராளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார ''நான் அரசாங்கத்தின் உறுப்பினர் அல்ல. நான் பொ.ஐ.முவின் உறுப்பினர்.'' ***அரசாங்கத்தின் அமைச்சர் பதவியொன்றைப் பெற்றுக் கொண்டு, நிறைவேற்றும் பொறுப்பொன்றை எற்றுக் கொண்டால் மட்டுமே என்னை அரசாங்கத்தின் உறுப்பினராகக் கருதலாம்''*** என்று தெரிவித்துள்ளார்.





நீண்ட காலமாக லங்கா சம சமாஜக் கட்சியிலும், நவ சம சமாஜக் கட்சியிலும் இருந்த இந்த இடதுசாரிக்கு '' அரசாங்கம்'' என்ற வசனத்துக்கான வரைவிலக்கணம் என்னவென மறந்து போய் விட்டது. அவர் (வாசுதேவ) கூறுவதன்படி, அரசாங்கத்திற்குப் பொறுப்பானவர்கள் ஜனாதிபதி, பிரதம மந்திரி, அமைச்சரவை அமைச்சர் அல்லது பிரதி அமைச்சர் பதவி வகிப்பவர்கள் மட்டுமேயாவர். ஆனால் ஒரு ஆரம்ப அரசியல் விஞ்ஞான மாணவர் கூட அரசாங்கக் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர் எனப்படுபவர் நேரடியாகவே அரசாங்கத்தின் பொறுப்புள்ள நபர் என்று தெளிவாகத் தெரிந்து வைத்திருப்பார்.



நிஷாந்த

அவர் தமிழ், முஸ்லீம், பறங்கியர் போன்ற இனக் குழுமங்கள் மீது அன்புள்ளவர் எனக் கருதுகின்றார்கள் என்பதே அக்காரணமாகும். ஆனால், அது நிஜமானதல்ல. ஏனெனில் வாசுதேவா அவ்வாறான மிக ஆழமான மார்க்சிய புரிதல் கொண்டவரென, என்னால் கூறமுடியவில்லை. அவர் ஒரு தீவிர சமூக ஜனநாயகவாதி மாத்திரமேயாவார். அதற்கு காரணம் அரசியல் விஞ்ஞானத்தில் அவ்வாறு கூறப்பட்டிருந்தாலும், அரசாங்கம் எனப்படுவது என்னவென இப் பாராளுமன்ற உறுப்பினர் எமக்குப் போதிக்கிறார். நான் வாசுதேவாவை உதாரணத்திற்கு எடுத்ததற்கு காரணம் உண்டு.

இந்நாட்டில் வாழும் அநேக முற்போக்காளர்கள், வாசுதேவாவை அவர் இருந்த நவ சம சமாஜக் கட்சி, இடதுசாரி கட்சியல்லவா? என யாராவது கூறக்கூடும். 'ஆம். அது உண்மை. இடதுசாரிக் கட்சி தான். ஆனாலும் உண்மையான மார்க்சிய வழிப்பட்ட கட்சியல்ல. அதனை விளங்கிக் கொள்ள வேண்டுமெனின் நவ சம சமாஜக் கட்சியில் வாசகர்களான நீங்கள் தமிழர் அல்லது முஸ்லிம் என்ற இன அடையாளத்தைப் பேணிக் கொண்டு ஓரிரண்டு வருடங்கள் தொடர்ந்து வேலை செய்துபார்க்க வேண்டும். அப்போது அது நடைமுறையில் விளங்கும்.

நாம் திரும்பவும் இலங்கையின் முதலாளித்துவக் கட்சிகளது ஜனநாயகம் பற்றி பேசுவோம். அவ் ஜனநாயகம் எவ்வளவு பலமற்றதெனில் முன்னாள் பிரதம மந்திரி ரணில் விக்ரமசிங்ஹவுக்கு அதிகாரப் பரவலாக்கல் செய்ய ஒருமைப்பாடொன்றிற்கு வர வேண்டியுள்ளது. அவர் பண்டாரநாயக்க நினைவு சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் பின்வருமாறு கூறினார்.

***''உத்தேச அரசியலமைப்புச் சட்ட சீர்திருத்தங்களில் அரசாங்கம், எதிர்கட்சி மற்றும் ஏனைய அரசியல் கட்சிகள் பொது நிலைப்பாடொன்றுக்கு வந்து சிறுபான்மை இனங்களுக்கு வழங்கும் அதிகாரங்கள் தொடர்பாக குறிப்பான ஒருமைப்பாடொன்றுக்கு வர வேண்டும்.''***

ரணிலுக்குப் பைத்தியமா? அல்லது எனக்குப் பைத்தியமா என்று எனக்கு புரியவில்லை. இதனை ரணில் அரசாங்கத்தில் (ஆளும் கட்சியில்) இருக்கும் போது விளங்கிக் கொள்ளதாது ஏன்? ரணில் இவ்வாறு கூறுவதற்கான காரணம் அரசியல் லாப நோக்கிலானதென்றே நான் கருதுகின்றேன். எந்த முதலாளித்துவ அரசாங்கமும் உடைந்து விழும் போது கொஞ்சம் ஜனநாயகத்தை அள்ளி வழங்குகிறது. இது அவ்வரசாங்கத்தை பலமடைய செய்கிறது. ரணிலும் அதனையே செய்யவுள்ளார். இவர்கள் கூறும் ஜனநாயகம் இது தான்.

ரணில் கட்சி ஜனநாயகம் பற்றி இவ்வாறு புகட்டும் போது தமிழீழ விடுதலைப் புலிகள் பின்வருமாறு கூறுகிறனர்.

***''சமாதானம்; அதனைச் சந்திரிகாவினால் பெற்றுக் கொடுக்க முடியுமா?''***

உண்மையிலேயே தமிழீழ விடுதலைப் புலிகள் தமது ''தமிழீழம்'' எனப்படும் வெளியீட்டில் கூறியுள்ளது ''சந்திரிகாவினால் சமாதானத்தைப் பெற்றுக் கொடுக்க முடியுமா? '' என்பது தான் என்றால் எனக்குத் தமிழீழ விடுதலைப் புலிகளிடம் கேட்க வேண்டிய பிரச்சினையொன்று உள்ளது. அதாவது ''நீங்கள், உண்மையிலேயே சந்திரிகாவினால் சமாதானத்தை ஏற்படுத்த முடிந்தால் அதற்கு இடகொடுப்பீர்களா?''

கட்சி ஜனநாயகம் கடிகாரத்தின் மணிக்கூட்டின் கம்பிகள் போல் மாறுபடுகின்றது. இலங்கையில் பி.ப.1.00 மணிக்கு இருந்த ஜனநாயகம் பி.ப.5.00 மணிக்கு முழுமையாகவே மாறுபடுகிறது. அதே போல் மு.ப.6.00 மணிக்கு உள்ள ஜனநாயகம் சிவப்பு நிறமானால் பி.ப.3.00 மணியாகும் போது அது பச்சை நிறமாகிறது. அவ்வளவு தூரம் இலங்கையில் ஜனநாயகம் நெகிழ்த்தன்மை (Flesible) வாய்ந்ததாக உள்ளது.

இவ்வாறுதான் இலங்கையில் தனிநபர் ஜனநாயகமும். அது சிங்கள, தமிழ், முஸ்லீம் பேதங்களைக் கடந்து போயுள்ளது. எவ்வளவு தூரம் கடந்து சென்றுள்ளது என்றால் சாதாரணமாக எந்தவொரு சமூகத்தினதும் அடிப்படையாகவுள்ள மனித விழுமியங்களைக் கூட இல்லாது செய்யுமளவுக்கு போயுள்ளது. அதனை இப்படிக் கூறலாம்.

''ஜனநாயகம் பற்றி மேடைகளில் போதிப்போர் தமது நுண்ணிய வாழ்வில் (Micro -Life) ஜனநாயக விரோதமாகச் செயற்படுகிறனர். மேடைகளில் சந்திரிகாவுக்கு ஜனநாயகம் என்றால் என்னவெனக் கூறுபவர் வீடு சென்றதும் சிறு பிரச்சினையொன்று ஏற்பட்டதும் தனது மனைவியை இரத்தம் வரும் அளவிற்கு அடிப்பார்.

✱ இனங்களுக்கு ஜனநாயகம் வழங்க வேண்டுமெனக் கூறும் நபர் த்மது வீட்டில், ஒரே கூரையின் கீழ் வாழும் நண்பருக்குப் பின்வருமாறு பயமுறுத்தல் விடுக்கிறார். ''யாழ்ப்பாணத் தமிழர்கள் இப்படித் தான்'' இனவாதத்திற்கெதிராக அவர் ஏசும் போது பிரதேசவாத இனப் பாகுபாடான சொற்களைப் பாவிப்பார்.

இவைகளையெல்லாம் பார்த்ததும் எவரும் நினைப்பது ''ஜனநாயகம் '' என்பது பச்சைப் பொய் எனவாகும்.

சமூக விஞ்ஞானியான இவான்ஸ் பிறிற்சாட்டின் (Evans Prichard) பிரித்துப் பார்ப்பின்படி அரைச் சமூகக் குழுக்கள் சமூகத்தில் உள்ளன. அவர்களை ஒரு விதமானவர்களாக (Mob) என அறிமுகப்படுத்தலாம். இவர்களுக்கு குறிக்கப்பட்ட கடமையேதும் இல்லை. சமூகத்தில் தமக்குள்ள பங்கு என்னவெனவும் தெரியாது. அவ்வாறுதான் இன்று இலங்கையில் நுண்ணிய அரசியல் (micro - politics) செயற்படுகிறது.

இவையனைத்திற்கும் அத்திவாரமாகவுள்ளது அதிகாரமாகும். அதிகாரம் என்றால் அரசியல், சிவில் (civil) அதிகாரம் என இரண்டு உள்ளன. இவ் அதிகார வியூகங்கள் (Structure) இரண்டும் தொற்று நோய் போல் முழு இலங்கையிலுமே பரவியுள்ளன. இந்நிலைமையை இனங் காணாவிட்டால் இன ஒற்றுமை, பெண்நிலைவாதம், சாதிப் பாகுபாடு, பிரதேசவாதம் போன்றவற்றிற்கு கிடைக்கும் விடை பயங்கரமானதாகக் கூடும்.


''அரசியல் என்பது எமது வாழ்வை ஒழுங்குபடுத்தும் ஒன்றேயன்றி உலகத்தைக் குழப்பும் ஒன்றல்ல.''

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# புதிய அரசியலமைப்பும் முஸ்லீம்களது பாதுகாப்பும்



இலங்கை முஸ்லீம்கள் நிகழும் அரசியலில் திருப்திகரமான கவனத்தைக் கவராத சமூகப் பிரிவினராகவே கணிக்கப்பட்டு வருகின்றனர். இப்பிரிவினருக்கு தலைமை கொடுக்கப்போவதாக அடையாளப்படுத்தியவர்கள் பேரினவாத கட்டுக்குள் சிறைப்பட்டும், முதலாளித்துவ நலன்களுக்கு ஈடுகொடுத்தும் விலை போயிருக்கிறார்களேயன்றி முஸ்லீம்களது அபிலாசைகளை நிறுவனரீதியாக அடைந்து கொள்வதில் வெளிப்படையான தோல்விகளையே அனுபவித்து வருகிறார்கள். இவ்வாறான சூழ்நிலையில் புதிய அரசாங்கம் அரசியலமைப்பு சீர்திருத்தப் பணிகளில் ஈடுபட்டு வருவதினை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. உத்தேச அரசியல் சீர்திருத்தத்தில் முஸ்லீம்களது நலன்களும், அபிலாசைகளும் முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டும் என்பதனை உணர்ந்திருத்தல் அவசியமாகும்.

இலங்கையில் இனப்பிரச்சினை பொதுவாக தமிழ் மக்களுக்குள், சிங்கள மக்களுக்கும் இடையிலான போராட்டமாகவே கருதப்பட்டு வருகின்றது. ஆயினும் இவ்விரு சாரார்களுக்கும் இடையில் இலங்கை முஸ்லீம்கள் குறிப்பாகக் கிழக்கு முஸ்லீம்கள் சம்பந்தப்பட்டும் உள்ளனர்.


சிங்களப் பேரினவாத அடிப்படைகளைக் கொண்ட தேசியக் கட்சிகள் என்று நம்பப்படும் ஐ.தே.கட்சி சுதந்திரக் கட்சி ஆகியன முஸ்லீம்களது நலன்கள் விவகாரத்தில் திருப்திகரமான பங்களிப்பைச் செய்யவில்லை எவரும் ஒப்புக் கொள்வது அதிகக்கஷ்டமானதல்ல.

தமது கட்சியில் அங்கம் வகிக்கும் ஒட்டுண்ணிகளுக்கு அமைச்சர் பதவிகள் வழங்கியும், முஸ்லீம் கிராமங்களில் பாதை திறந்தும், மின்சார வசதி கொடுத்தும் முஸ்லீம்களை இவ்விரு கட்சிகளும் தந்திரோபாயமான முறையில் ஏமாற்றி வந்துள்ளன.

இத்தகைய கவர்ச்சிகரமான ஏமாற்றுக்களின் ஊடாக முஸ்லீம்கள் பாரதூரமான தோல்விகளைச் சந்தித்து உள்ளனர். அதேவேளை முஸ்லீம்கள் வாழும் பகுதியில் குறிப்பாக கிழக்கில் சிங்களக் குடியேற்றம், முஸ்லீம்களது காணிகளை பறித்தல், முஸ்லீம்களுக்கான உயர் கல்வி வாய்ப்பு, வேலை மறுப்பு ஆகியன மிகவும் வெற்றிகரமாய் நடந்து முடிந்துள்ள சமாச்சாரங்களாகும். இத்கைய சமூக அநீதிகளே சிங்களப் பேரினவாத கட்சிகள் முஸ்லீம் சமூகத்துக்கு நன்கொடையாக்கிய இறுதிப் பரிசுகளாகும்.

சிங்களப் பேரினவாதத்தின் இக்கொடூரமான அரசியலுக்கு அப்பால் தமிழ்த்தேசியவாதிகள் முஸ்லீம்களுக்கு வழங்கிய ஒத்துழைப்புக்கள் ஒன்றும் சாதகமானதல்ல.

தமிழ்த்தேசியப் போராட்டம் 80களின் பிற்பகுதியில் தமிழ்க் குறுந்தேசியவாதப் போக்கைப் பிரதிபலித்துக் காணப்பட்டது. பொது எதிரிக்கு எதிராக சகல சிறுபான்மை பிரிவினரையும் ஐக்கியப்படுத்த வேண்டிய தமிழ் சக்திகள் முஸ்லீம்களைத் தமது வணக்கஸ்தலத்தில் வைத்தே பட்டப்பகலில் கொன்று குவித்து வீரம் காட்டினர். அத்துடன் வடபகுதி முஸ்லீம்களை 24 மணித்தியாலத்திற்குள் ஒரு இரவில் விரட்டி சாதனை செய்தனர்.



இவற்றுக்குக் கூறப்பட்ட அன்றைய நியாயம் பாதுகாப்பு சம்பந்தப்பட்டது ஆகும். இத்தகைய கேலிக்குரிய காரணங்களுக்கான விலையினை தமிழ் குறுந்தேசியவாதம் இன்றுவரை செலுத்தியே வருகின்றது.

இத்தகைய முரண்பாடான சூழலில் முஸ்லீம் காங்கிரஸ் முஸ்லீம் தேசியத்தின் மீது இலகுவான முறையில் ஏறி அமர்ந்து கொண்டது. சிங்களப் பேரினவாதக் கட்சிகள் தமிழ்த் தேசிய கட்சிகள் அல்லது இயக்கங்களால் ஏமாற்றப்பட்ட முஸ்லீம்கள் தமது நலன்களுக்காக குரல் கொடுக்கும் ஒரு கட்சியினை நம்பியது பிழையாகாது. முஸ்லீம் காங்கிரஸ் முஸ்லீம் தேசியத்தை முதன்மைப் படுத்தி முஸ்லீம்களுக்கு எல்லாம் எடுத்துத்தரும் ஒரு கட்சி என அப்பாவித்தனமாக நம்பியது பிழையானது என்று தெளிவாகுவதற்கு அதிக நாட்கள் பிடிக்கவில்லை.

சிங்களப் பேரினவாதத்திற்கும் மனித முகத்தை ஆரம்பத்தில் அணிவித்தவர் திரு.ரணசிங்க பிரேமதாசாவே ஆவார். இவரது மனித முகத்திற்குள் இருக்கும் மிருக முகத்தை அல்லது சிங்களப் பேரினவாதத்தை பிரேமதாசாவின் சீடர்களான முஸ்லீம் அமைச்சர்கள் புரிந்து கொள்வதில் தோல்வி அடைந்தார்கள் என்றால் முஸ்லீம் காங்கிரஸின் தேசியத் தலைவர் என்று தன்னைத் தானே சொல்லிக் கொள்ளும் 'பரிசுத்தத் தலைவர்' அஷ்ரப் அவர்களும் அதே அனுபவத்தையே பெற்றுக் கொண்டார். இவர் ஒருபடி மேலே சென்று ''பிரேமதாசா முஸ்லீம்களின் நண்பர்'' என்றெல்லாம் புகழ்ந்து தள்ளினார். அஷ்ரப் இவ்வாறு புகழ்ந்து கொண்டிருக்கும் வேளையில் கொழும்பில் முஸ்லீம்களது பாரம்பரிய நிலங்கள் அபகரிக்கப்பட்டு ஆடம்பரமான மாடி வீடுகள் அரங்கேறின. அஷ்ரப்பின் சொந்த மாவட்டமான அம்பாறையில் சிங்களக் குடியேற்றங்கள் அமைதியான முறையில் ஒழுங்கு படுத்தப்பட்டன. இவற்றையெல்லாம் கண்டும் காணாததுமாக அஷ்ரப் அவர்கள் செயல்பட்டு அமைச்சுப் பதவிக்காய் ஆலாப் பறந்தார். 1989 ஜனாதிபதித் தேர்தலில் திருமதி பண்டாரநாயக்காவுக்கு வாக்களிக்க வேண்டாம் என்று முஸ்லீம்களை பகிரங்கமாய் வேண்டிக் கொண்டார். தொண்டமானைப் போல் பிரேமதாசாவிற்கு முஸ்லீம் வாக்குகளை பெற்றுக் கொடுப்பதிலேயே அஷ்ரப் குறியாக இருந்தார். ஆயின் முஸ்லீம் தேசியம் மட்டும் அநாதை போல் ஓரமானது.

முஸ்லீம்களைப் பொறுத்தவரையில் முஸ்லீம் தேசியம் என்பது விபத்துபூர்வமானதல்ல. முஸ்லீம்கள் நீண்டகாலமாய் ஒடுக்கப்பட்ட சூழ்நிலையில் ஆர்த்தெழுந்த சுலோகமே முஸ்லீம் மாகாணசபையாகும். இத்தகைய முஸ்லீம் மாகாண சபையினை முஸ்லீம்கள் சிங்களவர்களிடமிருந்தோ தமிழர்களிடம் இருந்தோ கடன் பெற்று வாங்க வேண்டிய அவசியம் இல்லை.

அரசியல் அமைப்பு என்பது ஒரு நாட்டின் மிகப்பெரிய சட்டமாகும். அந்தச் சட்டத்தில் அடங்கியுள்ள விடயங்கள் பெறுமதியானவை.



> தமது கட்சியில் அங்கம் வகிக்கும் ஒட்டுண்ணிகளுக்கு அமைச்சர் பதவிகள் வழங்கியும், முஸ்லீம் கிராமங்களில் பாதை திறந்தும், மின்சார வசதி கொடுத்தும் முஸ்லீம்களை இவ்விரு கட்சிகளும் தந்திரோபாயமான முறையில் ஏமாற்றி வந்துள்ளன.

வெறுமனே முஸ்லீம் மாகாணசபையினை ஏற்றுக் கொள்வதென்ற வாதமானது ஏற்புடையதல்ல.

புதிய அரசாங்கம் அஷ்ரப்பின் நம்பிக்கையைப் பெற்றுள்ளது. திருமதி சந்திரிகா பேரினவாதத் தலைவரே அல்ல என்று வேறு முஸ்லீம் காங்கிரஸ் கத்திச் சொல்கிறது. ஆயின் முஸ்லீம் மாகாணசபையினை ஏற்றுக் கொள்வது தொடர்பாக திருமதி சந்திரிகா ஒரு வார்த்தை சாதகமாகக் கூறவில்லை என்பதும் கவனிக்கத்தக்கது. இவ்வாறான சூழ்நிலையில் முஸ்லீம்கள் தமது கோரிக்கை தொடர்பாக விழிப்பாக இருக்கவேண்டிய தேவை உள்ளது.

புதிய அரசியல் அமைப்பு சீர்திருத்தம் இனப்பிரச்சினைக்கான தீர்வுக்காய் சில புது அம்சங்களைப் புகுத்திக் கொள்ளும் என்பது பலரது நம்பிக்கையான எதிர்பார்ப்பு ஆகும்.

அவ்வாறாயின் முஸ்லீம் மாகாண சபை ஒன்றினை புதிய அரசியல் யாப்பு பிரேரித்தலும் பிரதானமான தாகும். வட கிழக்கு இணைப்பு என்பது ஒரு கட்டாயத் தேவையாகும். வடகிழக்கை இணைக்காது ஆரம்ப பத்தீர்வுகளையும் அடைய முடியாது. வடகிழக்கு பிரிப்பு என்பது தமிழ் தேசியத்தை கூறு போடுவதற்கே உதவும் இவ்வாறான செயற்பாடானது ஒருங்கிணைந்து கண்டிக்கப்பட வேண்டியதும், நிராகரிக்கப்பட வேண்டியதுமாகும்.

இணைந்த மாநிலத்தில் முஸ்லீம் பிரதேசங்களை உள்ளடக்கிய முஸ்லீம் அலகு முஸ்லீம்களது பாதுகாப்பை சுயகௌரவத்தை உறுதிப்படுத்தும். உத்தேச முஸ்லீம் நிர்வாக அலகு சம்மாந்துறை, பொத்துவில், கல்முனை தேர்தல் தொகுதிகளை அடிப்படையாகக் கொண்டு அமைதல் வேண்டும். இவ்வலகுக்குள் மட்டக்களப்பு மாவட்ட, திருமலைமாவட்ட முஸ்லீம்களையும் இணைப்பது கடினமாகாது. கொழும்பிலுள்ள மத்திய நிர்வாக அலகுக்குள் மட்டக்களப்பு, திருமலை நிர்வாகங்கள் ஒன்றிணைக்கப்பட முடியுமானால் அம்பாறை மாவட்டத்தில் அமைந்துள்ள முஸ்லீம் நிர்வாக அலகுக்குள் மட்டக்களப்பு, திருமலை முஸ்லீம் நிர்வாகம் இணைக்கப்படுவது அதிக சிரமத்திற்கு உள்ளாகாது ஆயின் வட பகுதி முஸ்லீம்களை உத்தேச முஸ்லீம் அலகுக்குள் இணைப்பது தொடர்பாக வடபகுதி முஸ்லீம்கள் தீர்மானிக்க வேண்டும். அதே வேளை உத்தேச முஸ்லீம் அலகு வடகிழக்கு மாகாணத்தின் கீழ் இயங்குவதா இல்லையா என்பதினை முஸ்லீம் நிர்வாக அலகு முடிவெடுக்க வேண்டும்.

வடகிழக்கு மாகாணத்தில் முஸ்லீம்கள் சிதறி வாழும் பகுதியில் முஸ்லீம் கிராமசேவகர் பகுதிகள், முஸ்லீம் கிராமசேவகர்கள் நியமிக்கப்படல் வேண்டும். அத்துடன் முஸ்லீம் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளை ஏற்படுத்துவதும் முஸ்லீம்களது நிர்வாகத்திற்கு உதவியாக அமையும். இதே நிலை வடகிழக்கிற்கு வெளியே வாழும் முஸ்லீம்களுக்கும் பொருந்தும்.

முஸ்லீம்கள் மேல்மாகாணத்திலும் தென்மாகாணத்திலும் சில இடங்களில் கணிசமான அளவு செறிந்து வாழ்கின்றனர். இவ்வாறான பிரதேசங்களில் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகள் ஏற்படுத்தப்படுவது முஸ்லீம்களது பாதுகாப்பை உறுதிப்படுத்தும்.

அத்துடன் முஸ்லீம்கள் அதிகமாக வாழும் இலங்கையின் சகல பகுதிகளிலும் முஸ்லீம் பொலிஸ் அத்தியட்சகர்கள், முஸ்லீம் பொலிஸார் நியமிக்கப்படுவதுடன் இந்நடவடிக்கைகள் தமிழில் தொடரப்படல் வேண்டும்.

அரசியல் அமைப்புரீதியாக இந்த நிவாரணங்கள் உத்தரவாதமாகுதல் வேண்டும். தமிழர் பிரச்சினைக்கு தீர்வை முன்வைக்கும் இடத்தில் முஸ்லீம்களது நலன்கள் பாதுகாக்கப்படுதல் வேண்டும். முஸ்லீம்களை புறக்கணித்து புது அரசாங்கம் தீர்வினை முன்வைக்கும் இடத்து அது நிரந்தர அமைதிக்கு வழிகோலப் போவதில்லை.


ஆர்.எம்.இம்தியாஸ்

www.tamilarangam.net



# மட்டக்களப்பு பொது வைத்தியசாலை:

## ஊழல்களின் இருப்பிடம்!




சத்தியேந்திரா

கிழக்கு மாகாணத்தின் ஒரே ஒரு பொது வைத்தியசாலையாக உள்ள மட்டக்களப்பு பொது வைத்தியசாலை தற்போது ஊழல்கள் மலிந்த ஒரு வைத்தியசாலையாக விளங்குகின்றது.

தனியார் வைத்தியசாலைகளில் அதிக பணம் கொடுத்து வைத்தியம் செய்ய வழியில்லாமல் வைத்தியசாலையையே தஞ்சம் என வந்தடையும் ஆயிரக் கணக்கான நோயாளிகளைப் பாதிப்பதாக இவர்களுடைய நடவடிக்கைகள் அமைந்துள்ளன. முக்கியமாக மட்டக்களப்பு வைத்தியசாலையில் நடைபெறும் ''கிளினிக்''லேயே நோயாளர் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர். இங்கு நடைபெறும் கண் கிளினிக்கில் தங்களைக் காட்டி மருந்து எடுப்பதற்காக அம்பாறை மாவட்டத்தில் இருந்தும், மட்டக்களப்பும் மாவட்டத்தில் மிகத் தொலைவில் பின் தங்கிய கிராமங்களில் இருந்தும் நோயாளர்கள் வருவது இயற்கை. இவர்கள் கிளினிக் நடைபெறும் நாளுக்கு இரண்டு நாட்களுக்கு முன்பே தங்களது வீட்டை விட்டுப் புறப்பட்டு ஒருநாள் பிரயாணத்திலும், மறுநாள் வைத்தியசாலையில் தங்கி நின்று தான் கிளினிக்கிற்கு செல்வதற்கு இலக்கம் எடுக்க வேண்டியுள்ளது. மீண்டும் கிளினிக் கழிந்து ஒரு நாள் பிரயாணம் செய்தே வீடு போய்ச் சேர வேண்டியுள்ளது. மொத்தத்தில் நான்கு நாட்களைச் செலவழித்தே கிளினிக்கிற்கு வர வேண்டி ஏற்படுகின்றது. இதற்கிடையில் நான்கு நாட்களுக்குமான சாப்பாட்டுச் செலவு மற்றும் ஏனைய செலவுகள் என பல்வேறு வகையிலும் நோயாளிகள் கஷ்டப்பட்டாலும் உரிய பலனைப் பெறமுடியாது போகின்றது. இரவிரவாகத் தங்கிநின்று கிளினிக்கிற்கு 'நம்பர்' எடுக்க நோயாளிகள் காத்திருக்கும் போது, வைத்தியசாலையில் கடமையாற்றும் ஊழியர்கள் தங்களுக்கு வேண்டியவர்களுக்கு அல்லது பணத்தைப் பெற்றுக் கொண்டு கிளினிக்கிற்கு நம்பர் எடுத்துக் கொடுக்கும் கைங்கரியத்தையும் செய்து வருகின்றனர். இவர்கள் வரும்போது கையில் நான்கைந்து கற்களுடன் வருவார்கள். நம்பர் எடுப்பதற்காக வருபவர்கள் இருப்பதற்கான வரிசையில் போடப்பட்டிருக்கும் வாங்குகளின் மீது அக்கற்களை வைத்து விட்டு அவ்விடங்களில் ஆட்கள் இருப்பதாகவும் அதில் யாரும் இருக்கக்கூடாது எனவும் ஏனையோரை எச்சரித்து விட்டுச் செல்வார்கள். பாவம் அப்பாவி நோயாளிகளும் இவர்களுக்குப் பயந்து அவ்விடங்களில் யாரையும் உட்கார விடாது இடத்தைப் பாதுகாத்துக் கொடுக்க, பின்பு யாருக்காக அந்த இடங்கள் பிடிக்கப்பட்டதோ அவர்கள் ஒய்யாரமாக சாவகாசமாக வந்து கிளினிக் முடித்து விட்டுச் செல்வதெல்லாம் ஒரு சாதாரண நடவடிக்கையாக இன்று மாறிவிட்டது. இப்போதெல்லாம் கிளினிக்கிற்கு நம்பர் எடுக்கச் செல்லும் நோயாளிகளெல்லாம் நமக்கு முன் எத்தனை கற்கள் இருக்கின்றதோ என்று பரபப்புடன் செல்வதையே காணமுடிகின்றது. வெறும் கற்களுக்கு இந்த மகிமையைக் கொடுத்த பெருமை மட்டக்களப்பு வைத்தியசாலையையே சாரும்.

இது ஒருபுறம் இருக்க, இப்படியெல்லாம் கஷ்டப்பட்டு இடம்பிடித்து ஒரு வழியாக வைத்தியரையும் சந்தித்து தங்கள் வருத்தங்களைச் சொல்வதற்கு முன்பே வைத்தியரால் எழுதிக் கொடுக்கப்பட்ட மருந்துத் துண்டை எடுத்துக் கொண்டு மருந்து எடுக்குமிடத்திற்குச் சென்றால் அங்கு அடுத்த சோதனை. மருந்து எடுப்பதற்காகக் கால் கடுக்க நோயாளி வரிசையில் நின்று கொண்டிருக்க வைத்தியசாலை ஊழியர்கள் ஆள் மாறி ஆள் துண்டுகள்ளக் காட்டி மருந்து எடுத்து யார் யாருக்கோவெல்லாம் கொடுப்பதையும் இவ் அப்பாவி நோயாளிகள் சகித்துக் கொள்ளத் தான் வேண்டும்.

இவை எல்லாவற்றிக்கும் மேலாக வைத்தியர் எழுதித் தருகின்ற மருந்தை மருந்து கொடுக்கும் "Pharmacist" கொடுக்காமல் விடுவது தான் பெரிய கொடுமை. வருத்தத்திற்குரிய முக்கிய மாத்திரையைக் கொடுக்காமல் மற்றைய சாதாரண மாத்திரைகளை மாத்திரம் கொடுத்து ஆட்களைக் கடத்திவிடும் இவர்கள் இவ்வாறு கொடுக்காமல் விட்ட முக்கிய மாத்திரைகளை தனியார் வைத்தியசாலைகளுக்கு விற்று விடுகின்றார்கள் என்று தெரியவந்துள்ளது. அண்மையில் இருதய நோய்க்கு மருந்து எடுக்க வந்த ஒரு படித்த நோயாளிக்கு உரிய மாத்திரை கொடுக்கப்படவில்லை என்பதை அவர் வீட்டுக்கு வந்த பின்பே அவதானித்துள்ளார். உடனே அவர் திரும்பச் சென்று அம்மாத்திரையைக் கேட்ட போது அவ்வாறான மாத்திரை எழுதப்படவில்லை என்று கூறியுள்ளார். இவர் விடாப்பிடியாக மருந்துத் துண்டை எடுத்துக் காட்டச் சொல்லிக் கேட்க வேறுவழியின்றி மருந்துத் துண்டைப் பார்த்த போது அதில் குறிக்கப்பட்ட மாத்திரை எழுதியிருந்தது. தன்னுடைய களவை மறைக்க அந்த மாத்திரை கையிருப்பில் இல்லை என அடித்துக்கூறி அம்மாத்திரையை வெளியில் காசு கொடுத்து வாங்கும்படி கூறியுள்ளார் அவர். ஆனால் உண்மையில் அம்மாத்திரை அன்று வைத்தியசாலையில் இருந்துள்ளது. பின்பு ஏனையோருக்குக் கொடுக்கப்பட்ட மாத்திரைகளில் இருந்து இது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. எவ்வளவோ கஷ்டங்களுக்கு மத்தியில் மருந்து எடுக்க வரும் நோயாளிகள் இப்படியெல்லாம் கஷ்டப்பட்ட பின்னரே அரைகுறை மருந்துகளுடன் வைத்தியசாலையை விட்டுச் செல்ல வேண்டியுள்ளது.



இவ்வாறான செயற்பாடுகள் கடந்த வருடத்திலும் இருந்த போதும் அப்போதிருந்த வைத்தியசாலை மதியுரைக் குழுவினரால் ஓரளவிற்கு கட்டுப்படுத்தப்பட்டு வந்தது. இம்மதியுரைக்குழுவினரின் காலமும் கடந்த பொதுத் தேர்தலுடன் காலாவதியானதைத் தொடர்ந்து வைத்தியசாலை ஊழியர்கள் கேட்க யாருமின்றி தாங்கள் நினைத்தவற்றையே இன்று செய்வதைக் காணமுடிகின்றது.

இக்கொடுமையில் இருந்து நோயாளிகளை யார் பாதுகாப்பது? விரைவில் புதிய ''வைத்தியசாலை கண்காணிப்புக்குழு'' நியமிக்கப்பட்டால் இவற்றிற்கு ஓரளவாவது தீர்வு காணலாம். இவ்விடயத்தை பாராளுமன்ற உறுப்பினர்களாவது அப்பாவி நோயாளிகள் மீது கருணை கொண்டு செய்வார்களா?

வைத்தியசாலையில் அவசர நோயாளிகளை ஏற்றி இறக்கவெனப் பயன்படுத்தப்படும் அம்புலன்ஸ் வண்டிகள் அநேகமாகக் கொழும்பிற்கு ஒரு நோயாளியைக் கொண்டு செல்லும் போது அந்நோயாளியுடன் குறைந்தது ஐந்து கொழும்பு செல்லும் பிரயாணிகளையாவது ஏற்றாமல் செல்வதில்லை. இதற்கேற்றவாறு அம்புலன்ஸ் வண்டியில் பொறுப்பாகச் செல்லும் ஊழியர் ஆட்களிடம் பணத்தைப் பெற்றுக் கொண்டு தயாராக இருப்பார். இவ்வாறான நடவடிக்கைகள் பல தடவை சுட்டிக்காட்டப்பட்டும் இன்றும் இதே நிலை தொடர்ந்து கொண்டேதான் இருக்கின்றது. அத்தோடு அம்புலன்ஸ் வண்டிகள் வைத்தியசாலை உத்தியோகத்தரின் பிள்ளைகளைப் பாடசாலைக்குக் கொண்டு செல்வதற்கும், சமயத்தில் கொண்டாட்டங்களுக்கு குடும்பத்தாருடன் செல்லவுமே பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

அடுத்து மட்டக்களப்பு வைத்தியசாலையில் நிலவுகின்ற மிகப் பெரிய குறைபாடு வைத்தியசாலையின் சுகாதாரம் சம்பந்தப்பட்ட விடயமாகும். மிகவும் சுகாதாரமான முறையில் இருக்க வேண்டிய வைத்தியசாலை இன்று அதற்கு நேரிடையாகக் காட்சியளிக்கின்றது. வைத்தியசாலைக் கழிவுகள் சரியாக அகற்றப்படாமல், அக்கழிவுகளே வைத்தியசாலைக்கு வருபவர்களுக்கு நோயை ஏற்படுத்துபவையாக இருக்கின்றன. சிலசமயம் இக்கழிவுகளுடன் குறைப்பிரசவத்தில் பிறந்து இறந்த சிசுக்களும் காணப்படுவது சாதாரணமாகி விட்டது. வைத்தியசாலையில் வாட்டுகளில் தங்கியிருக்கும் நோயாளிகளுக்கு சமைத்துக் கொடுக்குமிடம் எல்லாவற்றையும் விட மிக மோசமாகக் காட்சியளிக்கின்றது. 'வௌவால் எச்சமும், நாய், பூனைகளின் இருப்பிடமாகவுமே இச்சமயலறை காட்சியளிக்கின்றது.

இதேபோன்று நோயாளிகள் தங்கியிருக்கும் வார்ட்டுக்களும் நாய்கள் குடித்தனம் நடாத்துகின்ற இடமாகவே காட்சியளிக்கின்றன. இந்நாய்கள் குட்டி ஈன்றிருக்கும் வேளையில் அவ்வழியால் செல்லும் நோயாளிகளைத் துரத்திக்கடிப்பதும் இங்கு நடைபெறுகின்ற ஒரு விடயம்.

வைத்தியசாலையின் இன்னுமொரு முக்கிய குறைபாடாக இங்கு நிலவுவது, பிரேத அறைக்கு குளிரூட்டி வசதியின்மையாகும். கடந்த பல வருடங்களாக இக்குறைபாடு இங்கு நிலவுகின்றது. மாறி மாறி வந்த அமைச்சர்களும் இங்கு வருவதும், உறுதிகளை வழங்குவதும் வழக்கப்பட்டுப் போன ஒரு விடயமாகிவிட்டது. இறந்தவர்களின் உடலை சரியான முறையில் பாதுகாக்க முடியாமல், துர்நாற்றம் வீசும்வரை இறந்த உடல்களை இங்கு வைத்துப் பின்னர் உற்றார் உறவினர் அவ்வுடலைப் பொறுப்பேற்கும் போது படும் அவஸ்தை கொஞ்சநஞ்சமன்று.

இவ்வளவு குறைபாடுகளுக்கும், சீரற்ற நிர்வாகத்திற்கும், ஊழலுக்கும் பெயர்போன மட்டக்களப்பு வைத்தியசாலை மிகவிரைவில் போதனா வைத்தியசாலையாகத் தரமுயர்த்தப்பட இருப்பதாக கடந்த இரண்டு வருடமாகக் கதை அடிபடுகின்றது. ஆனால் நடைமுறையில் எதுவுமே இல்லை.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



1971ம் ஆண்டு மலையக இளைஞர் பேரவையை ஆரம்பித்தவர்களுக்கும் வி.எல்.பெரேராவுக்கும் ஏற்பட்ட முரண்பாட்டால் ஆரம்பகர்த்தாக்கள் வெளியேறும் நிலை உருவாகியது. மலையக இளைஞர் பேரவையை திரு.வி.எல்.பெரேரா தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து, தனக்கு துதிபாடுவோரை தன்னோடு இணைத்துக் கொண்டார்.

ரும் அடங்குவதை மறுக்கமுடியாது. தங்களின் பணத்தால், அதிகாரத்தால், மயக்கும் வார்த்தைகளால் தங்களை மறைத்துக் கொண்டு நீண்டகாலமாக இருப்பதோடு மட்டுமல்லாமல் தங்கள் வாரிசுகளையும் உருவாக்கும் நிலைமை வரை மக்களை ஏமாற்றி வெற்றிக்களிப்பில் திகழ்கின்றார்கள்.

'மலையக இளைஞர் பேரவை'

திகழ்ந்தது. சமத்துவக் கொள்கைகளைத் தெளிவாகக் கூறும் இலக்கியப் படைப்புக்களையும், மலையகப்பிரச்சினைகளையும் தாங்கி வெற்றி நடை போட்டது. பொதுவுடமைத் தத்துவங்களையும், பொதுவுடமைப் புரட்சிவரலாற்று நிகழ்வுகளையும் தெளிவாக விளக்கியது. இவ்விதழ் இயக்கத்தின் வளர்ச்சிக்கு தேவையான பங்கினை வகித்தது.

## மலையக அரசியல் சமூக கலாசார அமைப்புகள் -13

# மலையகத்தின் 'தீர்த்தக்கரை'

**— வி.ரி.தர்மலிங்கம்**

மலையக அமைப்புகளான தொழிற்சங்கங்களிலும் கலாசார அமைப்புகளிலும் ஒரு பொது அம்சம் விரவி வந்திருப்பதைக் காணலாம். அந்த அமைப்புகளின் தலைமைப் பதவியைப் பெற்றுக் கொண்டோர் அதனைத் தமது சொத்தாக மாற்றும் எண்ணங்களுடன் செயல்பட்டு தனக்கு வேண்டாதவர்களை அகற்றி தமக்கு துதிபாடுவோரை பதவிகளில் அமர்த்தி தலைமையை இறுதிவரை இறுக்கிப்பிடித்துக்கொள்ளும் அம்சம் இடம்பெறறது. அங்கு ஜனநாயக அமைப்பு முறைக்கு மாத்திரமில்லை மக்களின் கருத்துக்களும் மதிக்கப்படாத நடைமுறை பின்பற்றப்பட்டு வந்ததையும் காணலாம்.

தங்களின் பதவி ஆசைகளை அபிலாசைகளை மறைத்துக் கொண்டு மக்கள் மத்தியில் நல்லவர்களைப் போல் காட்சியளித்தார்கள். அவர்களின் இரட்டை வேடத்தை புரிந்து கொள்ளாத மக்கள் தங்களை இரட்சிக்க வந்த கடவுளாகக் கருதி மதிப்பளித்து ஏமாந்து வரும் நிலை இன்னும் நீடிக்கின்றது.

இதற்கு வி.எல்.பெரேரா விதிவிலக்கல்ல. தன்னை அந்த அமைப்பின் தலைவனாக்கிக் கொண்டு அதனை தொண்டர் ஸ்தாபனமாகவும் மாற்றிக் கொண்டு தனக்கு தொழிலாளர்களின் ஆதரவும் இருக்கின்றது என்பதைக்காட்ட **'விவசாய தோட்டத் தொழிலாளர் முன்னணி'**என்ற தொழிற்சங்கத்தையும் அமைத்துக் கொண்டு அரசியல் பிரமுகராகவும் வரமுயற்சித்தார்.

இவரின் **''தாக்கம்''** என்ற மாத இதழில் தன்னை ஒரு சோஷலிசவாதி என மக்களுக்கு காட்ட முயன்றார்.

1990வரை இவரும் இவரின் அமைப்பும் இயங்கி வந்தன. இவரின் எழுத்தையும் பேச்சையும் நம்பி உணர்வு பூர்வமாக அந்த அமைப்பிற்குள் சென்றோர் மனமுடைந்து வெறியேறியும் இருக்கின்றனர். தம்மை மையமாக வைத்து அமைப்புகளை அமைத்தவர்கள் அல்லது ஆக்கிக் கொண்டவர்கள் பலர் இன்று இருக்குமிடம் தெரியவில்லை. அந்தவரிசையில் இவ

இவ்வாறு கொள்கைப் பற்றுள்ள சமூக உணர்வுள்ளவர்களிடமிருந்து பறிக்கப்பட்டு வேறு வடிவமெடுத்துச் சீரழிந்துவிட்டது.

**மலையக மக்கள் இயக்கம்:-**

மலையக மக்களின் பிரச்சினைகள் தொழிலாளர் வர்க்க பிரச்சினையோடு தொடர்புடையன, அதனை சோஷலிச அரசியல் அமைப்பின் ஊடாகவே தீர்க்க முடியும். எனவே மக்களை வர்க்க ரீதியான சிந்தனையில் ஈடுபடுத்த வேண்டும் எனற கொள்கையை முன்வைத்து 'மலையக மக்கள் இயக்கம்' என்ற அமைப்பு 1974ம் ஆண்டு உருவாக்கப்பட்டது. இதனை திருவாளர்கள் - சாந்திகுமார், பி.மரியதாஸ், எம். தர்மலிங்கம், ஜோதிக்குமார், பி.சுதந்திரராஜ், கணபதி, எஸ்.சரவணபிரகாசம் ஆகியோர் இணைந்து தோற்றுவித்தனர். மக்கள் சக்தியை வர்க்க ரீதியாகத் திரட்ட வேண்டுமென தங்கள் செயற்பாடுகளைத் திட்டமிட்டுச் செய்தனர். மலையக மக்கள் சோஷலிசக் கொள்கைகளைப் புரிந்து கொள்ளும் வகையில் பிரதானப்படுத்தி செயற்பட்டனர்.

இலங்கையில் இயங்கிக் கொண்டிருந்த, சோஷலிச கொள்கைகளைக் கொண்ட அமைப்புக்களுடனும், நபர்களுடனும் தொடர்பு கொண்டு தங்கள் இயக்கத்திற்கு பக்கபலத்தை உருவாக்கினர். அட்டன், கண்டி, மாத்தளை, ராகல, பதுளை, கொழும்பு ஆகிய பகுதிகளில் செயற்பட்டதுடன் யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருகோணமலை போன்ற பகுதிகளில் மலையக மக்கள் இயக்கம் அறிமுகமாகி இருந்தது. இது புத்திஜீவிகள் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்று வளர்ந்தது.


இவ் இயக்கத்தின் சார்பாக வெளியிடப்பட்ட ''தீர்த்தக்கரை'' என்ற சஞ்சிகை புத்திஜீவிகள் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்றுத்

மலையகத்தில் எழுந்த ''மலையக இளைஞர் முன்னணியும்'', ''மலையக மக்கள் இயக்கமும்'' 1977ல் நடந்த பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி பெற்ற மாபெரும் வெற்றியினால் வாயடைத்துப் போய்விட்டன. அவ்வேளையில் நடந்த வன்செயல் மலையக மக்களை பல உணர்வுடன் நடமாட வைத்தது. இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தில் இணைந்து தன்னை வளர்த்துக் கொள்வதில் கவனமாக இருந்தது. தாங்கள் அரசாங்கத்தின் ஒரு அங்கம்; கௌரவ ஜே.ஆர்.ஜெயவர்த்தன தலைமையிலான அரசாங்கத்தின் உதவியினால் மலையக மக்களின் பிரச்சினைகள் அனைத்தையும் துரிதகதியில் தீர்த்து வைப்போம், மலையக மக்களை சொர்க்கபுரியில் வாழ வைப்போம் என்ற மகிழ்ச்சி நிறைந்த முழக்கத்துடன் மந்திரிப் பதவிகளைப் பெற்றனர். அரசியலில் எதிர்க்கருத்துக் கொண்டவர்களும் மக்கள் பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பர் என இ.தொ.காங்கிரஸை ஆதரித்தனர். புத்திஜீவிகள் மௌனமாக இப்போக்கினைப் பார்த்துக் கொண்டிருந்தனர்.

காலங்கள் கடந்தன, அனைவரும் ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்த, சொர்க்கபுரி வாயளவிலும், பத்திரிகையிலும் வீரவசனங்களுடன் வெளிவந்ததை மாத்திரமே அறியமுடிந்தது. மக்களின் அவலம் காங்கிரஸ் காரருக்கு மந்திரிப் பதவிகள் கொடுத்ததின் மூலம் நீங்கிவிட்டதாக நினைத்துக் கொண்டார்கள். மக்கள் காங்கிரஸை மறக்காமல் இவர்களின் நடவடிக்கைகளைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். சீறமுடியவில்லையே எனச் சிலர் அடித்துக் கொண்டிருந்தார்கள், நிதானமாக சிலர் சிந்தித்துக் கொண்டிருந்தார்கள்

(வரும்)

# காத்திருப்பு



என்னைத் துரத்தாதே
தயவு செய்து துரத்தாதே
உன் இதயத்தில் கூடுகட்ட வந்தேன்
என் சமாதான முட்டையை
அடைகாக்க வந்தேன்
தயவு செய்து துரத்தாதே

உன் இதயத்தில் இல்லையாயினும்
உன் இல்லத்தின் ஒரு மூலையில்
அல்லது உன் கூரை இடுக்கில்
அல்லது உன் கொல்லைப் புறத்தில்
அதுவும் இல்லையேல்
உன் சாக்கடை ஒதுக்கத்திலாவது
என்னை ஒதுங்கவிடேன்.

ஒரு சிறு கூடு
அதில் ஒரே, ஒரு முட்டை
அது ஆயிரம் குஞ்சுகள் பொரிக்கும்.

உன் இதயத்தில் சமாதானப் பறவை
சிறகடித்துப் பறக்கட்டுமே
அதன் சடசடப்பில்
உன் இதயம் சிலிர்க்கட்டுமே
அது உன் இதயத்தைக்
குண்டுகள் போல் சல்லடையாய்த் துளைக்காது
உன் நரம்புகளின் குருதியைப்
பீறி அடிக்காது
உன் இல்லத்தைக் குருதியில் நனைக்காது.

என்னை அனுமதியேன்
உன் இதயத்தில் ஒரு சிறு கூடுகட்ட
அல்லது உன் சாக்கடை ஒதுக்கத்திலாவது.

பல்லாயிரம் ஆண்டுகளாக
நான் பறந்து திரிகிறேன்
வானில் இருந்து மண்ணுக்கும்
மண்ணில் இருந்து வானுக்குமாக
கடல்களையும் சமுத்திரங்களையும் தாண்டி
மலைகளையும் வனங்களையும் தாண்டி
மனிதனின் இதயத்தில் ஒரு சிறு இடம்தேடி.

நீ என்னைத் துரத்தி அடிக்கிறாய்
என் இறக்கைகளைத் துண்டித்து
கழுத்தில் சுருக்கிட்டு
பாதாளச் சிறையில் வீசி எறிகிறாய்.

எனக்கு மீண்டும் மீண்டும்
இறக்கைகள் முளைக்குமே
மீண்டும் மீண்டும் உன்சிறைகளைவிட்டு
சுதந்திர வானில் பறந்திடுவேனே.

இனியும் என்னைத் துரத்தாதே
என் இறக்கைகளைத் தறிக்காதே
உன் இயத்தில் கூடுகட்ட வந்தேன்
என் சமாதான முட்டையை
அடைகாக்க வந்தேன்.

உன் இதயத்தில் அன்பு கசியட்டும்
அதன் இளஞ் சூட்டில்
நான் குஞ்சு பொரிக்கட்டும்
அதுவரை
இந்த மயானத்தில்
குருதியில் மிதக்கும் இப் பிணங்களின் நடுவில்
காத்திருப்பேன்
இன்னும் ஓர் ஊழியாயினும்
காத்தே இருப்பேன்.

20.09.1986

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# பெண்ணிலைவாத நோக்கில் தமிழ் சினிமா — 02



சுசீலா ரவி

தமிழ் நாட்டுச் சமூக அமைப்பில் மாமியாரின் பங்கு முக்கிய இடம் பெறுவதாக அமைகின்றது. இது ஆணாதிக்க மனோபாவத்திலிருந்தே வெளிப்படுகிறது. பெண்ணை பெண் அடக்குவது தொடர்பாகச் சுவையான விவாதத்தை சிலர் முன் வைக்கின்றார்கள். மாமியார் மருமகளை அமையாக நினைக்கின்றார் அல்லது தாய் தன் மகனுக்குச் பெண்ணைத் தேடுகின்ற போது சீதனம் அதிகம் கேட்கின்றார். இங்கு ஆணாதிக்கம் எங்கிருக்கிறது எனும் கேள்வியைச் சிலர் கேட்கின்றனர். இங்கு ஆண் ஆதிக்கம் செலுத்தவில்லை—என வாதிடுகின்றனர். ஆனால் ஒரு உண்மையை யாவரும் மறந்து விடுகின்றனர். ஆணைச் சார்ந்து, ஆணை முதனிலைப்படுத்தியே ஆதிக்கம் செலுத்தப்படுகின்றது. மாமியார் மருமகளை அடக்குவது என்பது தன் மகனை முதனிலைப்படுத்துவதனாலேயே சாத்தியமாகிறது. அவ்வாறே அதே மாமியார் தனது மாமியாரிடமிருந்து இவ்வாறு ஆதிக்கத்திற்குட்பட்டிருப்பார்.

இத்தகைய சூழலில் கலகக் குரலாக அல்லாமல் சீர்திருத்த நோக்கிலேயே **மாமியாரும் ஒரு வீட்டு மருமகளே, மாமியார் மெச்சிய மருமகள்** முதலான திரைப்படங்கள் உருவாகின.

ஆனால் சில சந்தர்ப்பங்களில் மாமியாரின் கொடுமைக்கெதிராக மருமகள் போர்க்கொடி உயர்த்திய திரைப்படங்களும் தயாரிக்கப்பட்டன. ***இருளும் ஒளியும், வாணி ராணி, வந்தாளே மகராசி***போன்ற திரைப்படங்களில் கதாநாயகி இரட்டை வேடம் போட்டிருப்பார். மருமகள் மாமியாரின் ஆதிக்கத்திற்குட்படுத்தப்பட்ட அப்பாவியாக காட்சியளிக்கின்ற போது அதே உருவம் கொண்ட மற்றையவள் மருமகளாக நடந்து மாமியாருக்கு எதிராக ஆர்ப்பாட்டம் செய்வார். இத்தகு கற்பனை ரசிகர்களை புளகாங்கிதத்தில் வைத்திருப்பதற்குப்பயன்படுமேயல்லாது, வேறெவ்வித விளைவினையும் தர வல்லமையற்றது.

மாமியாரைப் போன்றே இன்னொரு பெண் பாத்திரம் திரைப்படங்களில சித்திரிக்கப்பட்டார். ***தாய்*** எனும் பாத்திரமே அது. ரசிகர்களை உணர்ச்சிவசப்படுத்துவதற்கும் கண்ணீர் சிந்த வைப்பதற்குமான 'உணர்ச்சிக் கனிவு'ப் **(Sentiment)** பாத்திரமாக தமிழ்ச் சினிமாக்களில் வரும் தாய் அமைந்து விடுகிறாள். பின்னைய திரைப்படங்களில் ***(மன்னன், சாது)***தாய் என்னும் பாத்திமே முக்கியமாக்கப்பட்டு அப்பாத்திரத்திற்காக ஒரு பாட்டு பாடப்பட்டது.(அம்மா என்றழைக்காத.....) அனைத்து நடிகர்களும் (சிவாஜிகணேசன், எம்.ஜி. ஆர், கமலஹாசன், ரஜனிகாந்....) தாயின் சிறப்புப் பற்றிப் பாடல்கள் பாடி நடித்துள்ளனர். ஆயினும் தாய்மையைப் போற்றுகின்ற பண்பு பிற்பட்ட காலங்களில் இருந்ததை விட முன்னைய காலத்தில் அதிகம் இருந்தது. **தாய்க்குப்பின் தாரம், தாயைக் காத்த தனயன், தாய்க்குத் தலைமகன், தாய், அன்னை ஓர் ஆலயம், அன்னை, அன்னை என் தெய்வம்** போன்ற படைப்புக்களே இதற்கு நல்ல உதாரணங்களாகும்.

பெண்களைத் தியாகிகளாகச் சித்திரிக்கும் போக்கும் முன்னைய காலப்படங்களில் அதிகம் காணப்பட்டது. பிற்பட்ட காலத் திரைப்படங்களிலும் பார்க்க மிகைப்படுத்திய தியாகம் முன்னைய காலத் திரைப்படங்களில் அதிகம் இருந்தது. **குலவிளக்கு** என்னும் திரைப்படத்தின் கதாநாயகி கண்ணம்மாவுக்கு நோயாளித் தந்தை, தாயற்ற தம்பி, தங்கைகளைப் பாதுகாக்கும் சுமை போன்றன ஏற்படுகின்றன. அவள் கடன் வாங்கித் தங்கையின் திருமணத்தை நடத்துகிறாள். தம்பி தன்னுடன் கல்லூரியில் படித்த பெண்ணைத் திருமணம் செய்து வீட்டுக்கு அழைத்து வருகின்றான். கடன்களை அடைக்க இரவு பகலாகப் பாடம் சொல்லிக் கொடுப்பதும், தையல் வேலை செய்வதுமாகக் காலம் கழித்திருந்த கண்ணம்மாவுக்கு கச நோய்.- இந்நோயினால் ஆசிரியர் தொழில் பறிபோகின்றது. கச நோயாளி கண்ணம்மாவிற்கு வீட்டில் ஒரு மூலை ஒதுக்கப்படுகிறது. இங்கு தியாகங்கள் அதிகம் காட்டப்படுகின்றது. ***அரங்கேற்றம், அவள் ஒரு தொடர்கதை*** போன்ற திரைப்படங்களும் இத்தகையனவே.

மற்றும் பெண்களை விதவைகளாகவும் அவர்களை ஒதுக்கி வைத்தும் சித்திரிக்கப்பட்ட திரைப்படங்கள் முன்னர் அதிகம் வெளியாகின. கருத்து ரீதியாக அடிமைகளாகச் சித்திரிக்கும் தன்மையும் வெகுவாகக் காணப்பட்டது. ஒப்பீட்டளவில் இக்காலப் படங்களில் பெண் உரிமை பேசுபவளாகவும், வீராங்கனையாகவும் சில படங்கள் சித்தரிப்பது போன்று அக்காலத் திரைப் படங்களில் சித்திரிக்கப்படவில்லை. பெண்கள் தமக்கு என்று சொந்தக் கருத்து இல்லாதவர்களாகக் காட்டப்படுகிறார்கள். ''கல்லானாலும் கணவன், புல்லானாலும் புருஷன்'' என்ற கருத்து எவ்வித எதிர்ப்பும் இன்றித் திரைப்படங்களில் வலியுறுத்தப்பட்டது. ***மனோகரா*** எனும் திரைப்படத்தில் கணவன் வேறு பெண்களுடன் தொடர்பு வைத்திருந்த போதும் மனைவி அவனை ஏற்றுக் கொள்வதனைக் காணலாம். இவ்வாறே பல திரைப்படங்கள் இதே கருத்தைக் கொண்டுள்ளன. கணவனைத் தெய்வமாகப் போற்றும் பண்பு காணப்படுகின்றது. இவ்வாறே திரைப்படப் பாடல்களும் இதே கருத்தை வலியுறுத்துகின்றன.

***''நல்வாழ்த்து நான் சொல்லுவேன்***  
***நல்ல படி வாழ்கவென்று***  
***கல்யாணக் கோயிலிலே கணவன்***  
***ஒரு தெய்வம் அம்மா***  
***போடுவது பொன் தாலி***  
***தாலி ஓர் பொன் வேலி***  
***வேலியினைத் தாண்டாதே வேதனையை வாங்காதே''***  
***யாரிடம் குறையில்லை யாரிடம் தவறில்லை***  
***வாழ்வது ஒரு முறை***  
***வாழ்த்தட்டும்***  
***தலைமுறை வா***  
***மாப்பிள்ளையைப் பிரிந்தாலும்***  
***வாசல் படி தாண்டாதே***  
***கோபங் கொண்டு உதைத்தாலும்***  
***கொண்டவனை மறக்காதே***  
***மாடப்புறாவிலும் சோடிப்புறா உண்டு***  
***சோடியைப் பிரிந்த பின் மாடப் புறா இல்லை........ ஏன்***  
***அது தான் மானம். (பட்டிக்காடா பட்டணமா)***

***இதே மாதிரிப் பல பாடல்களைக் காணலாம். தாய்மையைப் போற்றும் பண்பும் அடிமையாக்கும் பண்பும் கொண்ட தமிழ்த் திரைப் படங்கள் பெண்களின் சவால்களையும் நிறைவேற்றுவதாயும் காட்டுகின்றது. அது சமரசப் போக்கில் வருவதனையும் அவதானிக்கலாம். மங்கம்மா சபதம், சபதம்*** போன்ற திரைப்படங்கள் இவற்றிற்கு உதாரணங்களாகும். '' வள்ளல் செல்வநாயகம் அவரிடம் வேலை பார்த்து வரும் வள்ளிமுத்துவின் பெண் சிவகாமியாவாள். அவள் படிப்பிற்கு செல்வநாயகம் உதவி செய்கிறார். சிவகாமியை ஆசை நாயகியாக வைத்திருக்க அவர் விரும்புகின்றார். இதனை எதிர்க்கும் வள்ளிமுத்து கொலை செய்யப்பட்ட அதே நேரம் செல்வநாயகத்தின் புகழ் அது தற்கொலை எனப் பிரகடனப்படுத்துகின்றது. தந்தையின் கடிதம் மூலம் திரும்பி வந்த சிவகாமி உண்மையைப் புரிகிறாள். ஆனால் உண்மையை ஊரார் புரியவில்லை. இதே ஊரில் நீ என்னை ஒன்றும் செய்ய முடியாது என்கிறார் செல்வநாயகம். இதே ஊரில் உன் குற்றங்களை அம்பலப்படுத்தி உன்னைத் தலை குனிய வைத்தே தீருவேன் என்று சபதம் செய்கிறாள் சிவகாமி. பின் அவள் செல்வநாயகத்தின் மகனை மணந்து கொண்டு மருமகளாகி மாமனாரை பழிவாங்குகிறாள். இது சபதம் திரைப்படத்தின் கதையாகும். சமரசப் போக்கே இங்கு காணப்படுகின்றது. **நம்ம வீட்டுத் தெய்வம், வாயாடி, மேயர் மீனாட்சி, மிட்டாய் மம்மி, கியாஸ் லைட் மங்கம்மா, அக்கா, திருடி, ரோஷக்காரி** போன்ற திரைப்படங்களில் பெண்கள் உயர்த்தப்படுவதையும், அவர்களின் தனித்தன்மை பேணப்படுவதையும் காண முடிகிறது.

1970க்கு முன்னைய திரைப்படங்களில் பெண்கள் உரிமை பற்றிய உரத்த குரல் அல்ல - அங்கு சிறு முணு முணுப்புக் கூடக் கேட்க முடியாதிருந்தது. அவள் அப்படித் ***தான், மெட்டி, நண்டு, உதிரிப்பூக்கள், புதுமைப்பெண், அக்கினி சாட்சி*** போன்றவற்றில் சிறு முணு முணுப்பாவது கேட்க முடிந்தது

1970க்கு முன்னைய திரைப்படங்களில் பாடங்கள் விரசமாக ஒலிக்கவில்லை. பெண்களைப் போகப் பொருளாகச் சொல்லவில்லை. கண்ணியமான பாடல்களாக இருந்தன. சில பாடல்கள் விதி விலக்காக உள்ளன.

***''ஆளை ஆளைப் பார்க்கிறா***  
***ஆட்டத்தைப் பார்த்திடாமல்***  
***ஆளை ஆளைப் பார்க்கிறா.........''***

***(அலிபாவாவும் 40 திருடர்களும்)***  
***''யாரடி நீ மோகினி கூறடி என் கண்மணி''***  
***(படம் உத்தம புத்திரன்)***

போன்ற பாடல்கள் ஆண்களைப் பெண்கள் மயக்குவதாகச் சித்திரிக்கப்படுகின்றது. வசனங்களும் இதே கருத்தைத் தருவனவாகும்.

முன்னர் கற்புப் பற்றி அதிக படங்கள் பேசின. கற்புக்கரசி, கண்ணகி, கற்புக்கனல் போன்ற திரைப்படங்கள் இவ்வாறில்லாதவாறு முன்னர் எழுந்தன.

பெண்கள் அணியும் ஆடைகள் கண்ணியமானவையாக இருந்தன. ஆபாசமாக, கவர்ச்சிகரமாக அக்கால நடிகைகள் ஆடைகள் அணியவில்லை. ஆண்களை மயக்கி சாகசம் செய்பவர்கள் கூட இறுக்கமான ஆடை அணிந்த போதும் அங்கங்கள் வெளித் தெரியும் ஆடை அணியவில்லை. காபரே, கிளப் டான்ஸ் போன்றன அக்காலத்தில் இல்லாமையும் இதற்குக் காரணமாகும். கதாநாயகிகள் அநேகமாக சேலைகள் அணிந்தவாறே தோன்றினர். பெண்களைக் கீழ்மைப்படுத்தும் இரட்டை அர்த்தம் தொனிக்கும் வசனங்கள் அக்காலத் திரைப்படங்களில் இடம் பெறவில்லை. ஒப்பீட்டளவில் பெண்களைக் கொச்சைப் படுத்தும் திரைப்படங்கள் அக்காலத்தில் அதிகம் எழவில்லை என்றே கூறலாம். இலக்கியங்களுடன் ஒப்பிடும் பொழுது அக்காலத் திரைப்படங்கள் பெண்கள் பற்றி, அவர்தம் பிரச்சினைகள் பற்றி நுண்மையாகச் சொல்லவில்லை எனலாம். பாரதியாரின் கவிதைகள், பாரதிதாஸன் கவிதைகள் பெண்கள் உரிமை பற்றிக் கூறிய அளவுக்குத் தமிழ்த் திரைப்படங்கள் கூறவில்லை. ஜானகிராமனின் மோக முள், அம்மா வந்தாள், மரப்பசு போன்ற நாவல்களில் சித்திரிக்கப்பட்ட பெண்களின் பிரச்சினைகள் தமிழ் திரைப்படங்களில் சித்திரிக்கப்படவில்லை. அறிவு பூர்வமாக இலக்கியங்களில் பெண்களை அணுகியது போலத் திரைப்படங்கள் அணுகவில்லை. இதன் காரணம் என்ன? இலக்கியம் என்பது செலவு குறைந்த சாதனம் என்பதும் திரைப்படம் செலவு கூடிய சாதனம் என்பதுமே பரிசோதனை செய்ய யாரும் முயலாமைக்குக் காரணமாகும். ரசிகர்களில் பெரும்பான்மையோர் பார்வையாளர்களாக மட்டும் இருந்தமையும், வாசகராக இல்லாதிருந்தமையும் இவ்வாறான முயற்சிக்குத் தடையானவையாக இருந்தன. இங்கு இன்னொன்றையும் கவனிக்கலாம். இவ்வாறாக சமூகப் பிரச்னைகள் கொண்ட படைப்புக்கள் அதிகமானவர்களைச் சென்றடைய திரைப்படம் முக்கியமான ஊடகமாகும்.

— வரும்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




எங்கள் வீட்டின் முன்வாசலில் நின்றிருந்த வயது போன பெரிய கறுத்தக் கொழும்பான் மாமரத்தின் குளுமையான நிழலில் ஒரு பதின் மூன்று, பதினான்கு வயதுச் சிறுமியாக - வெள்ளை யூனிபோமில் வெட்கங்கலந்த சிரிப்போடு நிற்கும் சுண்டிக்குளிப் பாடசாலைச் சிறுமியாகத்தான் சிவரமணி என் நினைவில் தெரிகிறார். அவளை சேலை கட்டிய பெண்ணாக - கவிதை எழுதுபவளாகவெல்லாம் நான் அறிய நேர்ந்ததெல்லாம் மிகப்பின்னால். அவள் மரணித்த செய்தியுங்கூட அவளுடைய மிக நெருங்கிய தோழி எனக்கு எழுதிய கடிதத்திலிருந்து நான் அறிய வந்ததுதான். என் மனதில் ஒரு பாடசாலைச் சிறுமி என்ற சித்திரப்படிமத்திலேயே உறைந்து போய்விட்ட சிவரமணியின் மரணம் குறித்து நான் தனிப்பட்ட முறையில் பெருந்துயருற்றேன். மிகச்சிறந்த கவிஞையாக விகசித்திருந்த அவர் ஏன் அப்படிச் செய்து கொண்டார் என்ற கேள்வி என்னை அலைக்கழித்தது. அந்தப் பெண்ணின் இழப்பை யார் ஏற்றல் கூடும்? அவரின் மரணத்தின் மீது ஒரு ஒற்றைவரி நிராகரிப்பை மட்டும் செய்து விட்டு என்னால் அமைதிகாண முடியவில்லை. அந்தப் பெண்ணின் மீது கோபங்கொள்ளவும் முடியவில்லை. தற்கொலையை நான் ஏற்றுக் கொண்டவனோ, ஆராதிப்பவனோ இல்லை. யாரையும் விடத் தற்கொலையை நான் பூரணமாக நிராகரிக்கிறேன். இவை எல்லாம் தற்கொலை நிகழ்வு குறித்த ஒருவரின் அபிப்பிராயத் தீர்வு மட்டுமே. இத்தற்கொலை நிகழ்விற்குப் பின்னால் எத்தகைய காரணிகள் செயற்பட்டிருந்தன என்ற விவகாரம் மிக விரிவானது. ஒரு யுத்த சூழல் நிலைமையை மிகவும் மோசமாக்கியமையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

யாழ்ப்பாணத்தின் போர்க்காலச் சூழல் எத்தகைய உளவியல் தாக்கங்களை அங்கு ஏற்படுத்தியுள்ளது என்று உளநோய்ச் சிகிச்சை நிபுணர் தயா சோமசுந்தரம் ஆராய்ந்து வெளியிட்ட முடிவுகள் திகைப்பை ஏற்படுத்துவன. ''குழந்தைகளில் இருந்து முதியோர் பெரும்பாலானவர்களுக்கு யுத்தத்திற்குப் பிந்திய உளவடுநோய் ஏற்பட்டுள்ளதாக மருத்துவ ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர். நோய்க்காக மருந்து எடுக்கச் செல்லும் நோயாளிகள் பலருக்கு மனோவியல் தொடர்பான மருந்துகளையே தாம் வழங்குவதாகவும் அதன்பின் அவர்கள் உளவலு தேறி வருவதாகவும் உள்ளூர் வைத்தியர்கள் தெரிவிக்கின்றனர்'' என்று சரிநிகர் (1-15 செப் 93) கூறும் செய்தி ஏனோதானோ விவகாரமல்ல.

இவ்வாறு சிக்கலான பல காரணிகள் செயற்பட்டுக் கொண்டிருந்த ஒரு சூழலில் சிவரமணி விவகாரம் மிகுந்த சமூகப் பொறுப்புணர்வோடும் இத்தகைய ஒரு சாவுக்கு இலக்காகிப் போனவர் மீது ஆழ்ந்த அனுதாபத்தோடும் நோக்கப்பட வேண்டிய ஒன்றாகும். மனித மனத்தின் விசித்திரப்புதர்களை இருண்ட மையங்களை - அடிமன ஆழங்களை - மனக்குகை ஓவியங்களை சில வேளைகளில் தரிசித்தும், பல சமயங்களில் துளாவியும், இடறியும் தவ்விப் பாய்ந்தும் அறிய முயலும் மிகக்கடுமையான பணி அது.

''சிவரமணியின் தற்கொலையும் சிவரமணியின் கவிதையும்'' என்ற தலைப்பில் சரிநிகர் (மார்ச் 10-23, 1994) இதழில் மாதவன் என்பவர் எழுதியிருந்த கட்டுரையைப் பார்த்தேன். மரவள்ளிக்கிழங்கு பயிரிடுவது எப்படி என்பதற்கான கட்டுரையை எழுதுவதை விடக் குறைந்த கால அவகாசத்தில் இம் மாதிரிக் கட்டுரைகளைத் தயார் பண்ணி விடலாம். ஒரு பிரேத விசாரணை அதிகாரியின் மென்னுணர்வைக் கூடத் தொலைத்துவிட்டு ஒரு கவிஞையின் ஆத்மாவையே குதறியிருக்கும் மாதவன் போன்றவர்களின் கைகளில் தனது கவிதைகளுக்கு இத்தகைய அவஸ்தை நேர வேண்டாம் என்ற நோக்கத்தில் தான் சிவரமணி தனது கவிதைகளையே அழித்து விட்டுப் போய் விட்டாரோ என்றே எனக்கு நினைக்கத் தோன்றியது.





# சிவரமணி ஒருமுறை செத்தது போதும்!

''தற்கொலை செய்தது மாத்திரமல்ல, 'எனது கைக்கெட்டியவரை எனது அடையாளங்கள் யாவற்றையும் அழித்து விட்டேன்' என்று 'தன்னடையாளங்களை' அழித்துக் கொண்டு விட்டார்'' என்று அதிகபட்சக் குற்றச்சாட்டையும் மாதவன் சிவரமணி மீது சுமத்துகிறார்.

டால்ஸ்டாய் தனது ''புத்துயிர்ப்பு'' நாவலைத் தவிர மற்ற எல்லா சிருஷ்டிகளையும் அழிக்கச் சொல்லியிருக்கிறார். ஜெர்மனிய எழுத்தாளன் ஃபிரான்ஸ் காஃப்கா இன்னும் ஒருபடி மேலே போய் தனது சிருஷ்டிகள் அனைத்தையுமே அழித்துவிடச் சொல்லியிருக்கிறான். இதனாலெல்லாம் இவர்கள் சமூகத்துரோகிகளாகவோ, குற்றவாளிகளாகவோ ஆகிவிடுவதில்லை. இந்த மேதைகள் எல்லாருமே இப்படிச் சொல்லியிருந்தாலுங் கூட அவர்களின் சிருஷ்டிகளைக் கௌரவிக்க எழுத்துலகம் தயாராகவே இருந்திருக்கிறது.

''என்னதான் சப்பைக்கட்டு கட்டினாலும் சிவரமணி தன் வாழ்வினூடாக உலகிற்கு விட்டுப் போயிருக்கும் செய்திதான் என்ன?.... இவரை நம்பி வந்திருந்த பெண்களுக்கு இவர் கூறும் செய்தி என்ன? ''வாருங்கள். வாழ்வில் நம்பிக்கை வையுங்கள். பின் விரக்தியடையுங்கள். தற்கொலை செய்து கொள்ளுங்கள்'' இதுவா செய்தி?'' என்று மாதவன் தனது கட்டுரையில் ஆவேசமாய் கேள்வி எழுப்புகிறார்.

''சிலரிற்கு தற்கொலை செய்து கொள்வதைத் தவிர வேறு வழி தெரிந்திருக்கவில்லை'' என்று. '' ஒரு சிட்டுக்குருவி அல்லது அணிற் குஞ்சு'' என்ற தொடரில் (சரிநிகர், 1-5 செப்.93) அ.ரவி எழுதியிருப்பது தற்கொலைக்கு சப்பைக்கட்டு கட்டுவது என்று யார் வாதாட முடியும்?

> சரிநிகர் இதழ் 43 இல் ''சிவரமணியின் தற்கொலையும் சிவரமணியின் கவிதையும்'' என்ற தலைப்பில் மாதவன் எழுதிய குறிப்புக்கள் மீது தனது அபிப்பிராயங்களை வெளிப்படுத்துகிறார் பிரான்ஸிலிருந்து மு.நித்தியானந்தன் அவர்கள்.
>
> இடமின்மை காரணமாக உடனடியாக பிரசுரமாகவில்லை.
>
> ஆ-ர்

— மு.நித்தியானந்தன்

தற்கொலை செய்து கொள்பவர்கள் எல்லாரும் உலகுக்கு விடுக்கும் செய்தி தற்கொலை செய்து கொள்ளுங்கள் என்பதுதான் என்ற முடிவு பித்துக் குளித்தனமானது என்றாலும் சனநாயக - கருத்துச் சுதந்திரத்தின் பேரில் மாதவன் என்பவர் இத்தகைய அபிப்பிராயத்தை வைத்துக் கொள்வதைப் பற்றி நாம் எதுவும் செய்வதற்கில்லை.

சரிநிகரின் சகோதரப் பத்திரிகையான ''யுக்திய'' (4.02.94) இதழில் ''மரணத்தின் காலடியிலிருந்து இரத்தத்தாலும் கண்ணீராலும் ஒப்பமிடும் விவசாயின் நிருபம்'' என்ற தலைப்பில் சி.தொடாவத்தை எழுதியிருக்கும் கட்டுரையையாவது (தாயகம் - 4.03.94, தமிழாக்கம்; செ.லோகநாதன்) குறைந்தபட்சம் மாதவன் வாசித்துப் பார்த்திருக்கலாம்.

விவசாயத்திற்காக வங்கியிலிருந்து வாங்கிய கடனைத் திருப்பிச் செலுத்த முடியாமல் முதியன் சலாகே ஜினதாச என்ற 50வயது விவசாயி கிருமிநாசினி அருந்தித் தற்கொலை செய்து கொண்டு விட்டதால் அவர் உலகுக்கு விடும் செய்தி வங்கிக்கடனை ஒழுங்காகத் திருப்பிக் கட்டி விடுங்கள் என்று ஒருவர் முடிவுக்கு வருவது எத்துணை அபத்தமானது!

மாத்தளையில் ஒரு விவசாயி தனது தக்காளிப்பழங்களை நல்ல விலைக்கு விற்றுக் கொள்ளமுடியாது தற்கொலை செய்து கொண்டதால் அவர் உலகுக்கு விடுக்கும் செய்தி, ''தக்காளியை கிலோ பதினைந்து ரூபாய்க்கு விற்று விடாதீர்கள்'' என்று அர்த்தப்படுத்திக் கொள்ளும் பேதமை எவ்வளவு நகைப்பிற்கிடமானது!

தற்கொலை செய்துகொண்டுவிட்ட முதியன்சலாகே ஜினதாச என்ற விவசாயியை ''நீர் உலகுக்கு விடுத்த செய்தி இதுதானா?'' என்று கட்டுரையாளர் தொடாவத்த கறுவிக் கொட்டவில்லை. ''உலகத்துக்கு தாம் வேண்டப்படாதவர்கள் என்பதை இன்றுதான் அவர்கள் முதற்தடவையாக அறிகின்றனர். தமக்குத் தாமே மிகவும் பாரமானவர்கள் என அவர்கள் இன்று அறிந்துள்ளனர். இது தனிமைப்பட்ட சம்பவங்கள் அல்ல'' என்று கூறும் தொடவத்த இம்மரணங்களின் பின்னணியில் இயங்கும் முழு உலகின் சமூக, பொருளாதாரக் கட்டமைப்பை நோக்கித் தன் பார்வையைச் செலுத்துகிறார். தொடவத்தவின் ஆய்வு தற்கொலைக்கு சப்பைக் கட்டு கட்டுவது என்று மாதவன் போன்றவர்கள் மிகச் சுளுவாகத் தீர்ப்பு வழங்கிவிடுவார்கள்.

குருநாகலை மாவட்டத்தில் உள்ள கொக்கரல்ல என்னும் கிராமத்தில் கடந்த 1993ம் ஆண்டு ஜனவரி தொடக்கம் டிசெம்பர் வரையும் 128 பேர் தற்கொலை செய்து கொண்டுள்ளமை குறித்து வஜிர கஸ்தூரி என்பவரின் துணையுடன் நந்தன வீரரத்ன ''ராவய'' இதழில் (128 தற்கொலைகள் இடம் பெற்ற கிராமம்'' - 6.02.94: தமிழில் செ.லோகநாதன், தாயகம், 18.2.94) எழுதியிருக்கும் கட்டுரை இவர்கள் எவ்வளவு சிரமப்பட்டுத் தகவல்களைத் தேடி பொறுமையோடு நிதானித்து இப்பிரச்சினையை நுணுகிப் பார்க்க முற்பட்டுள்ளனர் என்பதை நன்கு புலப்படுத்துகிறது.

''இவரை (சிவரமணியை) நம்பி வந்திருந்த பெண்களுக்கு இவர் கூறும் செய்தி என்ன?'' என்கிறார் மாதவன்.

சிவரமணியை நம்பி வந்திருந்த பெண்களெல்லாம் சந்தியில் சிதை மூட்டிக் கொண்டு சாகக் காத்திருப்பவர்கள் போல தமிழ் சினிமாக் கதாநாயகிகளின் பாணியில் மாதவன் உகுத்திருக்கும் கண்ணீர் மிக மிகப் போலித்தனமானது. சிவரமணி என்ற கவிஞையின் வாழ்வில் எதைத் தெரிவது, எதைத் தவிர்ப்பது என்பதில் அவரின் கவிதைக் குரலால் ஆகர்ஷிக்கப்பட்ட பெண்கள் மிகத் தெளிவாகவே இருக்கிறார்கள்.

''ஈழத்தின் கவிதைப் பாரம்பரியம் வாழ்வின் மீதான நம்பிக்கையைப் புலப்படுத்துவன, வாழ்தலின் தேவையை வலியுறுத்துவன. வாழ்வு, அதன் மீதான அழுத்தம், நெருக்குதல்கள், அதனை எதிர்கொள்ளல், வாழ்ந்து முடித்தல் இது எம் கவிதைப்பாணி. அதனால் தான் சண்முகம் சிவலிங்கம் 'மரணத்துள் வாழ்வோம்' என்றார். '' என்று மாதவன் தனது கட்டுரையில் பிரஸ்தாபித்திருக்கிறார்.

''1977க்குப் பிந்திய பத்தாண்டுகள் சசியின் (சண்முகம் சிவலிங்கத்தின்) தனிப்பட்ட வாழ்க்கையிலும் நெருக்கடிகள் மிகுந்த காலம் விரக்தியும் சோர்வும் நிராசையும் அவரை ஆட்கொண்ட காலம் இது. அவரது சொந்த மனமுறிவுகள் இக்காலத்தில் எழுதப்பட்ட பல கவிதைகளில் பதிவாகியுள்ளன. சில வேளை நிராசையை ஒரு வாழ்வியல் தத்துவமாகக் காணவும் இவர் தூண்டப்பட்டுள்ளார். மறுதலையில் இந்த நோக்கு கூர்மையாக வெளிப்படுகிறது. சிலவேளை இவர் தன்னை அளவுமீறி நசித்துத் துன்புறுத்துகிறார் என்று தோன்றுகிறது'' என்று சண்முகம் சிவலிங்கத்தின் ''நீர்வளையங்கள்'' என்ற கவிதைத் தொகுப்பின் முன்னுரையில் எம்.ஏ.நுஃமான் கூறிச் செல்கிறார்.

''மரணம் மகத்தானதுதான். ஆனால் வாழ்வு அதைவிட மகத்தானது'' என்று கவிதைக்குரல் எழுப்பும் கவிஞன் ஜெயபாலன் அகதி வாழ்வில் மனஞ்சோர்ந்து போய் வெறுமையைத் தரிசிக்கும் கணங்களையும் நான் கண்டதுண்டு.

- வரும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# திறந்த பொருளாதாரக் கொள்கையும் ஜனநாயகப் போராட்டத்தின் சவால்களும் — 5

**சமுத்திரன் அவர்களின் இக்கட்டுரைத்தொடர் இவ்விதழுடன் நிறைவு பெறுகின்றது. வாசகர்களை இது தொடர்பான விவாதத்தில் பங்குபற்றுமாறு கோருகிறோம். ஆ-ர்**

பொதுஜன ஐக்கிய முன்னணி ஆட்சியில் இலங்கை அரசை ஒரு ஜனநாயக அபிவிருத்தி அரசாக (Democratic Developmental State) சீர்திருத்தியமைக்க முடியுமா என்ற கேள்வியை முன்னர் எழுப்பியிருந்தேன். இந்த இறுதிப் பகுதியில் இந்தக்கேள்வியின் சில அம்சங்களைப் பார்க்க விரும்புகிறேன். இன்றைய காலகட்டத்தில் இலங்கை போன்ற பல நாடுகளின் அரசாங்கங்கள் உலகவங்கி சர்வதேச நிதியம் போன்ற நிறுவனங்களில் பெருமளவு தங்கி நிற்க வேண்டிய நிலையில் உள்ளன. பொது ஜன ஐக்கிய முன்னணி இத்தகைய தங்கி நிற்றலை விரும்பாமலிருக்கலாம். ஆனால் இன்றைய அரசாங்கமும் ஐ.தே.க.அரசாங்கம் போன்று உலகவங்கி -சர்வதேச நிதியத்தில் தங்கியிருக்கிறது. அதேவேளை இந்தத் தங்கியிருத்தலைப் பொறுத்தவரை பொ.ஐ.மு. ஆட்சி சமீப கால இலங்கை வரலாற்றிலும் சர்வதேச ரீதியிலும் ஒரு முக்கிய சவாலையும் வேறுபாட்டையும் பிரதிநிதித்துவப்படுத்துகிறது. இந்த விசேட அம்சத்தைப் பின்வருமாறு சுருக்கமாக விவரிக்கலாம்:

0 உலகவங்கி -சர்வதேச நிதியத்தின் தாராளவாதக் கொள்கை அடிப்படையில் பொருளாதார தாராளவாதத்தை முதன்மைப்படுத்துகிறது. இந்நிறுவனங்கள் ஜனநாயகமயமாக்கல் ஊழல் ஒழிப்பு போன்றவைபற்றிப் பேசும் அதே வேளை இத்தகைய சீர்திருத்தங்களை பொருளாதார தாராளவாதத்திற்கு கீழ்படுத்துகின்றன. நிறை போட்டிச் சந்தைகளை ஊக்குவிக்கும் ஸ்தாபனரீதியான சீர்திருத்தங்களும் ஊழலின்மையும் திறமை கொண்ட நிர்வாக அமைப்புகளும் இந்தப் பொருளாதாரக் கொள்கையின் செயற்பாட்டிற்கு மிகவும் வேண்டியவை. அதேவேளை பல கட்சிகளைக் கொண்ட இயக்கப்பாடு மிகுந்த ஒரு ஜனநாயக அரசியல் அமைப்பு இந்தக் கொள்கைக்கு இன்றியமையாததல்ல. நடைமுறையில் அத்தகைய ஜனநாயக மயமாக்கல் பொருளாதார தாராளவாத நலன்களுக்கு மாறாகச் செயல்படலாம்.

பரவலான ஜனநாயகமும் தொழிற்சங்க சுதந்திரங்களும் இருக்கும் நாட்டில் நிறைபோட்டிச் சந்தைகள் மீது பலவகையான கட்டுப்பாடுகள் வருவதைத் தவிர்க்க முடியாது. முதலீட்டாளர்கள் மீது தொழிலாளர்கள் பொதுமக்கள் சார்பில் சில கட்டுப்பாடுகளைச் செலுத்த அரசாங்கம் நிர்ப்பந்திக்கப்படும் சாத்தியப்பாடுகள் அதிகம்.

0 இத்தகைய நிலைமைகளில் அரசாங்கத்தின் அரசியல்ரீதியான கருத்தமைவுரீதியான நியாயப்பாட்டின் தேவைகளுக்கும் பொருளாதார தாராளவாதத்தைத் திறனுடன் செயற்படுத்தும் தேவைகளுக்குமிடையே முரண்பாடுகள் தோன்றுகின்றன. பொதுமக்கள் முன்னணிக்கு மக்களின் ஆதரவு, இலங்கையில் திறந்த பொருளாதாரம் ஒன்றை எப்படியும் எத்தகைய அரசியல் நிபந்தனைகளை ஏற்றும் ஏற்படுத்தலாம் எனும் அடிப்படையில் கிடைக்கவில்லை. மக்கள் தமது வாழ்க்கைத் தரத்தின் வளர்ச்சிக்கும் சுதந்திரங்களுக்கும் உதவக்கூடிய ஒருபொருளாதார அபிவிருத்தியை எதிர்பார்த்தே இன்றைய அரசாங்கத்திற்கு ஆதரவு வழங்கியுள்ளனர். அதேநேரம் இலங்கையின் தேசிய பொருளாதாரம் உலக முதலாளித்துவப் பொருளாதார அமைப்பின் ஒரு அங்கம் எனும் அடிப்படையிலேயே பொருளாதார அபிவிருத்திக் கொள்கைகள் வகுக்கப்பட வேண்டும். சர்வதேச பொருளாதாரத்திடமிருந்து வெளிப்படும் குறியீட்டை வைத்து இலங்கை தனது குறுகிய கால நீண்ட கால பொருளாதாரக் கொள்கைகளை வகுக்க வேண்டிய நிலையில் உள்ளது. இது இலங்கையின் உள்ளார்ந்த பலங்கள், பலவீனங்கள் ஸ்தாபன ரீதியான சீர்திருத்தங்களின் சாத்தியப்பாடுகள் போன்றவற்றில் தங்கியுள்ளது.

0 இது சம்பந்தமாக உலகவங்கி தனது கொள்கைத் திட்டத்தை முன் வைக்கிறது. இலங்கை நிலைமைகள் உலக வங்கியின் ஜனநாயகம் பற்றிய நிலைப்பாட்டைப் பரீட்சைக்குள்ளாக்குகிறது. நாட்டு மக்களின் ஜனநாயக சமூக நலக் கோரிக்கைகள் தூய பொருளாதார தாராளவாதத்துடன் முரண்படுகின்றன. மக்களால் தெரியப்பட்ட ஒரு அரசாங்கம் வகுக்கும் பொருளாதாரத் திட்டத்தின் அடிப்படையில் அதற்கு உதவி வழங்குவதா அல்லது உலக வங்கி தானே ஏற்கனவே முடிவெடுத்துள்ள கொள்கைகளை திணித்து அவைக்கமைய உதவி வழங்குவதா? பின்னைய வழிதான் உலக வங்கியின் வழியெனில் அதன் ஜனநாயகப் பேச்சில் அர்த்தமில்லை. ஏற்கனவே குறிப்பிட்டது போல் இன்னும் பொதுஜன ஐக்கிய முன்னணி ஒரு தெளிவான பூரணமான அபிவிருத்தி திட்டத்தை முன் வைக்கவில்லை. வெளிவந்த பிரகடனங்கள் உலக வங்கியின் பாஷையிலேயே பேசுகின்றன. உலக வங்கி சர்வதேச நிதியம் போன்றவற்றை எதிர்கொண்டு இலங்கையின் பொது நலன்களுக்கேற்ற ஒரு சமரச பொருளாதாரக் கொள்கையை உருவாக்கும் ஆற்றல் பொதுஜன ஐக்கிய முன்னணியிடம் எவ்வளவு உண்டு என்பதை அதன் ஆதரவாளர்களும் விமர்சகர்களும் எதிர்ப்பாளர்களும் இனி வரும் சில மாதங்களில் ஓரளவு காண்பார்கள். அத்தகைய பேரம் பேசலுக்கான சந்தர்ப்பத்தை அரசாங்கத்திற்கு மக்கள் ஏற்படுத்திக் கொடுத்துள்ளனர். இதில் அது பெரிய வெற்றி பெறவேண்டும் என்ற எதிர்பார்ப்பும் அதிகம்.

இங்கு இலங்கையின் சர்வதேசரீதியான பலவீனத்தையும் மனங்கொள்ளல்தகும். சர்வதேச மூலதனச் சந்தையில் கடன் பெறும் சக்தியை இலங்கை அரசு பெருமளவில் கொண்டிருக்கவில்லை. அதனால் அபிவிருத்தி மூலதனத்திற்கு உலகவங்கி மற்றும் கடனுதவி ஸ்தாபனங்களில் அதிக அளவிற்கு தங்கி நிற்க வேண்டிய நிர்ப்பந்தமும், வெளிநாட்டு மூலதனத்தின் வரவும் அதன் முதலீட்டுத் தன்மைகளும் இன்னும் போதாத நிலையில் இருப்பதும் இத்தகைய தங்கி நிற்றலை அதிகரிக்க உதவுகின்றன.

இலங்கை அரசு ஒரு ஜனநாயக அபிவிருத்தி அரசாக மாற்றியமைக்கப்பட்டால் அது எத்தகைய தன்மைகளைக் கொண்டிருக்கும்? இதுபற்றி விவாதத்தில் பயன்தரும் சில அம்சங்களை இங்கு குறிப்பிடலாம்.

0 ஜனநாயக மயமாக்கல் இலங்கையின் சகல மக்களினதும் பிரதேசங்களினதும் பன்முகரீதியான அபிவிருத்திக்கு உதவும் வகையில் ஸ்தாபன மயமாக்கப்படல், வடகிழக்கு யுத்தம் நிரந்தரமாக முடிவு பெறுவதற்கான தீர்வும் அப்பிரதேச மக்களும் மூல வளங்கலும் அபிவிருத்திக்கு அணிதிரட்டப்படும் விதத்தில் உதவும் அமைப்புக்களை உருவாக்குதல்; (இலங்கை ஒரு பல்லின மக்கள் ஜனநாயகத்தைக் கொண்ட நாடாக உருப்பெற்று வளர உதவும் அரசியலமைப்புச் சீர்திருத்தம் இதற்கு அவசியம்.)

சமஷ்டி அரசியல் அமைப்பை, அபிவிருத்தி நோக்கங்களையும் கணக்கிலெடுத்து திட்டமிடல்; அரசு இனரீதியில் நடுநிலைமைத் தன்மையுள்ள ஸ்தாபனமாக இயங்குதல்.

0 இலங்கையின் சமூக பொருளாதார மாற்றம் பற்றிய ஒரு நீண்டகாலப் பார்வையுள்ள தலைமையும் அப்பார்வையைச் செயல்திட்டங்களாக மாற்றவல்ல, திறமைகளைக் கொண்ட சமூக பொருளாதார திட்டமிடலில் நிறுவனங்களும் இவற்றின் திறந்த ஜனநாயக போக்குகளும் (உதாரணமாக திட்டமிடல் மக்கள் அமைப்புகளின் பங்குபற்றல்) இத்திட்டமிடல் அரசு - சந்தைகள் - சமூகம் ஆகியவற்றின் உறவுகளைப் பற்றிய விளக்கத்தின் அடிப்படையில் அமைதல்.

0 இதன் உதவியுடன் உள்நாட்டு வெளிநாட்டு மூலதனத்தை துரிதமான பொருளாதார விருத்திக்கு உதவும் வகையில் வழிநடத்தல்; உற்பத்தி மூலதனத்தின் வளர்ச்சிக்கு உதவும் கொள்கைகளை அமுல்படுத்தல்.

0 மனித வளத்தின் விருத்திக்கும் தொழினுட்பத்தின் உள்வாரிப்படுத்தலுக்கு உதவும் முதலீட்டைச் செய்து துரித உற்பத்தி சக்திகளின் வளர்ச்சிக்கு உதவுதல் (விவசாய, கைத்தொழில் சேவை துறைகள்)

0 உற்பத்தித்திறனின் வளர்ச்சிக்கேற்ப உழைப்பாளரின் ஊதியம் உயர்ச்சி பெறுவதை உத்தரவாதப் படுத்தல்; தொழிற்சங்கங்களின் சுதந்திரத்தைப் பாதுகாத்தல்

0 பெருந்தோட்டத்துறையின் உற்பத்தி உறவுகளை ஜனநாயகமயமாக்கல், தோட்டத் தொழிலாளர்களுக்கு வீடு, நிலம் போன்றவற்றை சொந்தமாய் பெறும் உரிமைகளை வழங்கல். தோட்ட நிலங்கள் தனியுடமையாக்கப்படும் போது தோட்டத் தொழிலாளர்களாகும் சிறு உடைமை உற்பத்தியாளர்களாகும் சந்தர்ப்பத்தை வழங்குதல்.

0 சூழலைப் பாதுகாக்கும் சட்டங்களையும் விதிகளையும் அமுலாக்கல். இதில் மக்கள் அமைப்புகளுக்கு அதிகாரம் வழங்கல்.

0 பின்தங்கிய பிரதேசங்கள் சமூகக் குழுக்களுக்கு விசேட சலுகைகளை வழங்கி அவற்றின் விருத்திக்கு உதவுதல்.

இவை ஆகக்குறைந்த அம்சங்களில் அடங்கும். மக்கள் ஜனநாயக நிலைப்பாட்டிலிருந்து இந்த பட்டியலை மேலும் வளர்க்கலாம். இது பற்றி இங்கு விவரிக்காது. இக்கட்டுரைத் தொடருக்குப் பின் எழும் விவாதங்களின் போது எடுத்தாளலே எனது நோக்கம். அதிகாரப் பரவலாக்கலுக்கும் பொருளாதார அபிவிருத்திக்குமிடையிலான உறவுகள் பற்றியும் விவாதித்தல் அவசியம். இலங்கையின் பொருளாதார அந்தஸ்துக்கும் ஜனநாயகமயமாக்கலுக்குமிடையிலான முரண்பாடுகளையும் மேலும் ஆழப்பார்த்தலும் அவசியம். இவை பற்றி விவாதிப்போமாக.

**சமுத்திரன்**

## ஜனநாயக...

திலிருந்து கொழும்பிலுள்ள ஈ.பி.டி.பியின் தலைமை அலுவலகத்தில் பணிபுரியவென வந்துள்ளார். அவர் 'சேகர்'' அல்லது ''சூரி'' என அழைக்கப்பட்டார். பொலிஸாரினால் நடத்தப்பட்ட இரகசிய விசாரணைகள் மூலம் சூரியகுமாரன் கொட்டாஞ்சேனையில் வாழும் சுமதி என்ற இளந் தமிழ்ப் பெண்ணைத் திருமணம் செய்துள்ளதாகத் தெரியவந்தது. சூரிய குமாரனின் கடத்தலுக்குச் சில நாட்களுக்கு முன் இத்தம்பதிகளை முகத்துவாரம், கொட்டாஞ்சேனைப் பகுதியில் கண்டதாக அயலவர்கள் பொலிஸாரிடம் தெரிவித்தனர்.

பொலிஸாரின் தகவலின்படி, சூரியகுமார் ஈ.பி.டி.பி தலைமை அலுவலகத்திலிருந்து தனது வேலையிலிருந்து நீங்கியுள்ளார். ஈ.பி.டி.பியின் உள் இரகசியங்கள் வெளிவருவதைத் தவிர்ப்பதற்காகவே அவரது அழிப்புக்கு கட்டளையிடப்பட்டுள்ளது எனவும் பொலிஸார் கருதுகின்றனர்.

சூரியகுமார் நவம்பர் 01ஆந் திகதியன்று ஆமர் வீதியிலிருந்து கண்கள் கட்டப்பட்டுக் கடத்தப்பட்டதாகப் பொலிஸார் நம்புகின்றனர். அந்நபர் இரகசிய இடமொன்றிற்கு எடுத்துச் செல்லப்பட்டு 15 நாட்களாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். பின்பு திரும்பவும் ஒருமுறை கண்கள் கட்டப்பட்டு வாகனத்தில் வெள்ளவத்தை கடற்கரைக்குக் கொண்டு வரப்பட்டுக் கூரிய ஆயுதமொன்றினால் குத்தப்பட்டு கொலை செய்யப்பட்டுக் கற்பாறைகளுக்கு மத்தியில் வீசப்பட்டிருக்கிறார். அவரது கடத்தலின் போது சூரியகுமாரின் மனைவி கர்ப்பிணியாக இருந்துள்ளார்.

அந்நபர் சுடப்படாமல், குத்திக் கொல்லப்பட்டது தமிழ் இயக்கங்களின் மீது பொலிஸாருக்கு சந்தேகம் ஏற்பட்டு விடாதவாறு விசாரணையை திசை திருப்புவதற்காகவேயாகும் என பொலிஸார் கருதுகின்றனர். இதுவரை கொலை செய்யப்பட்ட ஆயுதத்துக்கு என்ன நடந்தது என்று கண்டறியப்படவில்லை. அது கடலுக்குள் வீசப்பட்டோ அல்லது கற்பாறைக்கு மத்தியில் மறைத்தோ வைக்கப்பட்டிருக்கலாம். பொலிஸார் இரு சந்தேக நபர்களையும் உண்மையைக் கண்டு பிடிக்க விசாரித்து வருகின்றனர்.

இக்கொலையில் வேறு மூன்று சந்தேக நபர்களுக்குச் சம்பந்தமிருப்பதாகத் தெரியவருகிறது. அவர்களையும், இக்குற்றச் செயலுக்குப் பாவிக்கப்பட்ட வாகனத்தையும் பொலிஸார் தேடி வருகிறார்கள்.

இதேவேளை மட்டக்களப்பிலும் ஈ.பி.டி.பி அலுவலகத்தில் கடமையாற்றிய அக்கரைப்பற்று பனங்காட்டைச் சேர்ந்த நந்தன் என்ற இளைஞர் சயனைட் உட்கொண்ட நிலையில் மட்டக்களப்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மரணமானார்.

இச்சம்பவம் நடைபெறுவதற்கு முதல் ஈ.பி.டி.பி தலைமை நந்தனை தீவுப்பகுதிக்குச் செல்லுமாறு பணித்தாகவும் அவர் அங்கு செல்ல மறுத்திருந்ததாகவும், அதன் பின்னரே இச்சம்பவம் நடைபெற்றதாகவும் தெரியவருகிறது.

தீவுப்பகுதி ஈ.பி.டி.பியின் திறந்த வெளிச் சிறைச்சாலையாக உள்ளதாகவும், தண்டனையின் பேரில் ஈ.பி.டி.பியால் அங்கு அனுப்பி வைக்கப்படுபவர்கள் மீண்டு வருவதில்லை என்றும் அத்தகவல்கள் மேலும் தெரிவிக்கின்றன.

**தகவல்: SUNDAY LEADER, நமது மட்டு நிருபர்.**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# இந்தோனேசியாவின் இரும்புப் பிடிக்குள் இரையாகிப்போன மேற்கு இரியான்!




**சிசைரோ**

ஆதியிலே 'நியூ கினியா' என்றொரு தீவு இருந்தது. இது உலகத்திலேயே இரண்டாவது பெரிய தீவாகவும் இருந்தது. பாதியிலே, அந்நியர் படையெடுப்பால் பங்கு போடப்பட்டது இத்தீவு. கிழக்குப் பகுதி ஆஸ்திரேலியாவினூடாகப் போய்ப் பிரித்தானியரைச் சேர்ந்து பின்னர் பாப்புவா நியூகினியா என்ற புதிய நாடாக உருப்பெற்றது. மேற்குப் பகுதி டச்சுக்காரரினூடாகப் போய் ஐ.நா.என்ற தரகர் கைமாறி இந்தோனேசியாவின் இரும்புப் பிடிக்குள் விழுந்தது. புதிய நாடு ஒன்று இருக்கவேண்டிய இடத்தில் இந்தோனேசியாவின் இன்னொரு மாகாணத்தைப் பார்க்க வேண்டிய துர்திர்ஷ்டம். ஆனால் யாரைக் குற்றஞ் சொல்லலாம்? விடைகாண இந்த ஆய்வினை மேற்கொள்வோம். இந்தோனேசியா, ஆஸ்திரேலியா, நெதர்லாந்து, பாப்புவா, நியூகினியா என்று பலரதும் பாவங்கள் குவிக்கப்படும் பூமியாக மேற்கு இரியான் இன்று பரிதாபமாகக் காட்சியளிக்கின்றது. இதற்குள்ளேதான் குற்றவாளியைக் குறிவைக்க வேண்டியுள்ளது. இன்று இங்கு மக்கள் தொகை 24 லட்சத்து 30 ஆயிரம். ஆனால் இதில் இரியான் மக்கள் 20 லட்சம் அளவிலேயே உள்ளார்கள்.

ஏராளமான ஆதிவாசிகளின் பிரிவுகளும் பல்வேறு வகையான வழக்காறுகளும் கொண்ட மக்கள் வாழ்ந்த தீவு நியூகினியா. இதனுடைய பழைய பெயர் 'எமாலுக்காஸ் தீவு' என இருந்திருக்கலாம் என்கிறார்கள் ஆய்வாளர்கள். ஏறக்குறைய 1,000 வகையான மொழிவழக்கு இத்தீவில் நிலவுவதாகவும் நம்புகிறார்கள். நரமாமிசம் சாப்பிடுபவர்களும் வெளியுலகு பற்றிய அறிவேதும் இல்லாதவர்களும் இங்கு இன்னும் வாழ்கிறார்கள் என்பது ஊர்ஜிதமாகியுள்ளது. அபிவிருத்தி இவர்களை எட்டக்கூடாது என்பதில் அக்கறையுள்ள சக்திகள் அநேகமாக இருப்பதால் இத்தீவின் மேற்குப்பகுதி மக்களுக்கு தாம் யாரால் ஆளப்பட்டோம், இப்போது யாரால் ஆளப்படுகின்றோம் என்பதுகூடத் தெரியாதிருக்கின்றது. அதைத் தெரிந்து கொள்ளும் அக்கறை கூட அவர்களுக்கு இல்லை. பன்றிக் கொழுப்பைப் பூசிக் குளிரிலிருந்து மேனியைப் பாதுகாக்கிறார்கள். இயற்கையான மலையரண், சகதியான நிலம், அடர்ந்த காடுகள் என்பவற்றால் எல்லாவித ஊடுருவல்களையும் தடுத்து நிற்கும் இப்பிரதேசம் இந்தோனேசியாவின் இரும்புப் பிடிக்குள் சிக்கியபோதும் இன்னும் குற்றுயிராய்க் கிடந்து சுதந்திரக் காற்றைச் சுவாசிக்கும் வேட்கையை வெளிப்படுத்தி வருகிறது.

போர்த்துகேயர், ஸ்பானியர், டச்சுக்காரர், பிரிட்டிஷார், பின்பு ஜேர்மனியர் என்று வெள்ளைத் தோலுள்ளவர்கள் காலத்துக்காலம் சுற்றிவந்த பகுதியாக இந்தத் தென்கிழக்காசியப் பிரதேசம் விளங்கிய போதிலும் 'நியூகினியா' என்ற தீவில் அரசாங்கம் அமைக்கும் எண்ணம் இவர்களில் எவருக்குமே இருந்திருக்கவில்லை. தீவின் கரைகளில் வர்த்தகர்கள் இறங்கிச் சென்றிருந்தாலும் ஐரோப்பிய அரசுகள் தீவின் மீது ஆதிக்கஞ் செலுத்தும் விருப்பைக் காட்டவில்லை. ஆயினும் முதன் முதலில் டச்சுக்காரர் 1848இல் இத்தீவின் கரையோரங்களை உள்ளடக்கியதாகத் தமது எல்லைகளைப் பிரகடனப்படுத்தினர். கிழக்கிந்தியத்தீவுகளான சுமாத்ரா, யாவா, பாலி, புளோரஸ், சுளவெசி, மொலுக்காஸ் என்பவற்றுடன் சேர்த்து நியூகினியாத் தீவின் மேற்குக் கரைகளையும் உள்ளடக்கியதாகத் தமது டச்சுக்கிழக்கிந்தியத் தீவுகள் அமைந்துள்ளதாக டச்சுக்காரர் பிரகடப்படுத்தினர்.

போதுமான வளங்கள் கொண்ட பிரதேசமாகவும் இன்றும் உலகில் முழுதாக ஆராயப்படாத நிலப்பகுதியாகவும் அமைந்துள்ள இந்த மேற்குத் தீவினுள் டச்சுக்காரர் அதிகதூரம் செல்லவில்லை' கரையாரச் சிறு நகரங்களையும் துறைமுகங்களையும் அமைத்ததோடு நின்று விட்டனர். பின்னாட்களில் இப்பகுதியை திறந்தவெளிச் சிறைச்சாலையாகவே டச்சக்காரர் பயன்படுத்தினர். இந்தோனேசியாவில் சுதந்திரம் கோரிப் போராடிய தேசியவாதிகள் பலர் இங்கு கொண்டு வந்து அடைக்கப்பட்டனர். ஆக, எவ்வித அக்கறையுமின்றி ஏனோ தானோவென்று டச்சுக்காரர் கையகப்படுத்திய பகுதி பின்பு மேற்கு இரியான் என்று பெயர் பெற்றது. இதன் பின்னர் சிறிது காலத்துக்குள்ளாகத் தீவின் வடகிழக்குப் பகுதி ஜேர்மனியின் கைகளில் வந்தது. குயின்ஸ்லாந்திலிருந்த (ஆஸ்திரேலியா) பிரிட்டிஷாரின் முகவர், எங்கே தென்கிழக்கு நியூகினியாவும் ஜேர்மன் வசம் போய்விடுமோ என்ற அச்சத்தில் 1883 இல் அப்பகுதியைப் பிரிட்டனின் ஆள்புலமாகப் பிரகடனப்படுத்தினார். இதை இலண்டன் கூட அப்போது விரும்பியிருக்காமல் தனது முகவரின் செயலைக் கண்டித்ததாகவும் வரலாறு கூறுகிறது. ஆனால் பின்னர் அதுவே ஆஸ்திரேலியாவுக்கு இயற்கை அரணுமாயிற்று.

ஆஸ்திரேலியா என்ற புதிய நாடு உதயமானதும் நாம் மேலே குறிப்பிட்ட நியூகினியாத் தீவின் கிழக்குப் பகுதியை நிர்வகிக்கும் பொறுப்பைப் பிரித்தானியா சார்பில் அது ஏற்றுக் கொண்டது. (1901) பின்பு முதலாம் உலகப் போரில் தீவின் வடகிழக்குப் பகுதியையும் ஜேர்மனியிடமிருந்து ஆஸ்திரேலியா கைப்பற்றிக் கொண்டது. போரின் முடிவில் 'நாடுகள் அவை' உருவான போது ஆஸ்திரேலியா தீவிரப் பிரச்சாரஞ் செய்து தீவின் கிழக்குப் பகுதி முழுவதையும் தன்னோடு இணைத்துக் கொண்டது.

## முடிவிலிருந்து ஆரம்பம்

இப்போது 'நியூகினியா' என்ற தீவின் கதை முடிந்து புதிய கதை ஆரம்பமாகி விட்டது. தீவின் மேற்கே டச்சுக்காரர். கிழக்கே பிரிட்டனின் சார்பில் ஆஸ்திரேலியா அரசு. ஆனால் தீவின் ஆதிவாசிகள் தமது விருப்புப்போல் கிழக்கு - மேற்காக எல்லைகளைக் கடந்து உலாவிவர முடிந்தது. எல்லைக் காவல்களில் அதிக சிரத்தையைக் குடியேற்ற நாட்டு அரசாங்கங்கள் காட்டவில்லை. இரண்டாம் உலகப்போரில் யப்பானியர் தீவின் கிழக்குப் பகுதியில் இறங்கிவிட்டனர். பப்புவா நியூகினியாப் பிரதேசம் யப்பானியரிடமிருந்து மீட்கப்பட்டு - ஆஸ்திரேலியாவின் நீண்டகால அபிவிருத்திப் புறக்கணிப்பைத் தொடர்ந்து 1975 செப்டெம்பரில் பப்புவா நியூகினியா என்ற புதிய அரசாக மலர்ந்தது. சுதந்திரம் பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தும் எனப் பழமைவாதிகள் அச்சுறுத்ததிய போதிலும் பப்புவா நியூகினியாவில் அப்படியான மோதல்கள் எதுவுமே உருவாகவில்லை.

இன்று மேற்கு இரியான் என்ற மேற்குத் தீவும் பப்புவா நியூகினியா போன்ற புதிய நாடாக மாறியிருக்கலாம். அல்லது இரண்டுமே ஒன்றிணைந்து நியூகினியா நாடாக வந்திருக்கலாம். அல்லது அயலிலுள்ள மொர்லுக்காஸ் தீவுகளுடன் சேர்ந்து ஒரு கூட்டமைவாக (Federation) ஏற்பட்டிருக்கலாம். இந்த மூன்று தேர்வுகளுக்கும் மாறாக மேற்கு இரியான் ஏன் இந்தோனேசியாவிடம் சிக்கியது? இன்று மேற்கு இரியானின் சுதந்திர தாகம் பப்புவா நியூகினியாவுக்கு - வெளியுறவுப் பிரச்சினையில் முதலாமிடத்தில் உள்ளது. ஆஸ்திரேலியாவுக்கும் இதுதலையிடியே. தான் தலையிட வேண்டிவரும் என்பதை நன்கறிந்துள்ள ஆஸ்திரேலியா இயன்றளவுக்கு இந்தோனேசியாவுடன் ஒத்துப் போய்ச் சமாளிக்கவே விரும்புகிறது. காரணம் முன்பு பார்த்தோம்.

மேற்கு இரியான், உறவில் ஆஸ்திரேலியப் பக்கமே சாயல் கொண்டுள்ளதே தவிர இந்தோனேசியாவின் பக்கமல்ல. இங்கு வாழும் மக்கள் கறுப்பாகவும் அகன்ற மூக்குடையோராகவும் இருந்தாலும் இவர்களைப் பொதுவில் 'பாப்புவான்' என்ற பொதுக்குழுவினுள்ளேயே அடக்க முடியும். இஸ்லாமியர், கிறிஸ்தவர் என்பவர்களை விட பழைய மரபிலான வணக்க முறைகளையே மக்கள் பின்பற்றுகிறார்கள். இந்தோனேசிய மக்களுக்கும் இவர்களுக்கும் இடையில் எவ்விதத் தொடர்புமில்லை. அரசியல் ஊடுருவலைத் தவிர, மக்களின் விருப்பு என்ன என்று அறியப்படாமலேயே தீவு இந்தோனேசியாவின் ஒரு பகுதியாக்கப்பட்டது.

டச்சுக்காரரிடமிருந்து விடுதலை பெற்றுச் சுதந்திர நாடாகப் போகும் கிழக்கிந்தியப் பகுதிக்கு என்ன பெயர், எத்தனை தீவுகளை உள்ளடக்குவது என்ற பேச்சுவார்த்தை 1945 இல் நடந்தபோது மேற்கு இரியானை அதில் உள்ளடக்குவதா என்பதில் பலத்த கருத்து வேறுபாடிருந்தது. கலாசாரரீதியில் ஒருமித்த பகுதிகளை ஒன்றிணைத்துப் புதிய நாடு அமையட்டும் என்றனர் சிலர். இப்படிப் பார்த்தால் மேற்கு இரியான் உள்ளடங்காது. மலேசியாவின் சில பகுதிகளை உள்ளடக்க வேண்டியிருந்திருக்கும். ஆனால் சுகார்ட்டோவின் கருத்தில் டச்சுக் குடியேற்றப்பகுதிகள் முழுவதையும் அப் பிராந்தியத்தில் உள்ளடக்கியதாகப் புதிய நாடு அமைய வேண்டும். இதில் மேற்கு இரியானும் உள்ளடங்க வேண்டும். இறுதியில் சுகார்ட்டோவின் கருத்தையொட்டியே 'இந்தோனேசியா' உருவாக்கப்பட்டது. ஆனால் மேற்கு இரியான் பற்றிப் பின்னர் தீர்மானிக்கலாம் என்று ஒப்புக் கொண்டனர் டச்சுக்காரர்.

வளமிக்க இத்தீவினை விரைவில் அபிவிருத்தி செய்து தமக்குச் சாதகமான நாடாக மாற்றுவதற்குத் திட்டமிட்ட டச்சுக்காரர் 1949 இலிருந்து அதற்கான முயற்சிகளில் ஈடுபட்டனர். ஆனால் எதிர்ப்பு மூன்று பக்கங்களிலிருந்தும் வந்தது. நெதர்லாந்து, இந்தோனேசியா, மேற்கு இரியான் மக்கள் என மூன்று தரப்பினரும் நெதர்லாந்து அரசின் அபிவிருத்தி நடவடிக்கைகளை ஆதரிக்கவில்லை. அதிலிருந்து 'கைகழுவும்' நடவடிக்கை ஆரம்பமாயிற்று. இங்கு படையெடுக்கும் அறிகுறிகளையும் இந்தோனேசியா காட்டியது. இங்கு சுகார்ட்டோ கெட்டித்தனமாக இருமுனைத் தாக்குதல் கொடுத்தார். நாட்டுக்குள்ளே டச்சுக்காரரைத் தொல்லைப்படுத்தி அப்பிராந்தியத்திலிருந்து அகற்றும் முயற்சி ஒருபுறம் நடக்க, மறுபுறத்தில் ஐ.நா.வில் சிறிய நாடுகளின் உதவியுடன் அரசியல் போர் தொடுத்த அவர் இரண்டாவதில் எதிர்பாராத வெற்றியையும் பெற்று விட்டார். இங்கே நெதர்லாந்தை ஆஸ்திரேலியா ஆதரிக்க அமெரிக்கா கையை விரித்து விட்டது. மேற்கு இரியான் விரைவில் தனது கைவசமாகும் என இந்தோனேசியா திருப்திப்பட்டுக் கொண்டது. 1962 ஒக்டோபரில் நாடு ஐ.நா.வின் பொறுப்பில் ஒப்படைக்கப்பட்டது. 1963 மேயில் ஐ.நா. மேற்கு இரியானை இந்தோனேசியாவிடம் ஒப்படைத்தது.

நெதர்லாந்து சார்பில் ஐ.நா.ஒரு முக்கிய வாக்குறுதியளித்தது. 1969 இல் மக்கள் விருப்புக் கண்டறியப்பட்டு அதன் பின்னரே மேற்கு இரியானின் அரசியல் எதிர்காலம் தீர்மானிக்கப்படும் என்பது இந்த வாக்குறுதி. இந்தச் சர்வசன வாக்கெடுப்பை நடாத்தும் பொறுப்பு ஐ.நா.வையே சாரும். ஆதிவாசிகளின் தலைவர்கள் சிலரை அழைத்து அவர்களின் கருத்தைக் கேட்டு அதுவே அந்தந்தக் குழு மக்களின் கருத்தென்று இந்தோனேசியா அதிகாரிகள் வெளிக்காட்ட ஐ.நா.அவதானிகள் மௌனமாகி விட்டனர். இத்தேர்தல் மூலம் ஐ.நா. பலத்த கண்டனத்தை எதிர்கொண்டது. தேர்தல் முடிவை ஐ.நா.பொதுச் சபை 1969 நவம்பரில் உறுதிப்படுத்திய போது (30 நாடுகள் வாக்களிப்பில் கலந்து கொள்ளவில்லை) மேற்கு இரியானின் சுயநிர்ணய உரிமைக்கு கல்லறை கட்டப்பட்டு விட்டது.

## விடுதலைப் போராட்டம்

ஏற்கனவே இருந்து வந்த சில முணுமுணுப்புக்கள் முனைப்படைந்து 1963இல் சுதந்திரப் பாப்புவா இயக்கம் (OPM) என்பது உருவாகியது. உண்மையில் டச்சுக்காரருக்கு எதிராக ஆரம்பிக்கப்பட்ட இயக்கமாயினும் இந்தோனேசியாவின் இனவாதப் போக்கால் அதற்கு எதிரானதாக மாற்றம் பெற்றது. ஆனால் மேற்கு இரியானின் பூகற்ப அமைப்பு முறையால் இந்த இயக்கம் மக்களை ஒன்று திரட்டிப் பெரிய கிளர்ச்சி எதனையும் 1969இல் நடாத்த முடியாமற் போயிற்று. இந்தோனேசியாவில் ஆட்சிமாற்றம் ஏற்பட்டு சுகார்ட்டோ தலைவரானதும் மேற்கு இரியானில் அபிவிருத்தி வேலைகளைத் தீவிரமாக முன்னெடுத்தார். பாப்புவா நியூகினியா சுதந்திரம் பெற்று அங்கு குழப்பம் ஏற்பட்டால் அது மேற்கு இரியானுக்கும் பரவும் என்று அச்சப்பட்ட சுகார்ட்டோ ஆகக்கூடுதலான செலவுகளை 'இந்த மாகாணத்துக்கு' என ஒதுக்கினார். புதிய நாடான பாப்புவ நியூகினியாவுடன் எல்லைப் பேச்சுவார்த்தைகளையும் சமரசமாக நடாத்தி முடித்தார். இதனால் OPM இயக்கம் பாப்புவாவிலிருந்து பெற்றுவந்த ஆதரவும் அடைக்கலமும் வெகுவாகக் குறைந்து போயின.

ஆனாலும் போராட்டம் ஓயவில்லை. 1976 - 78 காலப்பகுதிக்குள் 3,515 இந்தோனேசியா இராணுவ வீரர்களும் 5,269 இரியத் தீவிரவாதிகளும் பொதுமக்களும் கொல்லப்பட்டதாகச் செய்திகள் கூறுகின்றன. 1977 செப்டெம்பரில் இந்தோனேசிய இராணுவ விமானமான DC3 ஐ கெரில்லாக்கள் சுட்டு வீழ்த்தியமை குறிப்பிடத்தக்கது. 1978 -யூலையில் இந்தோனேசியா இராணுவத்தின் சிரேஸ்ட அதிகாரிகளைச் சிறைப்பிடித்து அவர்களைப் பணயம் வைத்துச் சர்வதேச மகாநாடொன்றை நடாத்துமாறு வற்புறுத்தினர் கெரில்லாக்கள். ஆனால் பின்னர் இவர்கள் விடுவிக்கப்பட்டனர். மகாநாடு நடைபெறவில்லை.

பாப்புவா நியூகினியா மக்களில் கிராமவாசிகள் இரியான் மக்களின் சுதந்திரப்போரை ஆதரிக்கின்றனர். ஆனால் அரசாங்கம் பகிரங்கமாக ஆதரவு எதனையும் வழங்கவில்லை. மறுபுறத்தில் ஆஸ்திரேலியா இரண்டுங் கெட்டான் நிலை

→15

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# சமாதானம்! ஆம், ஜனநாயகத்துடன்!



'சமாதானம் - ஆம், ஜனநாயகத்துடன்' என்ற சுலோகத்துடன் மக்கள் சமாதான விழா அமைப்பாளர்களால் நடத்தப்பட்ட ஊர்வலத்தினதும் பொதுக்கூட்டத்தினதும் படங்களையே இங்கே காண்கிறீர்கள்.

கடந்த பத்து வருடங்களுக்கு மேலாக நீடிக்கும் இந்த யுத்தத்தை நிறுத்தி சமாதானப் பேச்சுவார்த்தைக ளினூடாக இனப்பிரச்சினைக்கு தீர்வுகாண வேண்டுமென்பதில் ஈடுபாடு கொண்ட பல்வேறு நிறுவனங்கள் ஒன்று சேர்ந்து இதனை ஏற்பாடு செய்திருந்தன. டிசெ.9ம் திகதியன்று காலை பத்து மணியளவில் காலிமுகத்திடலிலிருந்தும் பொரளை கெம்பல் மைதானத்தில் இருந்தும் ''யுத்தத்தை நிறுத்து'', ''யுத்தம் வேண்டாம்'', 'சமாதானம் இல்லையேல் யுத்தமல்ல; மீண்டும் சமாதானமே'' போன்ற சுலோகங்களுடன் புறப்பட்ட இரண்டு ஊர்வலங்களும் விகாரமகாதேவி பூங்காவின் திறந்த வெளியரங்கை வந்தடைந்தன.

ஊர்வலத்தின் முடிவில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் உரையாற்றிய மேர்ஜ் செயலாளர் ச.பாலகிருஷ்ணன் அவர்கள் ''இந்த இனமுரண்பாட்டை தோற்றுவித்தது சிங்கள பேரினவாத அரசாங்கங்கள் தான். எனவே அவை தான் இந்தப் பிரச்சினைக்கான தீர்வை முன் வைக்க வேண்டும். அதே வேளை இப் பேரினவாதத்தை எதிர்த்து எழுந்த தமிழ் மக்களின் போராட்டம் இன்று இனவாதப் போராட்டமாகி விட்டது. இது துரதிர்ஷ்டவசமானது'' எனக் குறிப்பிட்டார்.

யுக்திய ஆசிரியர் சுனந்த தேசப்பிரிய, எஸ்.மனோரஞ்சன், கலாநிதி சுமணசிறி லியனகே, பா.உ.வாசுதேவ நாணயக்கார, தர்மசிறி பண்டார நாயக்க உட்பட மற்றும் பலர் உரையாற்றினர்.

யுத்தத்திற்கெதிரான பாடல்கள், கலை நிகழ்ச்சிகள் ஆகியனவும் இக் கூட்டத்தின் போது இடம் பெற்றன.



## வெள்ளக்காடாகிய...

லமைப்பு வசதிகளை ஏற்படுத்த யாராவது முன்வருவார்களா? என்பதும் கேள்விக்குறியே.

### அமைச்சர் வருகை

இதற்கிடையில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்கு அமைச்சர் பௌசி அண்மையில் விஜயம் செய்து உடனடியாக 35 லட்சத்தை வெள்ள நிவாரணப் பணிக்காக ஒதுக்கியிருந்தார். நெதர்லாந்து அரசாங்கமும் கெயர் ஸ்தாபனத்தின் ஊடாக சில நிவாரணங்களை வழங்கியிருந்தது. அரசாங்க அதிபரும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களை நேரில் சென்று பார்த்தார். எல்லோரும் பார்க்கும் போது, தான் மட்டும் ஏன் சும்மா இருக்க வேண்டும் என்ற நினைப்பில் மட்டு.மேயர் செழியன் பேரின்பநாயகமும் வெள்ளம் பார்க்க தனது உத்தியோக உடையில் சென்று வந்ததோடு வெள்ள மதிப்பீட்டுக்குழு ஒன்றையும் அமைத்தார். மேயர் வெள்ள அனர்த்தங்களைப்பார்க்க வந்த போது ஒரு வயோதிபர் அவரிடம் கேட்டார். நீங்கள் உங்கள் அலுவலகத்தில் கடமையாற்றுபவர்களுக்கே ஒழுங்காகச் சம்பளம் கொடுப்பதில்லை. பிறகு ஏன் எங்களைப் பார்க்க வந்து ஏமாற்றமான எதிர்பார்ப்புக்களை எங்களில் ஏற்படுத்துகின்றீர்கள் என்று அதற்குப் பிறகு மேயர் வெள்ளம் பார்க்கப் போவதில்லை.

### நிவாரண முயற்சிகளில் ஒழுங்கீனம்

இவ்வளவு நிகழ்வுகளுக்கு மத்தியிலும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்படும் நிவாரணத்தை ஒழுங்காக வழங்குவதில் அரச சார்பற்ற நிறுவனங்களுக்கும், அரசாங்கத்திற்குமிடையில் சரியான ஒழுங்கமைப்புக்கள் காணப்படவில்லை. நெதர்லாந்து அரசாங்கம் மட்டக்களப்பில் கெயார் நிறுவனத்திற்கே வெள்ள நிவாரணங்களை வழங்க உதவி செய்திருந்தது. ஆனால் அவ் உதவிகள் அனைத்தும் தனக்கூடாகவே வழங்கப்பட வேண்டும் என மட்டக்களப்பு அரசாங்க அதிபர் ஏ.கே.பத்மநாதன் வலியுறுத்தியதோடு அவ்வாறு தனக்கூடாக வழங்கப்படாவிட்டால் நிவாரணப் பொருட்களை வழங்குவதற்கு எவ்விதமான உதவியும் தன்னால் தரப்படமாட்டாது எனக் கூறியதோடு மாத்திரமல்லாமல் உடனடியாக சகல பிரதேச செயலாளர்கள், கிராமசேவை உத்தியோகத்தர்கள் அனைவருக்கும் கெயார் வழங்கும் நிவாரணப் பொருட்கள் விடயத்தில் எவ்வித உதவியும் செய்ய வேண்டாம் என்று உத்தரவும் பிறப்பித்துள்ளார். இதனால் கெயார் நிறுவனம் உணவுப் பொருட்களை சரியாகப் பங்கிடமுடியாமல் தவிப்பதோடு சமயத்தில் உண்மையில் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவி கிடைக்காமலும் போய்விடுகின்றது.

யாரோ மனமிரங்கிக் கொடுப்பதைப் பகிர்வதற்கே தங்கள் அதிகாரத்தையும் பலத்தையும் பயன்படுத்தும் இவர்கள் எப்படி அபிவிருத்தியில் ஒன்றிணையப் போகின்றார்கள்.

### வடிகாலமைப்பு தேவை

எனவே இவற்றையெல்லாம் கருத்தில் கொண்டு வருடாவருடம் வெள்ளம் ஏற்படுவதும் அதற்கு நிவாரணமாக பெரும் தொகைப் பணம் அரசாங்கங்களினால் செலவிடப்படுவதும், அதைப் பகிர சண்டை பிடிப்பதும் என்ற நிலைமையை மாற்ற உரிய முறைப்படி **சரியானதொரு வடிகாலமைப்பு வசதியை ஏற்படுத்தித் தரவேண்டும்** என்பதே மட்டக்களப்பு வாழ் மக்களின் வேண்டுகோள்.

## தமிழ்த் தேசியவாதத்தின்...

பலரும் சிவஞான முனிவரின் மரபினுள் நின்று தமிழின் தனித்துவத்தைப் போற்றினர் என்பதைக் காணக்கூடியதாக இருக்கிறது. இலங்கைத் தமிழர்களிடையே தமிழ் மொழி, இனம் பற்றிக் காணப்பட்ட கருத்துக்களின் இரண்டாவது போக்கு என நாம் இங்கு குறிப்பிடுகின்ற கருத்தோட்டம் இந்திய சுதேசிய இயக்கத்தினுடைய செல்வாக்கின் வெளிப்பாடே என்பதை மனதிற் கொண்டே நாம் இதனை அணுக வேண்டும்.

சுதேச கைத்தொழில் விருத்தியும், சுயமொழிக் கல்வியுமே தேச விடுதலைக்கவசியம் எனும் இந்திய சுதேசிய இயக்கத்தின் கொள்கையைப் பிரதிபலிக்கும் வகையில் இக்கால கட்டத்தில் வெளிவந்த யாழ்ப்பாணத்தவரால் வெளியிடப்பட்ட (1900 -1916) பத்திரிகைகளில் காணலாம்.

''எம்நாடு மேலோங்குமா?'' (திராவிட கோகிலா - 1.4.1900) ''சுதேச பாஷா அபிவிருத்தி'' (இந்து பாலபோதினி- 15.10.1909), ''யாழ் குடிகளின் நிலையும் விருத்தியாக்கும் வகையும்'' (குருச் சந்திரபோகம் 1908 இதழ்களில் தொடர் ஆசிரிய தலையங்கம்) போன்ற பல தலைப்புகளை இக்கால கட்டத்தில் காணலாம். எனினும் இங்கு 'சுதேசம்' என்பது திட்டவட்டமாக யாழ். குடாநாட்டையே குறித்து நிற்கின்றது. (எமது சுவதேசமாகிய யாழ்ப்பாணத்துள்'' -இந்து பால போதினி ஆசிரியர் தலைப்பு 12.6.1909) தமிழகத்தில் பரவிய இந்திய சுதேசிய இயக்கத்தின் பிரிட்டிஷ் ஏகாதிபத்திய எதிர்ப்பானது யாழ்ப்பாணத்து மேற்கூறிய இரண்டாம் போக்கின் வழி நின்ற சில சைவ வேளாளர் மத்தியில் கிறிஸ்தவக் கல்வி எதிர்ப்பாகவும் பலங் கொள்கிறது. அதனால் தமிழ்க் கல்வி, தமிழ் அபிமானம் ஆகியவற்றை வலியுறுத்துவதாகவும் அமைகின்றது. யாழ்ப்பாணத்தில் அக்கால கட்டத்தில் காணப்பட்ட இவ்வகைத் தமிழ் உணர்வின் பிரதிபலிப்பை அன்றைய யாழ் பத்திரிகைகளில் பரவலாகக் காணக்கூடியதாக இருப்பினும், 1910இல் தொடங்கி வெளிவந்த **''விஜயலக்ஷ்மி''** எனும் பத்திரிகையில் சிறப்பாகக் காணலாம்.

## இந்தோனேசியாவின்...

யிலிருந்து வந்த போதிலும் தற்போது இந்தோனேசியாவுக்கு ஆயுத உதவி வழங்கும் நிலையிலுள்ளது. இது வியட்நாம் ஏற்படுத்திய அச்சமே. 1979 இல் சுகார்ட்டோ பாப்புவா நியூகினியாவுக்கு விஜயஞ் செய்தார். அங்கிருந்து கெரிலாக்களுக்கு உதவியெதுவும் வரக்கூடாதென உறுதி செய்து கொண்டு புறப்பட்டார். ஆனால் மேற்கு இரியான் - பாப்புவான் நியூகினியா எல்லைகள் முழுவதையும் காவல் செய்வது என்பது பாப்புவான் அரசாங்கத்துக்கு முடியாத காரியம்.

கெரில்லாக்களின் எண்ணிக்கை தற்போது ஆயிரம் மட்டுமே என வேறு நாட்டுப் பத்திரிகையாளர் கள் கூறுகின்றனர். இங்கிருக்கும் [illegible] உதவிகள் கெரில்லாக்களுக்கு உண்டென்று இராணுவம் நம்புகின்றது. தன்னுடைய வழமையான இனவாதப் போக்குடன் மேலும் வெறுப்பூட்டும் வகையிலான சுரண்டலையும் இந்தோனேசியா அரசாங்கம் இங்கு மேற் கொண்டுள்ளதால் போராட்டம் ஓய்ந்துவிடும் என்று நம்புவதற்கில்லை. இயன்றளவு இவ்விவகாரத்தை வேறுநாடுகள் விவாதிக்காதபடி தடுப்பதுதான் அரசாங்கத்தின் பிரதான நோக்கம். பாப்புவா நியூகினியாவுடனான எல்லைப் பிரச்சினையாக மட்டும் இதை நிறுத்திக் கொண்டால் போதும் என்பதும் அரசின் விருப்பமாகிறது.

ஏற்கனவே பார்த்ததைப் போன்று, இந்தோனேசிய இராணுவ அதிகாரிகளின் முதலீடுகள் இங்கும் பெருமளவில் உள்ளன. மேற்கு இரியானின் வளங்களை இரியான் மக்கள் பகிர்வதைவிட ஜகார்த்தாவிலுள்ளவர்கள் விழுங்க வேண்டும் என்பதிலேயே இராணுவம் கவனஞ் செலுத்துகிறது. சித்திரவதை ஆயுட்சிறை இரண்டுமே இங்குள்ளவர்களுக்குப் பரிசாகக் கிடைக்கிறது. மேற்கு இரியான் என்ற பெயரையே 'இந்தோனேசிய மயப்படுத்தி' இரியான் ஜாயா என்று வரைபடத்தில் குறித்தாயிற்று. மேற்கு இரியானின் சுயநிர்ணய உரிமையைக் காப்பாற்றவதில் ஐ.நா.மிகமோசமான தோல்வியைத் தழுவிற்று. அதனால் இரியான் மக்கள் இனவாத அரசின் கீழ் இன்று இறுதி மூச்சு விட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# வெள்ளக்காடாகிய கிழக்கு!

கடந்த 27 வருடங்களுக்குப் பிறகு மட்டக்களப்பு மாவட்டத்தில் வரலாறு காணாத மழை பெய்து வரலாறு படைத்திருக்கின்றது. மட்டக்களப்பில் உள்ள அனைத்து சிறிய, பெரிய நீர்பாசனக் குளங்களும் நிரம்பி வழிந்து உடைப்பெடுக்கும் அபாய நிலையில் அதன் அனைத்துக் கதவுகளும் திறந்து விடப்பட்டு பெருமளவு நீர் ஆற்றிற்கு விடப்பட்டது. தொடர்ச்சியாகப் பெய்த மழையினால் மட்டக்களப்பு மாவட்டம் முழுவதுமே வெள்ளக் காடாகக் காட்சியளிக்கின்றது. அகதி முகாம்களில் இருந்து அவல வாழ்க்கை வாழ்ந்த மக்கள் ஒருபுறம் இருக்கக் காணி இல்லாமல் கிடைத்த இடங்களில் குடில்களைக் கட்டிக் கொண்டு வாழ்ந்த ஏழைகள் மறுபுறம் என பல தரப்பட்ட மக்களை அடுத்தவேளைக் கஞ்சிக்கு வழியில்லாமல் அடித்து விட்டது பெருவெள்ளம்.

## வெள்ளக்காடான மாவட்டம்

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடலோடு தொடர்புடைய மூன்று வாவிகள் உள்ளன. மட்டக்களப்பு வாவி, வாழைச்சேனை வாவி, பனிச்சங்கேணி வாவி என்பனவே அவை. இவ்வாவிகள் மூன்று வருடத்தில் 10 மாதங்கள் கடலுடன் தொடர்புபட்டிருக்கும் ஏனைய இருமாதங்களிலும் மணலால் மூடப்பட்டு தொடர்பு அற்றுவிடும். மீண்டும் மழைகாலத்தின் போது வாவியில் நீர் மட்டம் உயர கடலுடன் தொடர்பு பட்டு மழை நீரை கடலுக்குச் செலுத்தும் நடவடிக்கையை மேற்கொள்ளும். ஆனால் இவ்வருடம் இம்மூன்று முகத்துவாரங்களும் மூடப்படாத காரணத்தினால் ஆரம்பத்தில் பெய்த மழை நீர் முழுவதுமே கடலைச் சென்றடைந்ததன் காரணத்தினால் வெகு விரைவாக வெள்ளம் வடிந்தோடும் தன்மை காணப்பட்டது. ஆனாலும் தொடர்ந்து பெய்த பெரு மழையினால் நீர்மட்டம் மேலும் உயர்ந்து கடலுக்குச் செல்லும் மழை நீரின் வேகத்தையும் தாண்டி மாவட்டம் முழுவதும் வெள்ளக்காடாகி விட்டது. இந்நிலையில் முகத்துவாரம் மூடப்பட்டு இருந்திருக்குமேயானால் வெள்ள அனர்த்தங்கள் மட்டக்களப்பு மாவட்டத்தை இன்னும் சிலவருடம் அபிவிருத்தியில் பின்நோக்கித் தள்ளியிருக்கும்.

## வருடா வருடம் இதே கதை

ஒவ்வொரு வருடமும் மழை பெய்வதும், மக்கள் இடம் பெயர்வதும், கால்நடைகள் நீரில் அடித்துச் செல்லப்படுவதும் நகரத்தின் அழுக்குகள் சகல கிராமங்களில் பரவுவதும் சாதாரண நிகழ்வாகக் கருதுவதும், அது தொடர்பாக சில பத்திரிகை அறிக்கைகளை விடுவதும், சில நிவாரணங்களை வழங்குவதோடு மழையும் நிற்க பிரச்சினையையும் கிடப்பில் போடுவது வழமையாகிப் போய்விட்டது.

இவ்வளவிற்கும் சரியானதொரு வடிகாலமைப்பு வசதி மட்டக்களப்பு மாவட்டம் முழுவதும் இருக்குமேயானால் வெள்ள அபாயத்தில் இருந்து தப்பித்துக் கொள்ள முடியும். ஆனால் அதே சமயம் அபிவிருத்தி என்ற பெயரில் செயற்படுத்தப்படும் திட்டமிடப்படாத சில நடவடிக்கைகளும் மட்டக்களப்பை வெள்ளம் பாதிப்பதற்கு முக்கியமானதொரு காரணி. குறிப்பாக தண்ணீர் வடிந்தோடுவதற்கு உரிய வடிகாலமைப்பு வசதிகள் செய்யப்படாமல் கட்டிடங்கள் கட்டப்படுவதும், சுற்றுமதில் அமைப்பதும், புதியகுடியேற்றங்களை ஏற்படுத்துவதும் முக்கியமான காரணங்களாகக் குறிப்பிட்டுச் சொல்ல முடியும்.

இவ் வருடத்தில் ஏற்பட்ட பெரு வெள்ளத்தின் தாக்கத்தினால் மட்டக்களப்பில் படுவான்கரை விவசாயம் முற்று முழுதாகப் பாதிக்கப்பட்டுள்ளது. எவ்வளவோ கஷ்டப்பட்டு விதைத்த நெல் வயல்கள் அனைத்தும் வெள்ளம் காரணமாக அழிந்து விட்ட நிலையில் மீண்டும் விதைக்கவே வசதியற்று கைவிடப்பட்ட நெல் வயல்களும் ஏராளம். மட்டக்களப்பின் நெற் களஞ்சியம் என அழைக்கப்படும் படுவான்கரைப் பிரதேசத்திற்கே அடுத்த வருடத்தில் வெளி மாவட்டத்தில் இருந்துதான் சாப்பாட்டிற்கு அரிசி கொண்டு செல்ல வேண்டிய நிலையைப் பெருவெள்ளம் ஏற்படுத்தி விட்டது.

## வெள்ளத்திற்குப் பலி

வெள்ளத்தின் அகோரம் உயிர்களுக்கு உலை வைத்துள்ள நிகழ்வுகளையும் ஏற்படுத்தியிருக்கின்றது. வாழைச்சேனை பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள ஒரு பின்தங்கிய கிராமம் திகிலிவட்டை. இக்கிராமம் ஆற்றிற்கு மேற்கே இருக்கின்றது. கடந்த வாரத்தில் இக்கிராமத்தில் உள்ள தங்களது சேனைக்குச் சென்றுவிட்டுத் திரும்பிய ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 5 பேரும் வேறும் 6 பேருமாய் (கற்பிணிகள், குழந்தைகள் உட்பட) 11 பேரும் ஆற்றைக்கடக்கும் போது பெரு வெள்ளத்தில் மூழ்கி உயிரிழந்துள்ளனர். வழமையாக திகிலிவட்டையில் இருந்து ஆற்றில் நேரடியாகப் பயணம் செய்தால் 10 நிமிடங்களில் ஆற்றின் அக்கரையான சந்திரவெளி கிராமத்தை அடைந்து விடலாம். ஆனால் பாதுகாப்பு படையினர் தங்கள் பாதுகாப்புக் கருதி இப்பாதையைத் தடைசெய்து ஆற்றில் குறைந்தது 1 மணித்தியாலம் பயணம் செய்து முறக்கொட்டாஞ்சேனை என்னும் இடத்தை அடையவே அனுமதித்திருந்தனர். இவ்வாறு நீண்டதூரப் பிரயாணமே இவ் உயிர்களைக் காவு கொண்டுள்ளது.

இவ் உயிர்களைப் பலிகொடுத்த துயரத்தில் பொதுமக்கள் இருக்கும் போது பயணம் செய்த 11 பேரில் ஒரு புலி இருந்திருக்கின்றது. அதனால் தான் அனைவரும் மூழ்கி இறந்து விட்டனர் என்று இராணுவம் கூறுகிறது. இவர்களுடைய வக்கிரமடைந்த மனோ நிலையை விபரிக்க இச்சந்தர்ப்பம் ஒன்றே போதும்.

இவ்வாறாகப் பல தாக்கங்களை ஏற்படுத்திய வெள்ளம் மிக மோசமாக வாகரை, வாழைச்சேனை, ஏறாவூர், மட்டக்களப்பு கிழக்கு, ஆரையம்பதி, காத்தான்குடி, களுவாஞ்சிக்குடி, வெல்லாவெளி, பட்டிப்பளை, வவுணதீவு ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளை தாக்கியுள்ளது. பொதுவாக இவ்வெள்ள அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்டு வீடு வாசல்களை இழந்தவர்கள் அனைவரும் மிகவும் கஷ்டப்பட்ட வறியவர்களாகவே காணப்படுகின்றனர். எனவே வெள்ளத்திற்கான பாதிப்பில் இருந்து தப்ப எடுக்கும் நடவடிக்கைகள் மறுபுறத்தில் இம்மாவட்டத்தில் உள்ள ஏழை மக்களுக்கு ஒரு விமோசனத்தை கொடுக்கும் நடவடிக்கையாகவும் அமையும். எனவே இவ் ஏழை மக்களின் விமோசனத்தைக் கருத்தில் கொண்டாவது முறையான வடிகா

→15

## சத்தியேந்திரா

## பழிவாங்கப்படும்...

கும். இந்த அபிப்பிராயமே இராணுவத்தினர், அண்டைய சிங்களப் பிரதேசத்தவர்களுக்கும், புல்மோட்டை முஸ்லீம்களுக்குமிடையே அதிருப்தி நிலவக் காரணமாகும். உண்மையில் அங்குள்ள முஸ்லீம்களில் சிலர் அதுவும் புலிகளின் பிரதேசத்து எல்லைகளில் இருப்பவர்கள் நிர்ப்பந்தமான நிலையில் புலிகளுக்கு உதவவேண்டிய தேவையிலிருக்கிறார்கள். தங்களது பாதுகாப்பான இருப்புக்காக அவர்களது வேண்டுகோளை தட்டமுடியாது நிறைவேற்றும் சூழலில் இருக்கும் அந்த அப்பாவி மக்களால் இந்த முழு ஊருமே இராணுவத்தினதும் குறிப்பாக பொலிஸாரினதும் அச்சுறுத்தலிலிருப்பது கவனிக்கத் தக்கதாகும்.

பொலிஸார் நடத்திய தாக்குதலில் இக்பால் என்பவரது வீடு, வீடியோ கடை, கொழும்பு சென்டர், சலாம் ஹொட்டல் (எவரெஸ்ட்) சென்ரல் ஸ்டோர்ஸ் - இந்தக் கடையினுள் சுமார் 12 இலட்சம் வரையாகன மீன்பிடி உபகரணங்கள் சேதமாக்கப்பட்டுள்ளது- ரபீக் ஹொட்டல் (இந்த ஹொட்டல் பள்ளிவாசல் காணிக்குள் இருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.) ஆனாலும் பள்ளிவாசலுக்கு எதுவித சேதத்தையும் ஏற்படுத்தவில்லை- போன்ற கடைகள் சேதமடைந்திருக்கின்றன. இதனால் 35-40 லட்சம் வரையில் நஷ்டம் ஏற்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

அதன்பின்னர் ''தலையாட்டி'' ஒருவர் மூலம் மூன்று பெண்கள் உட்பட சுமார் 22 பேரைக் கைது செய்திருக்கின்றனர். அதில் கிராம சேவகர் சுபைர் என்பவரும், ரஹ்மான் என்பவரும் கைதாகி இரண்டு நாட்களின் பின் விடுதலையாகியிருக்கிறனர். கைதான பெண்களில் இருவர் கடைகள் வைத்திருப்பதாகவும் அவர்கள் புலிகளுக்கு உதவுவதாகவும் கூறி கைது செய்திருக்கிறார்கள். அவர்களைக் கைது செய்யும் போது கூடவே அவர்களது கணவன்மார்களையும், பிள்ளைகளையும் கைது செய்திருக்கின்றனர். இவர்கள் அனைவரும் சுமார் இரண்டு தொடக்கம் ஏழு நாட்கள் வரை சிறைவைக்கப்பட்டு மேலிடங்களின் தலையீட்டினால் விடுதலையாகியிருக்கின்றனர். அதிலும் மனாப், பாறூக், ராசாமுஹம்மத் ஆகிய மூவரும் இதுவரை விடுதலை செய்யப்படவில்லை. இவர்களை புல்மோட்டைப் பொலிஸ் நிலையத்திலிருந்து கெப்பிடிகொல்லாவ பொலிஸ் நிலையத்திற்கு கொண்டு சென்றிருப்பதாகத் தெரியவருகிறது.

இந்தச் சம்பவத்தின் பின் புல்மோட்டை பிரதேசத்தவர்களது போக்குவரத்துடன் தொடர்புடைய அலுவல்கள் மிகவும் பாதிப்புக்குள்ளாகியிருக்கின்றன. திருத்தப்பட்டுக் கொண்டிருந்த புல்மோட்டை கெப்பிடிக்கொல்லாவ (தற்போதைய ஒரே போக்குவரத்துப் பாதை) பாதை வேலைகள் இந்தச் சம்பவத்தின் பின் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

தொடர்ந்தும் எல்லாவிதமான இன்னல்களுக்கும் அச்சுறுத்தல்களுக்கும் ஆளாகி வரும் புல்மோட்டைப் பிரதேசம் அரசியல் கவனிப்புக்கும் அவ்வளவு ஆளாகுவதில்லை. காரணம் அதன் தனிமைப்படுத்தப்பட்ட, கவனிப்பாரற்ற நிலைமையே. இப்பிரதேச மக்களுக்கு எது நடந்தாலும் எங்காவது போய் ஒட்டிக் கொள்ளவோ பாதுகாத்துக் கொள்ளவோ முடியாத நிலை தற்போது உருவாகியிருக்கிறது. இந்திய ராணுவம் இங்கிருந்த வேளையில் ஏற்பட்ட குழப்பநிலையின் போது இவ்வூர் மக்களில் அநேகர் வெளியூர்களுக்கு இடம் பெயர்ந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இரண்டு வகையான அச்சுறுத்தல்களிடையே மக்கள் அகப்பட்டு வாழ்ந்து கொண்டிருக்கும் புல்மோட்டை மீதான சகலரதும் அக்கறை இந்தச் சம்பவத்தின் பின்னாலாவது செயலுருவம் பெற வேண்டும். இந்தச் சம்பவத்தினை வைத்து அறிக்கைகள் விடுவதும் அரசியல் லாபம் தேடுவதும், நஷ்ட ஈடுகளை மாத்திரம் கோருவதும்தான் முக்கியமான பணிகளல்ல. ஒரு சமூகம் தனது சுய அடையாளங்களுடன் சுதந்திரமாக வாழ முடியாதவிடத்து எந்த வசதிகளும் நடவடிக்கைகளும் பயனளிக்கமாட்டா. முதலில் மக்கள் பாதுகாப்பாக சுதந்திரமாக வழி ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். அதற்கான சகல ஏற்பாடுகளையும் பொறுப்பானவர்கள் செய்து கொடுக்க வேண்டும். ஆகக்குறைந்தது திருமலை -புல்மோட்டை பயணப்பாதையைத் திறந்தாவது பேரின ஆதிக்கத்திலிருந்து அவர்களைப் பாதுகாக்கும் முயற்சியில் ஈடுபடலாம். இதற்கான உந்துதல்களை அப்பிரதேச மக்கள் ஒன்றுபட்டவர்களாக உரியவர்களிடத்தில் வழங்க வேண்டும். தாம் விரும்பியவர்களுக்கு வாக்குப் பெற்றுக் கொடுப்பதற்காக பிளவுபட்டு சண்டைப்பிடித்துக் கொள்ளும் மக்கள், தாம் சுதந்திரமாக பயமின்றி வாழ்வதற்காகவாவது ஒற்றுமைப் பட்டுக் கொள்ள வேண்டியிருக்கிறது.

ஒவ்வொருவனது மூச்சுக் குழாயும் இன்னொருவருடன் கையில் அகப்பட்டிருக்கும் அவலம் தீர வழியமைப்பது உண்மையான சுதந்திரமாகும்..

புல்மோட்டை மக்களுக்கு இருக்கிறதா அந்தச் சுதந்திரம்...!

## ஜனாதிபதியின் அதிகாரம்

சந்திரிகா குமாரணதுங்கவுக்கு எதிராக ஜே.வி.பியைச் சேர்ந்த அஜித் குமார தாக்கல் செய்திருந்த மான நஷ்ட வழக்கு விசாரணை டிசம்பர் 13ம் திகதியன்று கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

கடந்த செப்டம்பர் 9ம் திகதி (சந்திரிகா அரசாங்கம் ஆட்சிக்கு வந்து ஒரு மாதத்திற்குள்) பியகம சுதந்திர வர்த்தக வலய வேலை நிறுத்த போராட்டம் தொடர்பாக அன்றைய பிரதமர் சந்திரிகாவின் உரையில் தெரிவிக்கப்பட்ட தகவல்கள் ஜே.வி.பி. அஜித் குமாரவின் பெயருக்கு களங்கம் ஏற்படுத்தியதாக குறிப்பிட்டு மேற்படி வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

சந்திரிகாவின் சர்ச்சைக்குரிய அந்த உரையில் பியகம போராட்டத்துக்கு தலைமை தாங்கியவர் அஜித் குமார எனும் ஜே.வி.பி நபரென்றும் இவர் பாராளுமன்ற குண்டு வெடிப்பு சம்பவத்தில் குற்றஞ்சாட்டப்பட்டவரென்றும் குறிப்பிட்டிருந்தார்.

உண்மையில் பியகம போராட்டத்துடன் தொடர்புடைய அஜித் குமார என்பவர் வேறு ஒரு அஜித் குமார எனும் நபரே என்ற உண்மையை, ஆராயாது விடுத்த அந்த அறிக்கை தொலைக்காட்சியிலும் வானொலியிலும் அறிவிக்கப்பட்டது நாடறிந்த விடயம். சந்திரிகாவின் இந்த உரை தனது பெயருக்கு களங்கம் ஏற்பட்டிருப்பதாக கூறி அவருக்கு எதிராக 50 லட்சம் நஷ்ட ஈடு வழங்குமாறு கோரும் வழக்கொன்றை கொழும்பு மாவட்ட நீதிமன்றில் அஜித் குமார தொடுத்திருந்தார்.

ஆனால் சந்திரிகா இன்று நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக இருப்பதனால் இலங்கையின் குடியரசு அரசியலமைப்பின்படி 35(1) சரத்தின்படி அவருக்கு எதிராக வழக்கு தொடுக்கவோ தொடரவே முடியாது என்று கூறி நீதிமன்றம் அவ்வழக்கை தள்ளுபடி செய்வதாக தீர்ப்பு வழங்கியுள்ளது.

நாடறிந்த இந்த பகிரங்க விடயம் தொடர்பாக ஜனாதிபதி சந்திரிகா வருத்தம் தெரிவித்து கூட அறிக்கை விடுக்காதது அவரது நேர்மையீனத்தை வெளிக்காட்டுவதாகவும் நிறைவேற்று ஜனாதிபதி முறையை நீக்குவதை கோஷமாக வைத்து பதவிக்கு வந்தவர் இன்று அந்த பதவியை பயன்படுத்தி குளிர்காய்வது எல்லோரையும் முட்டாளாக்கும் செயல் என்றும் ஜே.வி.பியினர் தெரிவிக்கின்றனர்.

என்.எஸ்

சரிநிகர் (இரு வாரங்களுக்கொருமுறை) இதழ்.இல.18/2 அலோசாலை [illegible] சமத்துவத்திற்குமான இயக்கத்தின் சார்பில் வெளியிடுபவர் ச.பாலகிருஷ்ணன்.
அச்சுப்பதிவு: 334காலி வீதி இரத்மலானை நவமக அச்சகம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்